காவேரி

சர்வதாரி - சித்திரை

10 MAR 1949
MADRA
198057.

கட்டழகி தவமணி தேவி தன்
மே யை மிருதுவாகவும் மென்மையாகவும்
ருக்க லக்ஸ் டாய்லட்
பைத்தான் நம்புகிறுர்
அதிருபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருது வாக்க இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மைவாய்ந்த பூரணப் பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவருமல் 'சுத்தம் செய்து கொள்ளும்படி உபதேசிக்கிறுர்.
LUX
TOILET SOAP
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

198057

உங்களுக்கு குதூகலமும் செழிப்பும் நிறைந்த புத்தாண்டு உரித்தாகுக!

இப்போதுதான் வந்திருக்கின்றன

அழகான கலர்களில் அலுமுனியம் சாமான்கள் அதாவது பிளவர் வாஸ்கள், சோப், பவுடர் பெட்டிகள், தட்டுகள், டம்ளர்கள் ஸ்டாண்டுகளுடன் கூடியது. ஆஷ் ட்ரேகள், சுவற்றில் மாட்டும் அலங்காரப் பொருள்கள், டிரங்குகள் முதலியன.

•

PURE ALUMINIUM
M.A.E.N
GUARANTEED

கையால் செய்த எமது வார்பட அலுமுனியம் வீட்டுப் பாத்திரங்கள் மிக விசேஷமானவை

அங்கிகாரம் பெற்ற வியாபாரிகள்:

சூரியன் பிராண்டு

அலுமுனியம், பித்தளை செம்பு பர்த் ஸ்டேபிரைட் ஸ்டீல் சாமான்கள்

கிரௌன் பிராண்டு

அலுமுனியம் சாமான்கள்

எம். ஏ. எத்திராஜுலு நாயுடு

7/4, ஈவினிங் பஜார், மதராஸ்—3.

போன் 4106



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1949
MADRAS

விசேஷ சலுகை

மிகவும் குறைந்த விலையில் சிறந்த "ஸ்விஸ் மேக்" கைக் கடிகாரம். அனுபவ பூர்வமான திறமை வாய்ந்தது. மிக உயர்ந்த ரகக் கருவிகளால் ஆக்கப் பெற்றதும், ஒவ்வொன்றும் 3 வருடங்களுக்கு உத்தரவாதமுள்ளனவும் 'பிளாஸ்டிக் பாண்ட்' உடன் கூடியது.

No. 113—வளைவு வடிவம்.

பிரகாசமான க்ரோமியம் கேஸ்	...	Rs. 40/-
உயர்ந்த ரகம்	...	Rs. 45/-
ரோல்ட் கோல்ட் கேஸ் (10 வருட கியாரண்டி)	...	Rs. 60/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 75/-
15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட்	...	Rs. 90/-

No. 114—'டான்னோ' வடிவம்.

பிரகாசமான க்ரோமியம் கேஸ்	...	Rs. 42/-
உயர்ந்த ரகம்	...	Rs. 46/-
ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி)	...	Rs. 62/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 76/-
15 ஜுவல்ஸ் ரோல்ட்கோல்ட் கேஸ்	...	Rs. 92/-



No. 115—மெல்லிய தட்டை வடிவம்

க்ரோமியம் கேஸ்	...	Rs. 24/-
,, உயர்ந்த ரகம் (7 ஜுவல்ஸ்)	...	Rs. 30/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 38/-
,, ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி)	...	Rs. 75/-
,, வாடர் புருப் க்ரோம்	...	Rs. 75/-



No. 116—சமகோணச் சதுர வடிவம்.

க்ரோமியம் கேஸ்	...	Rs. 38/-
,, (உயர்ந்த ரகம்)	...	Rs. 42/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 65/-
,, ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி)	...	Rs. 85/-

ஸ்திரீகளின் கைக்கடிகாரம்

மேற்கண்ட எவ்வித வடிவிலும் கிடைக்கும் (12½% அதிகப்படி)

அலாரம் டைம்பீஸ்

Rs. 18/-. உயர்ந்த ரகம் Rs. 22/-

பாக்கிங், தபால் செலவு வேறு.

மேற்கண்டவற்றில் இரண்டு வகைகளுக்குஆர்டர் செய்பவர்களுக்கு தபாற்செலவு முதலியன இல்லை

PIONEER WATCH CO.

Post Box No. 11428, CALCUTTA.

Show Room 318A, Chittaranjan Avenue.

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப் படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா:—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7—0—0.

குஷ்டம், வெண்குஷ்டம்:—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைத்தியர்களால் குணப் படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3—0—0.

நரை மயிர் நிவாரணி:—ஆயுர்வேத முறையால் தயார் செய்யப்பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ. 2—8—0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ. 3—8—0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5—0—0.

N. B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லாவிட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறுர்:

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன், குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. ஸ்நானம் செய்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை, இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது.

Baidya Raj Brij Kishore Ram

RANIGUNJ P. O.

(BURDWAN)

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா & புதுக்கோட்டை சமஸ்தானம்
ராயல் டாக்கீ டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், மதுரை.

மலபார் உரிமைகள்: வர்மா பிக்சர்ஸ், திருப்பணித்துறை.
புக்கிங்குகளுக்கு: — சந்துரு பிலிம்ஸ், எர்ணாகுளம்.
ஆந்திராவுக்கு: — பூர்ண பிக்சர்ஸ், பெஜவாடா.

தமிழ் நாட்டின் பிரபல பத்திரிகைகளால் பாராட்டப்பெற்ற நூல்கள்

●

		ரூ.	அ.	பை.
1.	நமஸ்காரம் (சு. கி.)	2	8	0
2.	சிப்பாய் ஹிருதயம் (கு. கி.)	1	8	0
3.	வளர் பிறை (மாறன்)	3	0	0
4.	அபூர்வப் பிறவிகள் (மாறன்)	2	8	0
5.	மீண்ட சுவர்க்கம் (என். என்)	2	0	0
6.	ஐந்தருவி (சோமு)	1	0	0
7.	பிள்ளையார் சுழி (சாவேரி)	2	0	0
8.	புகழ்ச் செல்வர் (தி. ஜ. ர.)	3	0	0
9.	வாழப் பிறந்தோம் (சுப. நாராயணன்)	3	0	0
10.	வாழ்க்கைச் சித்திரம் (வ ரா.)	2	8	0
11.	ஜெயப்பிரகாஷ் நாராயண் (கொடுமுடி ராஜகோபாலன்)	3	0	0
12.	சோவியத் அரசாங்கம் (S. ஷண்முகம்)	1	8	0
13.	சைனு எங்கே போகிறது? (R. ராமநாதன்)	1	12	0
14.	மஹாத்மாவின் மணி மொழிகள் (N. R. பத்மநாபன்)	0	8	0
15.	ஓர்நாள் இரவு (முத்துநாராயணன்)	0	10	0

●

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம் — திருச்சி ஜில்லா.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25.

Telephone : South 308

Stockists:

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.

1948-ஆம் ஆண்டு

உங்களுக்கு

வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிட லாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

★

Shree
Swami Yogiraj Jyotish Asram,
C. K. PHAGWARA. (Kapurthala State)

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.

ஸ்ரீ கிருஷ்ணா மெட்டல் கம்பெனி

5/1, ஈவினிங் பஜார்

சென்னை-3

டிரேட் PURE ALUMINIUM JAI HIND S.K.M.Co GUARANTEED மார்க்

அழகு, அந்தம், உறுதி, பளபளப்பு
இவையனைத்தும் ஒருங்கே அமைந்த

ஆயிரக்கணக்கான

அலுமினியப் பாத்திரங்கள்

சலுகையான ஹோல்சேல் ரேட்டுகள்

நீங்கள் சென்னை வரும்போது உங்கள் வீட்டுக்கு வேண்டிய பாத்திரங்களை வாங்கி உங்கள் வீடுகளை அழகு படுத்துங்கள்.



★

A.V.S. டாப்பியோகா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாட்சி, மைகிராஸ் கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீட்சை செய்து நாணயமான டாப்பியோகா மாவு என்று ஸர்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஹல்வா, ஓமப்பொடி, சேமியா ஜவ்வரிசி, ரொட்டி, பிஸ்கெட். மிட்டாய் தினுசுகள் இன்னும் வேண்டிய பலகாரங்கள் தயாரிக்கலாம் உத்தரவாதத்துடன் அனுப்புகிறோம்.

ஸாம்பிளுக்கும் மற்ற விபரங்களுக்கும் எழுதுங்கள்.

★

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1949
MADRAS

உங்கள்
தேவைகளுக்கு

மதராஸ் பென்ஸில் பாக்டரி

ஸ்டார் ஆப் இந்தியா முதலிய பலரக
பென்ஸில்கள் தயாரிப்பவர்கள்

★

ஷோ & கம்பெனி

லெதோ - லெட்டர் பிரஸ் பிரிண்டிங் உயரிய
முறையில் பிரிண்ட் செய்துகொடுக்கப்படும்

★

V. பெருமாள் செட்டி & ஸன்ஸ்

உயர்தர ஸ்டேஷனரிகள் கிடைக்குமிடம்

★

5, ஸ்டிரிஞ்சர்ஸ் தெரு

G. T. மதராஸ்

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street, — G. T. MADRAS,

- நிச்சயமாகத் தவருது பலனளிக்கும் -
சில மருந்துகளை அறிமுகப்படுத்துகிரேம்

விமலா மாத்திரைகள் நெ. 1:

பலவீனம், நரம்புத் தளர்ச்சி, இதர நரம்பு, மனக் கோளாறுகள், ஸ்பெர்மடோரியா, தூக்கமின்மை, ஸ்வாசகாசம், மூல ரோகம், ரத்தக் கட்டிகள், கிரந்தி வீக்கம், புண், படை, ஸ்திரீகளின் மர்ம வியாதிகள், அஜீரணம், பிளவை முதலியவற்றை நிவாரணம் செய்யக்கூடியவை.

விமலா மாத்திரைகள் நெ. 2:

சகலவிதமான ஜ்வரங்கள், சூதக வாய்வுகள், கீல் வாய்வுகள், கபம், இடுப்புப் பிடிப்பு, குஷ்டம், துர்நாற்றத்துடன் கூடிய ரணங்கள், காதில் சீழ் வடிதல், பீனிசம், வீக்கம் முதலியவற்றிற்கு.

வெண் குஷ்டத்திற்கு மருந்து:

அநேக வைத்தியர்களால் குணப்படுத்த முடியாதென்று கருதப்படும் வெண் குஷ்டத்திற்கு இம் மருந்து உத்திரவாதமுள்ள சிகிச்சை அளிக்கிறது.

'எலீஷியம்' பாம்:

மெல்லியலாருக்கு ஏற்படக்கூடிய எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவதால் இதை ஸ்திரீகளின் உற்ற நண்பர், தோழன் என்று இதற்குச் சொல்லலாம்.

காச (ஆஸ்த்மா) நிவாரணி:

குறித்த காலங்களில் வருகிற காசநோயைக் கண்டிக்க இருவேளை மருந்தே போதும்.

அக்னி எண்ணெய்:

கீல்வாதம், சூலைக்கட்டு, தீவிரமான பக்ஷவாதம் முதலிய தீராதெனக் கருதப்படும் வியாதிகளை நிரந்தரமாக அக்னி எண்ணெய் நிவர்த்திக்கும்

கபக் கோளாறுகளுக்கு 'பேடண்ட்' மாத்திரைகள்:

இருமல், மார்ச்சளி, காசம் (ஆஸ்த்மா) முதலிய வியாதிகளை உடனே போக்கடிக்கும். தீங்கற்றவை ஆகையால் எந்நேரமும் எந்நிலையிலும் உபயோகிக்கலாம்.

இன்னும் அநேக அற்புதத் தயாரிப்புகள் உள. எங்கள் கேட்லாக்குக்கு எழுதவும். பிரதிநிதிகள் இல்லாத பிரதேசங்களில் ஏஜண்டுகள் தேவை.

KAVIRAJ N. C. MUKHERJI, Baidyasastri,
10, Fakir Haider Lane, Kalighat, Calcutta 26.

பொருளடக்கம்

சர்வதாரி மலர் 7 | சித்திரை இதழ் 9

புத்தாண்டு	12
சுதந்தர இந்திய ஜனதிபதி க. கணபதி	15
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் ராமய்யா	18
வெடி மருந்துகள் எஸ். ராமஸ்வாமி	22
சங்கப் பலகை	25
விமர்சனம்	27
நாடக சாலையிலே ரா. ஸ்ரீ. தேசிகன்	29
ஏடுகள் சொல்வதுண்டோ! விந்தியா	33
அலை மனம் வே. ரங்கராஜன்	43
சந்திர கிரஹணம் பி. எ. கிருஷ்ணமூர்த்தி	53
மார்த்தாண்ட வர்மன் டாக்டர் வே. ராகவன்	60
கலையும் காதலும் ஜி. எஸ். மணி	64
கம்பனும் சித்திரமும் வி. ஜி. ஸ்ரீநிவாசன்	69
நடன கலா கே. சுந்தரம்மாள்	73
மன மகிழ்ச்சி எம். எஸ். கமலா	83

குறிப்பு —: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

சர்வதாரி மலர் 7	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	சித்திரை இதழ் 9

புத்தாண்டு

இன்று புது வருஷப் பிறப்பு.

சென்ற ஆண்டில் தான் இந்தியா விடுதலையடைந்தது. கத்தியின்றி ரத்தமின்றி ஜனனமாயிற்று சுதந்திரம். ஆயினும் பாகிஸ்தான்—இந்தியா பிரிவினை சரித்திரத்திலேயே கண்டிராத கோர சம்பவங்களை விளைவித்தது. ரத்தப்பெருக்கு, லக்ஷக்கணக்கான மக்கள் கோர மரணம். ஏன்? பிரிவினையால் ஏற்பட்ட மத இன வெறியின் காரணமாக. லக்ஷக்கணக்கான மக்கள் சகலத்தையும் இழந்து ஊரை விட்டு ஊர் ஓடி, சுற்றத்தார் அனைவரையும் இழந்து, இன்று அகதிகளாகப் பரதவிக்கின்றனர்.

எனவே இந்தியா சுதந்திரம் அடைந்தது சென்ற வருஷம்தான் என்றாலும் லக்ஷக்கணக்கான மக்கள் அளவிலா அவதிக்குட்பட நேர்ந்ததை யாரும் மறக்க முடியாது. நாகரிகம் முற்றியுள்ள இந்த இருபதாவது நூற்றாண்டில் இத்தகைய சம்பவம் எதைக்குறிக்கிறது? நவீன நாகரிகம் என்பது அடிப்படை குண பாவங்களை மாற்றவில்லை. காட்டுமிராண்டி மனிதன் ஒவ்வொரு மனிதனுள்ளேயும் இன்னும் ஒளிந்துதான் கிடக்கிறான் என்பதை நன்கு தெளிவாக்குகின்றது.

காந்திமஹான் தலைமையின்கீழ் வெகு ஜாக்கிரதையுடன் அஹிம்சா முறையில் வெற்றிகாண முயற்சித்த நமக்கு இக்கோர சம்பவங்கள் ஓர் பெரிய படிப்பினையை அளித்திருக்கின்றன என்பதை மறக்கலாகாது.

எந்த மதவெறியின் காரணமாக இச்சம்பவங்கள் நிகழ்ந்தனவோ, எந்த வேற்றுமை உணர்ச்சியின் காரணமாக நேற்றுவரை சகோதர பாவத்துடன் வாழ்ந்து வந்தவர்கள் கத்தியை எடுத்து ஒருவருக்கொருவர் குத்திக்கொண்டார்களோ, அந்த அடிப்படை மனோ பாவத்தை நாம் மாற்ற முற்படவேண்டும். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மதம் தான் என்று பலர் பறை சாற்றுகிறார்கள். உண்மையில் மதக் கொள்கைகளில் பூரண நம்பிக்கையுள்ளவன் இக்கொடிய செயல்களில் ஈடுபடுவதில்லை. முஸ்லிம், சீக், ஹிந்து, எம்மதத்தினராயினும் சரி, இது உண்மை. ஆனால் ஒரு மதத்தினருக்குப் பிறந்ததின் காரணமாக 'அவனுடைய மதம் நிர்ணயிக்கப்படுவதினால், தன்னுடைய மதக் கொள்கையின் கருத்தை அறியாமலேயே அவன் வாழ்ந்து வருகிறான். அறிந்து கொள்ள வசதி யிருப்பினும், நவீன மனிதன் ஆசைப்படுவதில்லை. மனிதன் மதத்தைத் தழுவுவதற்குப் பதிலாக மதம் மனிதனைக் கவ்விக்கொள்ளுகிறது. சிறந்த கொள்கைகளைப் பரப்பி மனிதன் உய்ய வழிகாட்டுவதே மதத்தின் நோக்கம். என்றாலும் அநேகமாக வெகு சிலரே இவ்வழி நடக்கிறார்கள். மதம் பெரும்பாலோரை இவ்வழிபடரச் செய்ய முடிவதில்லை; ஆயினும் அவர்களிடையே ஓர் ஐக்கிய பாவத்தை, இன உணர்ச்சியை எழுப்பி விடுகிறது. எம்மதமும் இதைச் சாதித்து விடுகிறது. மதத்தின் அடிப்படைத் தத்துவத்தின்பேரில் மனிதரிடையே பாகுபாடுகள் உண்டாகுமானால் மதத்திற்கு மதம் பகைமை ஏற்படாது; மதத்தின் காரணமாக, கோரச் சண்டைகள் எழா. அதுதான் இல்லை. தத்துவங்கள் மறைந்து இன உணர்ச்சிதான் எஞ்சி நிற்கிறது. வேற்றுமை உணர்ச்சிக்கு

இடமளிக்கிறது. மதவெறி என்று சொல்வது இவ் இன உணர்ச்சிதான்; மதத்தின் கொள்கைகளின் தத்துவத்தை உணர்ந்து அதனால் ஏற்படும் வெறியல்ல.

எனவே இப்பூசல்களுக்கெல்லாம் அடிப் படைக் காரணம் இன உணர்ச்சி, மதக் கொள்கைகள் அல்ல. இவ்வின உணர்ச்சி, மதம் மனிதனைத் தழுவுவதினால் ஏற்படு கிறது.

தாய் வயிற்றில் நாம் கற்கும் பாஷை யின் மீது நமக்கு ஏற்படும் பாசத்தினா லும் இன உணர்ச்சி ஏற்படுகிறது. ஜாதி என்ற உட் பிரிவினையினாலும் இந்த உணர்ச்சி எழுகிறது.

வேற்றுமை உணர்ச்சி மேலிட மேலிட தேசத்தின் ஒற்றுமைக்கு ஹானி உண் டாகிறது. தேசத்தை ஒன்று திரட்டிப் பலப்படுத்தும் எந்தத் தலைவர்களும் இத் தகைய இனஉணர்ச்சிகளை ஓங்கவிடாது அவைகளுக்குப் பதிலாகத் தேச இன உணர்ச்சியை உண்டுபண்ண முயற்சிப் பார்கள். தேச இன உணர்ச்சியில் ஏனைய மத, பாஷா, ஜாதி பாகுபாடுகள் அழிந்துபோகும். இதுதான் தேச நல னைக் கருதும் எத்தலைவர்களும் முதலில் செய்யவேண்டிய காரியம்.

பிரிட்டிஷ் ஆட்சியில் நமக்கு ஒரே உணர்ச்சிதான் மேலிட்டுக் கிடந்தது—நமது அடிமை உணர்ச்சி. அதை அகற்று வதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்றோம். ஆனால் பிரிட்டிஷ் சூழ்ச்சி உட்புகுந்து நமது ஜாதி மத உணர்ச்சி களை அதிகப்படுத்திற்று. நாட்டின் பிரிவினையில் அது முடிந்திருக்கிறது. அது ஓய்ந்தபாடில்லை. தேசம் முன்னேற வேண்டும், உள் நாட்டுப் பூசல்கள் ஓயவேண்டும் என்ற நோக்கங்கொண்ட பல தேச பக்தர்கள், தலைவர் கள், நமது அரசாங்கத்தை மதப் பற்றற் றதாக அமைத்தால்தான் இதைச் சாதிக்க முடியும் என்று இந்திய பார்லிமெண்டில் தீர்மானித்திருக்கிறார்கள். நமது புதிய அரசியல் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையாக இது இருக்க வேண்டு மென்றும் ஓர் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

மத வெறியின் காரணமாக நாட்டில் ஏற்படும் பூசல்கள் குறைந்திருப்பினும், ஜாதி த்வேஷங்கள் குறையவில்லை. இது போதாதென்று, கம்யூனிஸ்டுகளின் பிரசாரத்தினால், ஓர் புதிய இன உணர்ச்சி, த்வேஷம், சிருஷ்டிக்கப்பட்டி ருக்கிறது: முதலாளி தொழிலாளி வேற் றுமை—பகைமை. தொழிலாளிகள் ஓர் இனம், முதலாளிகள் ஓர் இனம் என்று நாடு துண்டாடப்படுகிறது. தொழிலா ளியும் முதலாளியும் ஒரே உடலுடைய இரு புஜங்கள் என்ற உணர்ச்சிபோய் வேற்றுணர்ச்சி வலுத்துவிட்டது.

இது மட்டுமல்ல. 1920-ல் காங்கிரஸ் பிரிட்டிஷ் மாகாணங்களை, பாஷாவாரி யாகத் திருத்தி அமைத்தது. ஒரேபாஷை பேசும் மக்களைக் கொண்டு அவர்கள் பெருவாரியாக வசிக்கும் பிரதேசத்திற் குப் பெயரிட்டு ஓர் மாகாணமாக அதை அமைத்தார்கள். இதற்குப் பாஷாவாரி மாகாணங்கள் என்று குறிப்பிட்டனர். அன்றுமுதல் அந்தந்தப் பிரதேச பாஷா மக்கள் பிரிட்டிஷ் மாகாணங்களைத் திரு த்தி, பாஷா மாகாண ஆட்சி அமைக் கவேண்டும் என்று கிளர்ச்சி செய்து வருகின்றனர். ஸிந்துவும், ஒரிஸ் ஸாவும் பிரிட்டிஷாராலேயே பிரிக்கப் பட்டுவிட்டன. ஆனால் பாஷையை மட் டும் அடிப்படையாகக் கொண்டு அம் மாகாணங்களை வகுத்தார்கள் என்று சொல்ல முடியாது.

இப்பொழுது பாஷாவாரியாக மாகா ணங்களைத் திருத்தி அமைப்பதில் பெருத்த எல்லைப்புறச் சர்ச்சைகளுக்கு இடமுண்டாகிறது. பாஷையின் காரண மாக ஓர் வேற்றுமை உணர்ச்சி பொங்கி எழுந்து, பிற பாஷையினரை வேறு இனத்தவராகக் கருதி, பூசல்கள் உண் டாக்கப்படுகின்றன. தமிழர், ஆந்திரர் மலையாளி, கன்னடியர், மஹாராஷ்டிரர், குஜராத்தியர்—என்ற பாஷா—இன உணர்ச்சி மேலிட்டு, நாட்டின் அமைதி யைக் குலைக்கக் கூடுமோ என்ற ஐயமும் எழுகிறது.

இன உணர்ச்சிகளை ஒரு வகையில் அழிக்க முயன்று கொண்டிருக்கையில், இப்படி மற்ற வகையில் பாஷையின் காரணமாகவோ, அல்லது பொருளாதார

அமைப்பின் காரணமாகவோ அதை மேலோங்க இடமளிப்பது நாட்டின் ஐக்கியத்தைப் பலவீனப்படுத்தும் என்பதுதான் நமது அபிப்பிராயம்.

பாஷா வாரியாக மாகாணங்களைத் திருத்தி அமைக்கலாகாது என்று நாம் கூறுவதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. மாகாணங்களைப் பிரிப்பதில் பாஷை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு பிரித்தால் அது அனர்த்தத்தில் கொண்டுபோய் விடும்என்று தோன்றுகிறது. பிரிக்கப்பட வேண்டிய மாகாணங்களின் பொருளாதாரம், பூகோள அமைப்பு, தேசத்தின் ராணுவ வசதி, மக்களின் எண்ணிக்கை—எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து அமைத்தல் வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறோம். மாகாணங்களை ஒன்றுதிரட்டி ஒன்றோடொன்று நன்கு பிணைக்கப்பட்டிருந்தாலன்றி வேற்றுமை உணர்ச்சி தலைதூக்கி நாடுசீர்குலைந்துபோகும். பாஷா வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டவுடன் ஒரு மாகாணத்தில் மற்ற மாகாணத்தவருக்கு உத்தியோக வசதியோ, வியாபாரவசதியோ இல்லாமல் செய்யக்கூடாது என்ற விதி ஏற்படுத்தல் அவசியம். ஓர் சிறிய பாஷா வாரி மாகாணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்,—மலையாள மாகாணம். அப்பாஷாவாரி மக்கள் அனைவருக்கும் அம்மாகாணத்திலேயே வேலை முதலிய வசதி செய்து கொடுக்க இயலாது. பாஷை வேற்றுமை இன உணர்ச்சியின் காரணமாக, தமிழ் மாகாணத்திலோ அல்லது ஆந்திர மாகாணத்திலோ, அவர்களுக்கு உத்தியோக வசதி இல்லை என்று ஏற்பட்டால் அம்மாகாண மக்கள் மிகவும் அவதிப்படுவார்கள். பாஷாவாரிப் பிரிவினை ஏற்பட்டவுடன் மாகாண உத்யோகங்கள் அம்மாகாணமக்களுக்கே என்ற கட்சி வலுக்கும். அதைப் பிறகு தடுக்க இயலாது.

இத்தகைய செயற்கையால் ஏற்பட்ட பிரிவினைகள் நாட்டில் அதிகரிக்க அதிகரிக்க வேற்றுமையுணர்ச்சிதான் பலமடையும்; நாட்டின் ஐக்கியபாவம் பலவீனமாகிவிடும், சுதந்திர இந்தியாவைப் பலப்படுத்தாது, அதைச் சிதைக்க அடிகோலிய குற்றச் சாட்டிற்கு நாம் இலக்காவோம். இந்தியரனைவரும் ஒன்று என்ற இன உணர்ச்சி ஒன்றைத்தான் நாம் வற்புறுத்தவேண்டும். அதற்கே நாட்டில் இடமுண்டு. மற்ற இன உணர்ச்சிகள் அனைத்தும் அதற்கு முரணாகத்தான் காலக் கிரமத்தில் அமையும். எனவே இவ்விஷயத்தில் நமது தலைவர்கள் தீர்க்க தரிசனத்துடன் மாகாணப் பிரிவினை விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

சுதந்திர இந்தியாவில் ராணுவ அமைப்பில் மாப்ளா ரெஜிமெண்ட், மஹாராஷ்டிர ரெஜிமெண்ட், வங்காள ரெஜிமெண்ட் என்ற பிரிவினைப் பெயர்கள் கூட இருக்கலாகாது என்று வற்புறுத்த விரும்புகிறோம். பாஷாவாரிப் பிரிவினையை ராணுவத்திலும் புகுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறோம். பிரிட்டிஷ் ஆபீஸர்கள் இருந்தவரை அத்தகைய பிரிவினையினால் எத்தகைய பாதகமும் ஏற்பட இடமில்லை. இனி நம் நாட்டினரே ஆபீஸர்களாக இருக்கும்பொழுது ராணுவத்தில் பாஷா—இனப்பிரிவு அர்த்தமற்றதாவதுடன் தீங்கை விளைவிக்கக்கூடியது.

புதிய ஆண்டில் புதிய அரசியல் அமைப்பு அமுலுக்கு வரலாம். இந்திய மக்கள் ஒன்று பட்டு வாழ அது அடிகோலும் என்றும், சிதைவுக்குக் காரணபூதமாக உள்ள எத்திட்டத்தையும் அது ஆதரிக்காது என்றும் நம்புகிறோம். மதவெறியைஒழிப்பதில் முனைந்திருக்கும் நாம் வேறு இன வெறிகளை எழுப்ப இடமளிக்கலாகாது. மதமும், பாஷையும், ஜாதியும், பொருளாதார அமைப்பும், மனிதனை மனிதன் வெறுக்கும் அளவுக்குக்கொண்டு போகுமானால் அதற்கு அடிப்படைக்காரணம் அவையல்ல, மனிதனுடைய மிருகத்தன்மை, அறிவீனம் என்பதை உணர்ந்து பாஷா—ஜாதி—பொருளாதார வேற்றுமைகளைப் பெரிதாக்கி மனிதனுக்கு மனிதன் தீங்கு செய்யாமல், அவைகளைக் கொண்டு நாம் ஏகோபித்து நாகரிக வாழ்வு வாழச்செய்து கொள்வது நமது கடமை. இத்துறையில் சுதந்திர இந்தியர்கள் புத்தாண்டில் வெற்றி காணுமாறு இறைவனை வேண்டிக்கொள்ளுகிறோம்.

நமது தமிழ் அன்பர்களுக்கு எமது புது வருஷ வாழ்த்துகள்.

சுதந்தர இந்திய ஜனதிபதி

க. கணபதி

நிபுணர்கள் கமிட்டியில் தயாரிக்கப்பட்ட சுதந்தர இந்திய அரசியலின் நகல் திட்டம், பொதுமக்களின் பரிசிலணக்காகச்சென்ற மாதம் வெளியாயிற்று. இந்தத் திட்டத்தின்படி இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசாக இருக்கும். குடியரசின் தலைமை நிர்வாகியாக ஒரு ஜனதிபதி இருப்பார். நிர்வாக அதிகாரங்கள் எல்லாம் அவரையே சாரும். பிரஞ்சுக் குடியரசுத் தலைவரை விட இவருக்கு அதிக அதிகாரங்கள் உண்டு. எனினும் அமெரிக்க ஜனதிபதியைப் போல அவ்வளவு அதிகாரங்கள் கிடையாது.

இந்திய ஜனதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர் அரசியல் அமைப்புக்குக் குந்தகமாக நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டாலொழியச் சாதாரணமாக அவரை, பதவிக்காலத்திற்குள் யாராலும் நீக்க முடியாது. அமெரிக்கத் தலைவரின் காலம் நான்கு வருடம். பிரஞ்சுத் தலைவர் ஏழு வருடம் தொடர்ந்து பதவியிலிருக்கலாம். சுவிஜர்லந்தில் மூன்றே வருடங்கள் தான். அதற்கிடையில் சட்ட சபை கலைக்கப்பட்டால் அவரும் அத்துடன் போகவேண்டியது தான். சில தென்னமெரிக்க குடியரசுகளில் பதவிக் காலம் இரண்டு வருடம்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நிர்வாக அதிகாரம் பூராவும் பிரதம மந்திரியிடம் இருக்கிறது. அவருடைய பதவிக் காலம் ஐந்து வருடம் என்றாலும் அதற்கிடையில் பெரும்பாலான பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் நம்பிக்கையை இழந்து விட்டால், பதவியை விட்டு விலக நேரிடும். எனவே இந்திய ஜனதிபதி—பிரஞ்சுத் தலைவரைத் தவிர மற்ற நாட்டுத் தலைவர்களைவிட அதிக காலம் பதவியிலிருப்பார்.

நிர்வாகத் தலைவரின் பதவிக் காலம் நீடித்து இருந்தால்தான் நாட்டிற்கு நலம் என்பது அரசியல் அறிஞர்களின் கருத்து. குறுகிய பதவிக் காலமுள்ள தலைவர்களுக்கு, நாட்டின் நலத்திற்கான நீண்ட காலத் திட்டங்கள், வகுக்கவே சந்தர்ப்பமிராது. குறுகிய காலத்தில் போதிய அனுபவம் ஏற்படாது. தம் விசேஷத் திறமைகளை உபயோகிக்கவே அவகாசமிருக்காது. Prof Gilchrist சொல்லுவது போல, நிர்வாகத் தலைவர் திறமையுடன் அரசாங்கத்தை நடத்தவேண்டுமானல், அவரிடம் ஏராளமான அதிகாரங்களை ஒப்படைத்தால் மட்டும் போதாது. அதைத் திறம்பட உபயோகிக்கப் போதுமான காலமும் வேண்டும். எவ்வளவு தான் திறமைசாலியாக இருந்தாலும் இரண்டு—மூன்று வருடங்களில் பிரமாத்மாக எதையும் சாதித்துவிட முடியாது.

இந்திய ஜனதிபதியின் பதவிக் காலம் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் அதிலேயே அசைக்க முடியாதபடி தொடர்ந்து இருந்து கொண்டு, நாட்டின் நலனுக்குப் பாதகமாக நடந்து கொள்ளாதபடி மறு தேர்தல்கள் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்திய ஜனதிபதி ஒரே ஒரு முறைதான் மீண்டும் தேர்தலுக்கு நிற்கலாம். எனவே என்னதான் செல்வாக்குப் படைத்தவராக இருந்தாலும் தொடர்ந்து பத்து வருடங்களுக்குமேல் பதவியிலிருக்க முடியாது. இதைப் போன்ற கட்டுப்பாடு பெரும்பாலான நாடுகளில் கிடையாது. ரூஸ்வெல்ட் தொடர்ந்து நான்கு முறை பதவியிலிருந்ததும், இங்கிலாந்தில்கூட பீல், கிளாட்ஸன், டிஸ்ரேலி முதலிய பிரதம மந்திரிகளும் நீண்ட காலம் தொடர்ந்து பதவியிலிருந்ததும் யாவருமறிந்ததே.

எனினும் பதவிக் காலம் நீண்டிருப்பதால் மறு தேர்தலுக்குக் கட்டுப்பாடுகள் இருப்பது அவசியமே. இதை உத்தேசித்தே பிரான்சிலும், நம் நாட்டிலும் மேற்கண்டபடி கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்பட்டு, தங்கள் வாக்குரிமையை விவேகத்துடன் உபயோகித்தால் ஒரு தனி நபர் நீண்ட காலம் தொடர்ந்து பதவி வகிப்பது அசாத்தியமாகிவிடும். ரூஸ்வெல்ட்டின் உதாரணம் அசாதாரணமான—யுத்த காலத்தின் நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டதே. பதவியினுல் கிடைத்த அரசியல் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யாதபடி இந்தக் கட்டுப்பாடு உதவும்.

இந்திய ஜனதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒரு பிரதம மந்திரியின் தலைமையில் ஒரு மந்திரி சபை இருக்கும்.

பிரதம மந்திரியை ஜனாதிபதி நியமிப்பார். பிரதமரைக் கலந்துகொண்டு இதர மந்திரிகளையும் இவரே நியமிப்பார். மந்திரி சபையை நியமிப்பதில் திருப்தி கரமான முறைகளையும் நேர்மையான சம்பிரதாயங்களையும் அனுஷ்டித்தால் தலைவருக்கும் மந்திரி சபைக்கும் சுமுக மான உறவு வளரும். தலைவர்—பிரதமர், இருவருமே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத மனோபாவமுள்ளவர்களாக இருந்தால் குழப்பமும், அரசியல் நெருக் கடியும் அடிக்கடி குறுக்கிடும். நாட்டின் நலனுக்கே தீம்பாக வந்து முடியும். தம் சொற்படி நடக்கக் கூடியவரைப் பிரதம ராகத் தேர்ந்தெடுத்தால் ஜனாதிபதியே சர்வ அதிகாரமுள்ளவராக அரசு புரிய லாம். ஆனால், பார்லிமெண்டில் அதிக செல்வாக்குள்ளவரைப் பிரதமராக ஏற் றுக் கொண்டால் அவர் தலைவருக்கு அடங்கி நடக்க மறுக்கலாம். இந்த விபரீத நிலையில் 'இரட்டைச் சர்க்கார்' தான் நடக்கும். மேலும் சில சந்தர்ப்பங் களில் மந்திரிகள் ஜனாதிபதியைத் திருப்தி செய்வதா? பிரதம மந்திரிக்குக் கட்டுப் பட்டு நடப்பதா?—என்று இரு எஜ மானர்களுக்குக் கீழ் வேலை செய்யும் தர்ம சங்கடமான நிலைமையும் ஏற் படலாம். எனினும் அரசியல் விவேகமும், ராஜ தந்திரமும் உள்ள தலைவர்கள் நேர் மையான சம்பிரதாயங்களைக் கடைப் பிடிப்பதன்மூலம் சுமுகமாக அரசியலை நடத்தலாம். இதில் இன்னொரு விசேஷ அம்சம் என்னவெனில், பிரதமரும், ஏனைய மந்திரிகளும் பார்லிமெண்டுக்குப் பொறுப்பாவார்களே யொழிய ஜனாதி பதிக்குப் பொறுப்பாளிகளல்ல.

இந்தச் சமயத்தில் அமெரிக்க ஜனாதிபதி யின் மந்திரி சபையை ஒப்பு நோக்குவது நலம். அமெரிக்க ஜனாதிபதி பத்துப்பேர் கொண்ட மந்திரி சபையைத் தாமே நிய மித்துக்கொள்ளுகிறார். அவர்கள் காங் கிரஸ் அங்கத்தினர்களல்ல. காங்கிர ஸுக்குப்பொறுப்பாளிகளுமல்ல. நிர்வாக அதிகாரங்களை அவர்களிடம் ஒப் படைத்து அவர்களுடைய ஆலோசனை களை ஏற்றுக்கொள்வது வழக்கம். என்றா லும், அந்த ஆலோசனைகளை நிராகரிக் கவும் அவருக்கு அதிகாரமுண்டு, மேலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த மந்திரிகள், நிர்வாகத் திறமை கொஞ்சங் கூட இல்லாவிட்டாலுங்கூட, தமது அர சியல் கட்சிச்செல்வாக்கை உபயோகித்து, தம்மை இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக் கும்படி செய்வர்.

ஆனால் இதற்கு எதிரிடையாகப் பிரிட் டிஷ் மந்திரி சபை கூட்டுப்பொறுப்புள்ள சபையாக, ஒரே குரலில் பேசுகிறது. மந்திரிசபை பார்லிமெண்டுக்குப் பொறுப் புள்ளது. எனவே அமெரிக்காவைப் போலல்லாமல், உண்மையான செல்வாக் குள்ள, சிறந்த ஜனத்தலைவர்கள் மந்திரி களாக வருவதற்கு மார்க்கமிருக்கிறது.

பார்க்கப்போனால் இந்திய அரசியல் அமைப்பு, பிரிட்டிஷ் அமெரிக்க முறை களைக் கலந்து இணைக்கப்பட்ட ஒரு கலப்பு முறையாகவே தோன்றுகிறது. அமெரிக்காவிலுள்ளதுபோலவே இந்திய மந்திரிசபை ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும். பார்லிமெண்டிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு, பார்லிமெண்டுக்கே பொறுப்புள்ளவர்களாக இருப்பதால், வெறும் ஆலோசனை வழங்கும் சபையாக அதிகாரமில்லாமல் இருக்காது. எனினும் பிரிட்டிஷ் மந்திரிசபையைப்போல அவ்வ ளவு விரிவான அதிகாரங்கள் இதற்குக் கிடையாது. பிரிட்டிஷ் காபினெட்டின் அதிகாரத்தை வேறு யாருமே பகிர்ந்து கொள்வதில்லை.

இந்திய ஜனாதிபதி, மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். மேல் சபை, கீழ்சபை அங்கத்தினர்களில் சில ரைக்கொண்ட ஒரு குழு (எலெக்டோரல் காலேஜ்) தேர்ந்தெடுக்கும். பதவிக் காலம் முடிவதற்கு முன் அவரை நீக்குவதற்கும் பார்லிமெண்டிற்கு அதிகாரமில்லை. அமெரிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக் கும் எலெக்டோரல் காலேஜ் முறை இத னின்றும் மாறுபட்டது. அங்கே, ஒவ் வொரு மாகாணத்திலிருந்தும், காங்கிரஸ் சபையில் அந்த மாகாணத்திற்குள்ள பிர திநிதித்வத்தின் வீதாசாரப்படி, எலெக் டோரல் காலேஜ் நியமிக்கப்படுகிறது. பிரஞ்சுத் தலைவரைப் பார்லிமெண்டே தேர்ந்தெடுக்கிறது. ஆனால் சுவிஜர்லாந் தில் தலைவரையும் அவருடைய மந்திரி சபையையும் இரு சட்டசபைகளுமே சேர்ந்து தேர்ந்தெடுக்கின்றன. எனவே இந்திய முறை உலகின் பிற நாடுகளில் எங்கும் நடைமுறையில் இல்லை.

இந்தியத் திட்டத்தில் ஒரு உப தலைவ ருக்கும் இடம் இருக்கிறது. அவர் மேல் சபையின் அக்கிராசனராக இருப்பார். எதிர்பாராத காரணங்களால், பதவிக்

காலம் முடிவதற்கு முன்பே, ஜனாதிபதி ஸ்தானம் காலியாகிவிட்டால் உப தலைவரே ஜனாதிபதியாகிவிடுவார். ரூஸ்வெல்டுக்குப்பின் ட்ரூமன் பதவிக்கு வந்தது இந்தச் சம்பிரதாயப்படிதான்.

குடியரசு முறை, அமெரிக்க ஐக்கிய நாடுகள், தென்னமெரிக்க குடியரசுகள், பிரான்சு, சுவிஜர்லந்து முதலிய நாடுகளில் நடை முறையில் இருந்துவருகிறது. அவைகளிலுள்ள தவறுகளைத் தவிர்த்து சிறப்பியல்புகளையெல்லாம் திரட்டியெடுத்து, இந்தியத் திட்டத்தில் அமைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனினும் அரசியல் முறையே விசித்திரமானது. அந்தந்த நாட்டு மக்களின் இயல்பு, பண்பாடு, பாரம்பரியம். சரித்திரப்போக்கு, சமூக அமைப்பு முதலியவைகளுக்கேற்பவே அவை சிறப்புறும். தாவர வர்க்கங்கள் ஒரு நாட்டில் செழித்து வளர்ந்து பிரமாதமான பலன்தரும்.' ஏனைய நாடுகளில் வளரவே வளராது. அதைப்போலவே, ஒரு நாட்டில் மிகவும் வெற்றிகரமாக இயங்கும் அரசியல் திட்டம் மற்றொரு நாட்டிலும் வெற்றியுடன் இயங்கும் என்று திட்டமாகக் கூறுவதற்கில்லை,—என்பது ஒரு பிரபல அரசியல் அறிஞன் ஆராய்ந்து கண்ட முடிவு.

உதாரணமாக, ஸ்விஜர்லந்தின் அரசியல் உலகிலேயே தனித்து நிற்கிறது. எனினும் அந்நாட்டுமக்களின் விசேஷ இயல்புகளுக்கேற்ப அங்கே அதை வெற்றிகரமாகநடத்துவது சாத்தியமாகிறது. அங்கே நிர்வாக அதிகாரம் ஒரு தனி நபரிடம் குவிந்து கிடக்காமல், தலைவர் பெடரல் கவுன்சில் என்ற மந்திரிசபையுடன் பகிர்ந்து கொள்ளுகிறார். மற்ற மந்திரிகளைவிட இவருக்கு விசேஷ அதிகாரங்களும் கிடையாது. மந்திரி சபையையும் தலைவரையும், கீழ் சபை—மேல் சபை, இரண்டும் சேர்ந்து கூட்டாக இருந்து தேர்ந்தெடுக்கும். தலைவர் ஒருதடவைக்குமேல் பதவியிலிருக்க முடியாது. ஆனால் முதல் முறை உப தலைவராக இருப்பவரே அடுத்த தடவை தலைவராக வருவது சம்பிரதாயமாகிவிட்டது. இது போன்ற முறை வேறு எங்குமே காண்பதற்கில்லை.

மற்றொரு விஷயமும் நமது கவனத்திற்குரியதாகும். நாட்டின் அரசியலமைப்பு என்ன தான் சிறந்த முறையில் இருந்தாலும், தன்னலம், பதவிமோகம், ஆதிக்கவெறி, முதலியவைகளால் உந்தப்பட்ட பிற்போக்காளர்களின் கையில் அதிகாரம் சிக்கினால், சிறந்த அரசியல் திட்டங்களும் சீர் குலைந்துபோகும். அதற்கு மாறாக நாட்டின் நலனில் கருத்துள்ளவர்கள் நிர்வாகிகளாக வந்தால் அரசியல் திட்டம் குறையுள்ளதாக இருப்பினும் சிறந்த சம்பிரதாயங்களை வளர்ப்பார்கள். எனவே மக்கள் அரசியல் உணர்வு பெற வேண்டும். சிறந்த தலைவர்களைத் தேர்ந்தெடுத்து நாட்டின் நலனுக்கு வழிகோல வேண்டும்.



ஸ்டார் கம்பைன்ஸ்—''சம்சார நௌகா''வில் ஓர் காட்சி.

ராமய்யா

டில்லி நகரத்தைச் சாதாரணமாக. "சமாதிகள் நிறைந்த பட்டணம்" என்று வர்ணிப்பது வழக்கம். பழைய டில்லியில் கோரிகளும் சமாதிகளுமே எங்கும் நிறைந்துள்ளன. பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் பிரபுத்துவத்துக்கு முக்கிய பட்டணமாக விருந்ததால், டில்லியில் உயிர் துறந்தவர்களில் பலர் பெரியோராகவும், பிரபலமானவர்களாகவும் இருந்தனர். ஆதலால் ஒவ்வொருவருக்கும் ஒரு ஞாபகச் சின்னம் கட்டப்பட்டது சம்பிரதாயத்தின் முறையாயிற்று. இந்தக் காரணத்தால் டில்லியில் இடறிவிழுந்த இடமெல்லாம் சமாதிகளும் கோரிகளும் கட்டப்பட்டன; டில்லி பட்டணத்துக்கும் கோரிகளின் நகரம் (City of tombs) என்பதாகப்பெயர் வழங்கியது.

அதுபோலவே தென்னிந்தியாவில் பல பட்டணங்களுக்கு, சங்கு ஸ்தாபன நகரம் (City of Foundation Stones) என்கிற பெயர் கொடுத்துவிடலாம் என்கிறான் அம்மாஞ்சி. சென்னை மாகாணத்தில் பல நகரங்களில், காலி மைதானம் ஒவ்வொன்றிலும் ஒரு அஸ்திவாரக் கல் நடப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பிரேத அடக்கத்தின்மீது கட்டியிருக்கும் திண்ணையைப்போல் ஒரு திண்ணையும், அதின் ஒரு புறத்தில் சலவைக் கல் ஒன்றும், அதில் ஆங்கில பாஷையில் சிலா சாசனத்தின் மனோபாவ வர்ணனையும், கைங்கரிய கர்த்தாவின் பெயரும், ஸ்தாபன கர்த்தாவின் பெயரும், அச்சமயத்தில் அவ்வூரிலுள்ள அதிகாரிகளின் பெயரும் செதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சில சங்கு ஸ்தாபனங்கள் புதிய மெருகு அழியாமலிருக்கின்றன. ஆனால் பெரும்பாலும் அவைகள் பாழடைந்த மேடைகள் போலவே காணப்படும். சிலவற்றில் ஒரு புறத்தில் எருமைச் சாணி வரட்டி தட்டியிருப்பதையும் பார்க்கலாம். ஆகக்கூடி சங்கு ஸ்தாபன வைபவத்தால் விளைந்த பொது நலம் வரட்டி தட்டுவதற்குக் கிடைத்த இட அவகாசமே எனலாம்!

"ஸ்ரீமான் பலானபேர் உயர்தரக் கல்லூரி. அவருடைய அருமை மகன் ஸ்ரீமான் பலபட்டரை பெயர் முதல் ரூபாய் 25000, இந்த அஸ்திவாரக்கல் பலான தேதி, பலான மாதம், பலான வருஷத்தில், சென்னை மாகாண பலான இலாகா மந்திரி கனம் பலானவர் அவர்களால் நாட்டப்பட்டது.

சித்தாகுட்டி முனிசிபல் கமிஷனர்	மாயாகுட்டி டிவிஷனல் இன்ஸ்பெக்டர்
பெரியபுள்ளி முனிசிபல் சேர்மன்	குட்டிப்பையன் முனிசிபல் இஞ்சினீர்

வல்லியமிடுக்கன்
கண்டிராக்டர்"

இதுபோல, சலவைக் கல்லில் அழகாகச் செதுக்கப்பட்டிருப்பதை நாம் பலவிடங்களில் காணலாம். கண்டு களிக்கலாம். களிப்பு சுமார் பத்து, பதினைந்து வருஷங்களுக்குத் தாங்கவேண்டும். ஏனென்றால் சராசரி எங்கே பார்த்தாலும் மேற்கூறிய சங்குஸ்தாபனங் கல்கள் பல வருஷங்களாக மழையிலும் காற்றிலும் வெயிலிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நின்று வருகின்றனவேயொழிய, பெருகுவது கிடையாது. முற்றிலும் அழிவதும் கிடையாது. பொது மக்களும் அவைகளைக் கண்டு வெறுப்புக் கொள்வதும் கிடையாது. இதுதான் சகஜம் என்பதாக அவர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். வருஷா வருஷம் இலாகா அதிகாரிகள் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்களில் நகரப் பெருக்கை விஸ்தரிக்குங்கால், இரண்டு கல்லூரிகள், மூன்று ஆஸ்பத்திரிகள், ஒரு மார்க்கெட், ஒரு டவுன்ஹால், ஒரு லேடீஸ் கிளப், ஒரு லைபரரி, இவைகளுக்கெல்லாம், அஸ்திவாரக்கல் நாட்டிவிட்டதாகவும், பிளான்களும், எஸ்டிமேட்டுகளும் தயாரிக்கப்பட்டு, சிப் இன்ஜினீயர் ஆபீஸிலும், ஆர்கிடெக்ட் ஆபீஸிலும் பரிசோதிக்கப்படுகின்றனவென்றும், பட்ஜெட்டில் பணமொத்தம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதாகவும், வெகு

சீக்கிரம் இவையெல்லாம் கட்டப்படும் என்றும், கட்டுரைபோல் எழுதிவிடுவார்கள். இது நமது தேச ஆசாரம்; அதிலும் நமது மாகாணத்தில் முக்கியமான ஆசாரம்.

தமிழ் தேச மக்கள் அல்ப சந்தோஷிகளாயிருக்கலாம்; அதி சுலபிகளாகவுமிருக்கலாம்; சிறுகக் கட்டிப் பெருக வாழ் எனும் கொள்கையில் ஈடுபட்டவர்களாகவுமிருக்கலாம். ஆனால் அல்ப சந்தோஷி என்பதற்கு நூதன வியாக்கியானம் அவர்கள் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. மற்றொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பொழுது, சிறிய வஸ்துவாயிருந்தாலும், சிறிய அனுபவமாயிருந்தாலும், அதைப் பெற்றுக்கொண்டு திருப்தியை வெளிப்படுத்துவது மேன்மையான விஷயம்; அதற்குத்தான் அல்ப சந்தோஷம் என்பது. ஆனால் தற்கால பரிஸ்திதியில், தன்னால் ஆகக்கூடிய ஒரு பெரிய காரியத்துக்கு, வெகுசிறிய உதவியைச் செய்துவிட்டு, பொது மக்களும் அதிகாரிகளும் அதை அங்கீகரித்து, தனக்குப் பெரிய கௌரவம் கொடுக்க வேண்டுமென்பதாக அபிப்பிராயப்படும் தமிழன், அல்ப சந்தோஷி எப்படி ஆவான்? ஒரு லக்ஷம் முதல் பணம் வேண்டி இருக்கும் கால், அதில் கால் வாசிப்பணத்தை எடுத்துக் கொடுத்து, "பாக்குக் கப்பலில் பாதி பாக்கு என்னுடையது" என்று சொல்லும் ஒருவனைப்போல், தன்னுடைய சொல்ப கைங்கரியத்தினால் காரியம் முடிய வேண்டுமென்று கருதுவதல்லாமல், நன்கொடை முழுவதும் தனக்கே சேரவேண்டுமென்று அபிப்பிராயப்படும் தர்மகர்த்தாக்கள் தமிழ் நாட்டில் அதிகரித்து விட்டனர். ஆதலால்தான் சங்குஸ்தாபனங்கள் கட்டடங்களாக விருத்தி அடையாமல் இருந்துவருகின்றன. தர்ம காரியத்தில் ஈடுபட்டவர்கள் ஒவ்வொருவரும் பணத்தைவீசி எறிந்துவிட்டுச் சும்மா விருந்தால் காரியம் கைகூடாது என்கிற சிறிய விஷயத்தை இன்னும் தெரிந்து கொள்ள வில்லை. பணத்தை வினியோகம் செய்பவர்கள் அவ்வினியோகத்தை ஒரு விரயமாகவே கருதிச் செய்கிறார்களோ என்றும் கருத வேண்டியிருக்கிறது. மேல் நாட்டார்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசங்களில் முக்கியமானது ஒன்று இதுவே யாகும்! தர்மத்துக்காக மூலதனத்தை மேல் நாட்டான் ஒருவன் கொடுக்கும்போது, அந்தத் தனம் துரிதமாகவும் சரியாகவும் வினியோகமாகும்படி சடங்குகளை அவனே செய்து தீருவான். நம் நாட்டிலோ இந்தப்பொறுப்பு கிடையாது. "என்னால் செய்யக்கூடியது பண உதவி; மேல் நடக்கவேண்டிய காரியங்கள் முனிசிபாலிடியோ அல்லது கவர்மெண்டோ செய்துவிட வேண்டும்" என்கிற வாக்கு பல இடங்களில் நாம் கேட்கலாம்.

ஆகவே பொறுப்பு முழுவதும் அதிகாரிகளிடத்தில் விழுந்து விடுகின்றன. நமது தேசத்திலோ அதிகாரிகளின் அமுல்களைப் பற்றித்தான் சொல்லவேண்டியதே இல்லை!

எத்தகைய யோசனையும் குமாஸ்தாவிடமிருந்து மேல் அதிகாரியிடம் போவதற்குள் நூற்றுக் கணக்கான கட்டு திட்டங்களும் யோசனைகளும், அபிப்பிராய பேதங்களும் அவைகளுக்கு வேண்டிய சால்ஜாப்புகளும் கிளம்பிவிடும். ஜில்லா அதிகாரிகளிடமிருந்து மாகாண அதிகாரிகளிடம் சென்றபின் அங்கு ஏற்படும் நூதன தடங்கல்கள் பெருகுகின்றன. ஆகவே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து நமக்குக் கிடைத்த காரிய (adminstrative delays) நிர்வாகத்திற்குரிய தாமதமாகப்பட்டது, சேற்றில் அகப்பட்ட கால்களைப்போல், நம்முடைய வாழ்க்கையையே பாதிக்கின்றது. எத்தகைய புதிய இயக்கத்திலும், எவ்வளவு ஊக்கத்துடன் வேலை செய்ய அதிகாரிகள் வெளிவந்த போதிலும், நிர்வாக தாமதம் என்கிற படுகுழியில் விழுந்து, இயக்கங்களே குன்றிப் போகின்றன. சங்கு ஸ்தாபன மஹாத்மியத்துடனே வாழ்நாட்களை நாம் போக்கிக்கொள்ளுகிறோம்!

அம்மாஞ்சியின் அனுதாபம் இத்துடன் நிற்கவில்லை. அவன் சொல்லுவதாவது, இனி வரும் பத்து வருஷங்களுக்குச் சங்குஸ்தாபன கட்டுப்பாடு மசோதா ஒன்று அமுலுக்கு வர வேண்டும் என்கிறான். தற்சமயம் ஒவ்வொரு ஊரிலும் நாட்டி இருக்கும் அஸ்திவாரக்கற்கள் கட்டடங்களாகிவிடும் வரையில் புதிதாகச் சங்குஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்யலாகாது என்று மத்திய சர்க்காரே அமுலிட்டு, மாகாணங்களிலுள்ள மந்திரிகளுக்கு எச்சரிக்கையிட்டால் நலமா யிருக்குமல்லவா? நமது மாகாண மந்திரிகள் ஒவ்வொருவரும் தேச சஞ்சாரம் செய்யுங்கால், அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டுமே என்கிற சஞ்சலத்தால் அல்லவோ, பல அஸ்திவாரக்கற்கள் எழும்புகின்றன? வாஸ்தவத்தில் இது தான் மர்மம். "அய்யையோ, மந்திரி வருகிறாரே, நம்முடைய நகரத்தில் ஒருநாள் முழுவதும் தங்கப் போகிறாரே, ஏதாவது வைபவம் வேண்டாமா", என்று கருதி, ஜில்லா கலெக்டரும் ஜில்லா உத்தியோகஸ்தர்களும் முனிசிபல் சேர்மனும், கமிஷனரும் ஓடித் திரிந்து அலைந்து ஏற்பாடுகள் செய்கிறார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் உடைந்த எலக்ட்ரிக் ஸ்விச் (Switch) ஒன்றைப் புதுப்பித்து, "கல்லூரியின் கிழக்குப் பாகத்தில் புதிய ஸ்விச், ஒன்றை கனம் மந்திரி அவர்கள் ஏற்றி வைப்பார். அந்த விழாவிற்கு எல்லோரும் விஜயம் செய்யவேண்டும்," என்று பத்திரிகை

வெளியிடப்படும். முனிசிபல் ஆபீஸில் வர வேற்புப் பத்திரம் ஒன்று அளிக்கப்படும். நகரத்தின் நடுவில் ஒரு பொட்டை மைதா னத்தில் அஸ்திவாரக்கல் ஒன்று நாட்டப் படும். ஆஸ்பத்திரியில் இரண்டு தலை அணை களுக்குப் புதிய உறைகள் தைத்துப் போடப் படும். ஆற்றங்கரையில் தேசியக் கொடி மரம் ஒன்று நாட்டப்படும். சாயந்திரம் ஒரு டீபார்ட்டி நடைபெறும்; அதற்கப்புறம் இரண்டடிசதுரமுள்ள ஒரு இடத்தில் பார்க்கு ஒன்றை ஸ்தாபிதப்படுத்தி அங்கு ஒரு ரேடியோ திறந்து வைக்கப்படும். இரவு ஒரு இடத்தில் டின்னரும் (Dinner), அதற் குப் பிறகு ஒரு சினிமா கொட்டகையில் காந்திஜி மெமோரியல் பண்டுக்காகப் பண உதவி நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறும். இவை எல்லாம் கழிந்தபின் மந்திரி இரவு 12 மணிக்கு ரயிலேறும்பொழுது அவருக்கும் உடம்பு பேஜார், ஊரிலுள்ள உத்தியோகஸ் தர் பிரபலர் அனைவருக்கும் சரீரங்கள் பழம் பிழிந்ததுபோல் காணப்படும். ஆகக்கூடி நகரத்திலுள்ள பொதுமக்கள் மேன்மைப் பட்டது ஒன்றுமிராது! பத்து மாலைகள் செல வழிந்ததால் புஷ்ப வியாபாரிகள் பயன்பட் டிருப்பார்கள்! மின்சார மேஸ்திரிகளும் கொட்டகைபோடும் கூலி ஆட்களும் சந் தோஷப்பட்டிருப்பார்கள்.

நமது மாகாணம் செழிப்புடன் ஓங்கி வளர வேண்டும் என்கிற அபிப்பிராயத்தில் நமது மந்திரிகள் வேலைசெய்யும் பக்ஷத்தில், வருங் காலத்தில் அவர்கள் அனேக கட்டு திட்டங் களுக்கு ஈடுபடவேண்டும். சில்லறை வினி யோகங்களை ஆமோதிக்கமாட்டோம் என் பதாக வற்புறுத்திச் சொல்லவேண்டும்.

அஸ்திவாரக்கல் போடுவதாக ஏற்றுக் கொண்டால் முழுக் கட்டிடத்துக்கு வேண் டிய பணமும் புளூப்ரிண்டும் (Blue Print) சாமான்களும் தயாராக இருந்தாலொழிய, நிகழ்ச்சியில் பங்கு எடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட வேண்டும். மாகாணத்தின் ஆர சியலில் ஈடுபட்ட மந்திரிகள் அற்பமான கைங்கரியங்களை ஆமோதித்தால் பொது மக்களுக்கு விசாலமான அபிப்பிராயங்களும் அனுபவங்களும் குன்றிப்போகும் அல்லவா? குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப் படவேண்டுமென்பது தமிழகத்தில் ஒரு திவ் வியமான வசனம். நமது தேசத்தில் வறு மையும் கொடுமையும் அதிகம்தான்; ஆயி னும் செல்வப் பெருக்கு என்பது பலவிடங்க ளில் அபரிமிதமாக இருந்து வருகிறது. இந்தச் செல்வப் பெருக்கில் விபரீதமாக வழிந்து ஓடும் செல்வத்தையாவது தேசியப் பிரபுத்வம் கைப்பற்றி, அபேதவாத முறையில் வினி யோகம் செய்ய வேண்டுமென்பதே மத்திய சர்க்காரின் கொள்கை. அதற்குத்தக்கவாறு நடவடிக்கை எடுக்கவேண்டியது மாகாண மந்திரிகளுக்குத் தற்சமயம் முக்கியமான கருத்தாக இருக்கவேண்டும்.

இந்திய மக்களின் வேளாண்மை வெகு மேன்மைப்பட்டதென்றும், நமது தேசத்தின் தேர்ச்சியும் பழக்கமும் ஐயாயிரம் வருஷங்க ளாக உலகத்தார் அனைவராலும் புகழப்பட் டது என்றும், நமது மக்கள் ஆத்மஸம்பந்த மான வளர்ச்சியையே கைப்பற்றி யுள்ளார் என்றும் மேல் நாட்டாரைப் போல் கேவலம் ஜட சம்பந்தமான வாழ்க்கையில் நாம் ஈடு படவில்லை என்றும், நமது பெரியோர்கள் இன்னும் தோளைத் தட்டிக்கொண்டு கர்ஜிக் கின்றனர்! நமது தேசத்தில் பலவிடங்களில் மத ஜாதி சம்பந்தமான பாகுபாடுகளால் நடந்த அனியாயங்களைக் கண்ட பின்னும், அதின் மூலம் மகாத்மாஜி உயிர் இழந்த பின் னும், நமது பிராசீன வேளாண்மையைக்

பண்டித ஜவஹர்லால் நேரு
டாக்டர் நேருவாகிவிட்டார்!

(புது டில்லி பல்கலைக் கழகத்தார் பண்டித நேருவுக்கு D. Litt. பட்டமளித்துக் கௌரவித்தனர்.)

குறித்து நாம் ஜம்பப்படுவது சுத்த அதிகப் பிரஸங்கம் என்கிறான் அம்மாஞ்சி.

இராமாயணம், பாரதம், பாகவதம், இதிஹாஸ புராணம், சுருதி, ஸ்மிருதி, கீதை, குறள், நாலடியார், நளவெண்பா என்பவைகளில் எல்லாம் நாம் பெருமைப்படுகிறோமே ஒழிய, பழக்க ஒழுக்கத்தில் அவைகளால் ஒதுக்கப்பட்ட குப்பைகளையே நாம் பெரிதாகப் புகழ்கிறோம். சுதந்தரம் வேண்டுமென்று கரடிக் கத்தலாகக் கதறினோம். சுதந்திரம் வந்தபின் நமது தேசியப் பிரபுத்துவத்தில் அதிகாரம் வகிக்கும் தலைவர்களை எவ்விதத்திலும் மேன்மைப்படுத்தாமல் அவர்களுடைய அலுவல்களுக்கு இப்பந்திகளாகவே காணப்படுகிறோம். தர்ம காரியத்துக்குப் பணம் சேமிப்பதற்காக வருமான வரியில் வஜா கொடுக்கிறேன் என்று சர்க்கார் அதிகாரிகள் சொல்லவேண்டி இருக்கிறது! நம்முடைய நாட்டின் பெருமை இவ்வளவுதான்! கல்லூரிகளுக்கும் சர்வ கலாசாலைகளுக்கும் பணம் சேமிப்பதற்காக, சர்க்கார் நமது மாகாணத்தில் கடன் வாங்கப் போகிறார்களாம்! இதற்குக்கூடப் பொது மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை; இங்கிலாந்தில் சர்வகலாசாலைகள் முழுதும் தனவந்தர்களால் கொடுக்கப்பட்ட முதலைக்கொண்டு ஸ்தாபனமாயின. இத்தகைய பரிஸ்திதியில் நாம் ஜம்பப்படுவது எவ்வளவு ஏளனமாக இருக்கிறது என்று ஊகிக்கவேண்டும்.

* * *

தபாலாபீஸ்களில் வத்திப் பெட்டிகள் விற்பனை செய்வார்கள்போலிருக்கிறது. இதுவரை இந்த ஏற்பாடு அமுலுக்குவரவில்லை, அடுத்த மாதத்துக்குள் வந்துவிட்டால் அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களை யெழுதி ஒரு ஆள் மூலம்தான் கும்பகோணத்துக்கு அனுப்பவேண்டும்போலிருக்கிறது, கிரகசாரவசத்தால் ஒரு வத்திப்பெட்டியுடன் என்னுடைய கட்டுரை கலந்துவிட்டால், 'புஸ்' என்று போய்விடுமோ என்று பயப்படுகிறேன்! தபாலாபீசில் வத்திபெட்டி விற்கவும், காபி ஓட்டல்களில் ஸ்டாம்புகள் விற்கவும், சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் காபிப் பொடி விற்கவும், ரயில்வே ஸ்டேஷன்களில் துணி விற்கவும், இப்படியெல்லாம் மாறுதல்கள் ஏற்பட்டால் நூதனத் தொழிலில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் செவ்வையாகவே பணியெடுப்பார்கள் என்றுதான் தோன்றுகிறது. இதையும் பார்த்து விடலாமே!

தஞ்சாவூர் ஜில்லாவில் பருத்திச் செடி விருத்தியாக்கும்படி விவசாய இலாகா அதிகாரிகள் முயற்சிக்கிறார்களாம். காபிக் கொட்டை வளர்ச்சியும், பெருங்காயம் வளர்ச்சியும் அந்த ஜில்லாவில் செய்து விட்டால், வெளியூரிலிருந்து முக்கியமாக வேண்டிய வஸ்துக்கள் ஒன்றும் வரவொட்டாமல் "கழித்துக் கூட்டலாம்." எனக்குத் தெரிந்தவரை தஞ்சாவூர் ஜில்லாவுக்கு முக்கியமாகத் தேவையான வஸ்துக்கள், அரிசி, பருப்பு, காய்கறி, காபிக்கொட்டை, பெருங்காயம், புகையிலை. மயில்கண்வேஷ்டி இவைகள் தான். இவைகளெல்லாம் கிடைத்து விட்டால் எல்லோரும் ஆனந்தமாயிருப்பார்கள். பருத்தி வந்தால் புகையிலையும் கூட வரும். ஆகவே காபிக்கொட்டையும் காயமும் தான் தேவை.

வெடி மருந்துகள்



பட்டாஸ் என்றால் ஆசைப்படாத சிறுவர்களே கிடையாது. அதில் இருப்பதும் ஒருவகையான வெடி மருந்துதான். ஒரு ஆயிரம் பட்டாஸ் கட்டுகளைத் திடீரென்று வெடிக்கச் செய்தால் அந்த அதிர்ச்சியே பெரிய கட்டிடங்களையும் வீழச்செய்யும். சில வெடிமருந்துகள் நெருப்பு வைத்துக் கொளுத்தினால்கூட ஒன்றும் ஆகாது. ஆகையால் வெடிமருந்துகள் என்றால்தான் என்ன?

ஒரு சாமானைப் பல்வேறு சாதனங்களினால் ஊக்கப்படுத்தலாம். உதாரணமாக, நெருப்பைவைத்துக் கொளுத்தலாம். சம்மட்டியால் அடிக்கலாம். அல்லது உலோகங்களால் உராசலாம். இப்படி ஏதாவது செய்வதினால் ஒரு சாமானானது திடீரென்று பெரிய சத்தத்துடனும் அதிர்ச்சியுடனும் வாயுவாக மாறினால் அதை நாம் வெடி மருந்து என்று கூறலாம். திடீரென்று வாயுவாக மாறும் பொழுது நிறைய உஷ்ணம் உண்டாகிறது. உஷ்ணம் பதார்த்தங்களின் ஸ்தூல அளவை (Volume) அதிகப் படுத்தும் அல்லவா? ஆகையால் இந்த வாயுப்பதார்த்தமானது பலமடங்காகப் பெருகி மிகுந்த வேகத்துடன் பக்கத்திலிருப்பவைகளை

வீழ்த்த, பெரிய அலைகளாய்க் கிளம்புகின்றது. ஆகையால்தான் வெடிமருந்து வெடித்தால் பக்கத்திலிருப்பவர்களுக்கு அபாயம் ஏற்படுகிறது.

மிகப் பழமையான வெடி மருந்து "சீனு" வெடி எனச் சொல்லப்படும் கறுப்புப் பொடியே. இதை ஆங்கிலத்தில் துப்பாக்கி மருந்து (Gun powder) என்பார்கள். இது ஆதி காலத்தில் சீனு தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாம். இதற்கு முன்பும் இந்தியாவில் உபயோகத்தில் இருந்ததென்றும், இதற்கு அக்னி அஸ்திரம் என்ற பெயர் உண்டு என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். இங்கிலாந்தில் "பேகன்" என்பவர் இதைக் கண்டு பிடித்தார் என்று ஆங்கிலேயர் சொல்லுவதும் உண்டு.

இதில் 3 சாமான்கள் சாதாரணமாகக் கலந்து இருக்கின்றன. முதலாவது கரி, இரண்டாவது கந்தகம். மூன்ருவது பொடாசியம் நைட்ரேட் (Potassium Nitrate) என்கிற உப்பு. கரியும் கந்தகமும் வெடி மருந்தல்ல. பொடாசியம் நைட்ரேட் தான் இதில் முக்கியமான வெடி மருந்து. இந்த உப்பு பீகாரிலும், பஞ்சாப்பிலும் பூமியில் அகப்படுகிறது. ஆதிகாலம் தொட்டு இந்த உப்புகளைத் தண்ணீரில் கரையவிட்டு, மறுபடியும் காய்ச்சி, இங்கிலாந்திற்கு இந்தியர்கள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இவ்வுப்பைக் கொண்டு ஆங்கிலேயர்கள் வெடி மருந்து பண்ணி இந்தியாவை ஜயித்தார்கள் என்று நாம் நினைக்கலாம்!

இக்காலத்தில் இது அவ்வளவாக உபயோகத்தில் இல்லை. ஆனுலும் சிறிதளவு ராணுவத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது. இக்காலத்தில் துப்பாக்கியில் இருப்பது இந்த மருந்து அல்ல. இதனுடைய ஒரு அதம குணம் என்னவென்ருல், தண்ணீர் பட்டால் இது வெடிக்காது. இதைப்பற்றி ஒரு கதைகூட உண்டு. பிளாஸி யுத்தத்தின்பொழுது மழை பெய்ததாம். கிளைவ் முன் ஜாக்கிரதையாக வெடி மருந்தை ஜலம் படாமல் காப்பாற்றினராம். எதிர்க் கட்சியினருடைய மருந்து நனைந்து சுடமுடியாமல் போய் விட்டதாம். கிளைவின் பீரங்கிகள் வெகு சீக்கிரத்தில் எதிரிகளைச் சுட்டு வீழ்த்திச் சண்டையை ஜயிக்க முடிந்ததாம்.

வெடி மருந்துகள் ராணுவத்திற்கு மட்டும் அல்லாமல் பல்வேறு காரியங்களுக்கும் உபயோகப்படுகிறது. மலையைக் குடைந்து ரயில் போடவேண்டுமா, ஏதாவது ஒரு இடத்தை இடித்துத் தள்ள வேண்டுமா, விவசாயம் செய்யப் பூமியை நன்ருய்க் கிளரவேண்டுமா, அல்லது பாறைகளைப் பெயர்த்து எடுக்கவேண்டுமா—இப்படி எவ்வளவோ விதமான விஷயங்களுக்கும் வெடி மருந்துகள் உபயோகப்படுகின்றன. அப்படி உபயோகப்படும் வெடி மருந்துகளில் முக்கியமானவை டைனமைட் (Dynamite) என்று சொல்லக்கூடிய வெடிமருந்து.

ஆல்பிரட் நோபில் என்பவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவர் பெயரால் பல விஞ்ஞானப் பரிசுகள் உலகத்திலுள்ள அதிமேதாவிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவருக்கு அவ்வளவு பணம் சம்பாதித்துக் கொடுத்தது இந்த டைனமைட்தான்.

சோப்பு தயாராவது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? தாவர எண்ணெய்களைச் சோடா (Sodium Hydroxide) வுடன் கலந்தால் சோப்பு உண்டாகிறது. சோப்புபோக மீதியிருப்பது கிளிசரைன் (Glycerine) எனப்படும் திராவகம். இது மிக இனிப்பாக விருக்கும். இந்தக் கிளிசரனை அக்கினித் திராவகத்துடன் (Nitric Acid) கலந்தால் நைட்ரோ கிளிசரைன் (Nitro glycerine) எனப்படும் வெள்ளையான திராவகம் வெளிப்படும் (இதைச் சோதனை செய்யப் பிரயத்தனப்படவேண்டாம்! இதை மேலே சொன்னபடி கலப்பதற்கு முன் பல்வேறு முக்கிய விதிகள் உண்டு. அவைகளைக் கவனிக்காமல் செய்தால் இது வெடித்து ஆளையே பைசல் செய்துவிடக்கூடும். ஆகையால் பரம ஜாக்கிரதை!)

இந்த நைட்ரோ கிளிசரைன் சிறிது அதிர்ச்சி ஏற்பட்டாலும் வெடித்துவிடும். மேலும் இது திரவ ரூபமாய் இருப்பதால் ஆடி அலங்க அனுகூலமாய் இருக்கிறது. ஆகையால் நோபில் இதை ஒருவகை மண்ணில் உறிஞ்சப்பண்ணி முதல் டைன



Godrej गोदरेज گودرج
'CHAVI' BRAND

கோத்ரெஜ் சாவி மார்க்

டாய்லெட் (ஸ்னான) ஸோப்புகளால்
சுகாதாரம்—ஆரோக்யம்—அழகு

உங்கள் தேகத்தை சுத்தமாய் வைத்துக் கொள்ளவும், தேகாரோக்கியத்தை மிளிரச் செய்யவும், அழகின் நிரந்தரமான வசீகரமும் சுத்தமும் கூடிய தாவர எண்ணெய்களும் மூலிகை சாமான்களும் சேர்க்கப்பட்டு, அத்துடன் புஷ்பங்கள் பூத்துத் தொங்கும் வயல்களையும் பள்ளத் தாக்குகளையும் ஞாபக மூட்டக்கூடிய நறுமணம் வீசும் வாசனைகளும் சேர்க்கப்பட்டுள்ள கோத்ரெஜ் டாய்லெட் (ஸ்னான) ஸோப்புகள், சுத்தம் செய்யவும் உங்களுக்கு புத்தம் புதிய உணர்ச்சியைக் கொடுக்கவும் **இயற்கையான** சர்ம அழகை அளிக்கவும் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன.

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்.

மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வாதி

மைட்டைச் செய்தார். ஆனால் இப்போது மண்ணைவிட ஒருவகையான பஞ்சு நன்றாய் உறிஞ்சிக்கொள்கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட டைனமைட்டைத்தான் "பிளாஸ்டிங் ஜிலடைன்" (Blasting Galatine) என்கிறார்கள்.

இதற்கு அடுத்தபடியாய் முக்கியமாய் இருப்பது நைட்ரோ காட்டன் என்பது. இதைப் பஞ்சிலிருந்து செய்கிறார்கள். மேலே சொல்லப்பட்டவை ராணுவத்தில் அதிகமாக உபயோகப்படுகின்றன.

வெடி மருந்தின் ஒரு முக்கியமான குணம் இன்னும் மனிதனால் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது. அதைப் பற்றி இப்பொழுது கூறுவோம். மோட்டார் முதலியவைகள் எப்படி வேலை செய்கின்றன தெரியுமா? பெட்ரோல் எண்ணெய் (Petrol) ஒரு சிறிய துவாரத்தின் வழியாகச் சென்று, காற்றுடன் கலந்து வெடிக்கிறது, பட பட என்று. இந்த வெடிப்பினால் உண்டான அதிர்ச்சி, ஒரு பிஸ்தனை (Piston) தள்ளுகிறது. ஆகையால் கார் ஓடுகிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, மோட்டாரில் உள்ள ,என்ஜினுக்குள்ளும் ஒரு சிறிய நிகழ்ச்சி—அதாவது வெடி மருந்து வெடிப்பதற்குச் சமானமான நிகழ்ச்சி—நடைபெறுகிறது. ஆனால்அதைக்கட்டுப்படுத்தி, அந்தச்சக்தியைக் கொண்டு மோட்டாரை ஓட விடுகிறார்கள். இப்பொழுது பெட்ரோலுக்குப் பதிலாய் ஒரு வெடி மருந்தை உபயோகப்படுத்தினால் என்னவாகும்? மோட்டார்காரே தூள் தூளாய் விடும். இவ்வளவு ஆக்ரோஷத்துடன் வெடிக்கும் தன்மையைக் கட்டுப்படுத்தி அதனுடைய சக்தியைச் சிறிது சிறிதாக விடும்படி செய்ய இன்னும் விஞ்ஞானிகளால் முடியவில்லை. ஆனாலும் பெட்ரோல் எண்ணெய் வெடிப்பதும் வெடி மருந்து வெடிப்பதும் சாராம்சத்தில் ஒன்றுதான்.

இதைச் செய்து காட்டி, இச் சக்தியை உலகத்திலுள்ள ஜனங்களின் நன்மைக்காக விநியோகப் படுத்துவதற்கு, ஒரு விஞ்ஞானி இந்தியாவில் பிறப்பானா?

சங்கப் பலகை

நாவலந்தீவு,
வசுந்தரா,
கலியுகம்.

சத்தியலோகத்து அறக்கோயில் செயலாளர் சத்தியகாமனவர்கட்கு,

எங்கள் மேதினியைப்பற்றி நீங்கள் மிக ஆவலுடன் கேட்க விரும்புவீர்களென்பது சொல்லாமலே விளங்கும். எல்லாவற்றையும் உள்ளபடி அறிய வேண்டியது கற்றறிந்த மாந்தர் கடனன்றோ. தாங்கள் சத்தியத்திலே திளைக்கின்றீர்கள். அதுவே தங்களுக்கு உண்ணுஞ் சோறும் பருகு நீருமாயிருக்கிறது என்றதைக் கேட்க எங்களுடைய மனம் பெருமகிழ்ச்சி அடைகின்றது. எங்கள் நிலையை உள்ளபடி உணர்த்திவிடுகின்றோம். இருள் சூழ்ந்திருக்கிற எங்கள் உலகத்திற்குத் தாங்கள் தாம் நற்செய்திகள் அனுப்ப வேண்டும். தாங்கள் வகுத்துக் காட்டுகிற அறநெறியில் செல்ல முயலுவோம். வழி இழந்து திகைக்கின்ற பொழுதெல்லாம் தங்கள் அருள் ஒளியின் வழியை நாடி நிற்போம்.

எங்கள் குவலயத்தின் வனப்பிற்கு எல்லை இல்லை. வானளாவி நிற்கிற வரைகள், அவ்வரைகளிலிருந்து பாடி வருகின்ற அருவிகள், இன்பந்தரும் ஓடைகள், மணங்கவர்ந்துவரும் மெல்லிய பூங்காற்றுகள், கணக்கிலா தாரகா கணங்கள் காவல் புரியும் வியன் வானம், கங்குலிலும் கண் துஞ்சாது ஏதோ வேதத்தின் உட்பொருளைப் பாடும் பரந்த தண் பரவை, வான வீதியில் பவனி வரும் திங்கட் கடவுள், இருள் கிழித்து வான் நுதலில் ஒளி விடும் கதிரவன் — பலவித வர்ணங்கள் பலவித மணங்கள், பலவித ஒலிகள் இத்தனையும் நிரம்பிய உலகத்தை—தெய்வங்கள் உலாவ விரும்பும் இப்புவியை, சிருஷ்டியின் சிகரமென்று சொல்லிக்கொண்டு திரியும் மனிதன் பாழ்படுத்துவதை நோக்குந்தோறும் எங்கள் சிந்தை ஓலமிடும்.

மத்திய ஆசியாவிலிருந்து மேற்றிசை நோக்கிச் சிலர் சென்றனர்: மற்றுஞ் சிலர் எங்கள் நாவலந்தீவுக்கு வந்தனர். நாவலந்தீவுக்கு வந்த மக்களுக்கு உணவு வசதிகளுக்கு ஒன்றுங் குறைவில்லை. ஆதலால், அவர்கள் சிந்தனை புறத்தில் சிறகடித்து உலாவவில்லை; அகத்தில் அது நீண்ட பிரயாணம் செய்தது. மனக் கடலில் தபோதனர்கள் மூழ்கி, அங்குள்ள ஞான முத்துக்களைத் திரட்டி உலகத்திற்கு அளித்தனர். நதிக் கரைகள்மீதும் மலைச் சிகரங்கள்மீதும் கடற்கரைகள்மீதும் அவர்களுக்கு ஆத்ம தரிசனங் கிடைத்தது. இலக்கியங்கள் முழுவதும் இயற்கை ஒரு தனிச் சிறப்பை அடைந்திருக்கிறது. மரப் பட்டை பெயர்ந்தாலும் அதற்கும் துக்கிக்கும் இயல்பைப் பார்க்கின்றோம். மலரில் ஆண்டவன் முறுவல்கண்டு அதைப் பறிக்க மனமெழாத தொண்டர்களும் எங்கள் நாட்டில் இருந்திருக்கின்றனர்.

ஆனால் இப்பொழுது எல்லாம் வாய் வேதாந்தம்தான். வேதாந்தம் பேசி வீடு வாசல் கட்டுகிற ஆசாரியர்கள் உண்டு. எல்லாவற்றையும் விடவேண்டுமென்று சொல்லிக்கொண்டே செல்வத்தைச் சேர்ப்பார்கள். மதங்களில் எத்தனை விதமான மதங்கள் தெரியுமா? ஒருவரையொருவர் பழிக்கின்ற நிலை வந்துவிட்டது. மதம் ஒரு பொழுது போக்காய் ஆகிவிட்டது. சினிமா, சங்கீதக் கச்சேரி, நடனம் இவைகளைப் போலவே மதப் பிரசங்கங்கள் ஆகிவிட்டன. சொல்லுகிறவர்களுக்கு அவைகளிடம் நம்பிக்கை இல்லை. கேட்கிறவர்களுக்கும் அவைகளில் நம்பிக்கை இல்லை. போய்க் கேட்டால் ஏதோ சுலபமாய்ப் புண்ணியம் வருமென்று நினைக்கின்ற சில மூடர்களுமுண்டு. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று பகிரங்கமாய் வாழ்வுப் பாதையில் இறங்கினாலும் பாதகமில்லை. அதற்கொரு தனித் தைரியம் வேண்டும். வாய் நிரம்ப வேதம், உள்ளத்தில் வற்றாத ஆசை; இத்தகைய மாந்தர்கள் உலகத்தை ஏமாற்றித் திரிகின்றனர். இதுதான் விசனிக்கத் தகுந்தது. மடங்களிலும் ஒருவரை யொருவர் விஷங் கொடுத்துக் கொல்லுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மடங்களைச் சற்றுச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று ஒருவர் ஆசைப் பட்டால் உப்புக்குழி தயாராய்க் காத்துக்

கொண்டிருக்கும். இந்நிலையில் மேனாட்டாரைப் பழிக்க ஆரம்பித்திருக்கிறோம். அவர்கள் இந்திரிய சுகங்களில் காலங் கழிக்கின்றனர், நாங்களோ பாரமார்த்திக வழியில் நிற்கின்றோம் என்று மார்பு தட்டிக் கொள்ளுகிறோம். ஆனால் நம்மகத்தே வளர்கின்ற ஆசைகளைப் பார்த்தாலோ, அவர்கள் எத்தனையோ விதத்தில் மேம்பட்டவர்கள் என்ற முடிவுக்கு வந்து விடுவோம். இல்லாத கொடுமையால் வேதாந்தம் பேசுகின்றோம். கொஞ்சம் செல்வம் வந்து விட்டால், நாம் நடக்கின்ற நடை வேறுதான். ரிஷிகள் குலங்களில் பிறந்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இவ் விஷயத்தில் அவர்கள் தீர்க்கதரிசிகள் அல்லர்; வருங்காலத்துப் பயிர் இப்படி இருக்குமென்று அவர்கள் உணர்ந்திருப்பார்களேயாகில், நம்மை உண்டு பண்ணியிருக்க மாட்டார்கள். அத்தனை சான்றோர்கள் நாம்! அவர்கள் நடத்திய வாழ்விற்கும் நமக்கும் வெகுதூரம் என்று சொன்னால் மிகையாகாது.

மேனாட்டிலே அறிவு வளர்ந்திருக்கிறது. அன்பு வளரவில்லை. ஆகாயத்தில் பறக்கின்றனர். தண்ணீர் அடியில் செல்லுகின்றனர். காலதேச வரம்புகளைத் தகர்த்துவிட்டனர். உலகத்தில் சேர்ந்து வாழ அவர்கள் கற்றார்களில்லை. புத்தகங்களை விரிவாக எழுதுகின்றனர். ஆனால் புத்தகங்களில் காணப்படுகின்ற லட்சியங்களுக்கும் அவர்கள் நடத்துகின்ற வாழ்க்கைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. விலங்குகளுக்கும் இவர்களுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் விலங்குகள் மனிதனைக் காட்டிலும் சற்று உயர்ந்துதான் இருக்கின்றன. விலங்கினம் பசி வந்தால்தான் வேட்டையாடும். ஆனால் மனிதன் அறிவில் சிறந்தவனன்றோ?

எந்த விதத்தில் தன் இனத்தை மாய்த்துக் கொள்ளலாம் என்பதற்காக ரஸாயன சாலையில் குண்டுகள் தயார் செய்கிறான். அணுகுண்டையும் பிரயோகஞ் செய்யச் சித்தமாயிருக்கிறான். மாய்க்கிற முறையில் தேர்ச்சி பெற்றுவிட்டான். பஞ்ச பூதங்களை வென்றுவிட்டதாகக் கூக்குரல் இடுகின்றான். பஞ்ச பூதங்களை இவன் வென்றானா? அல்லது இவனைப் பஞ்ச பூதங்கள் வென்றுவிட்டனவா? ஒன்றுஞ் சொல்லுவதற்கில்லை. மனிதன் முன்னேற்றம் அடைந்துகொண்டேயிருக்கிறான் என்று சொல்லுவதெல்லாம் ஏமாற்றத்தைத் தரக்கூடிய சொற்களே தவிர வேறொன்றுமில்லை. மனிதன் முன்னேற்றமடையவில்லை. முன்பு காட்டில் திரிந்துகொண்டு மனிதனையே மனிதன் விழுங்கின நிலையில் நின்ற காட்டு மனிதர்களை அழிக்குந் தொழிலில் வென்றுவிட்டான் நவீன மனிதன். அவன் கற்களையும் வில்லையும் பிரயோகஞ் செய்தான். இவன் வெடிகுண்டு, விஷப்புகை, கடற்கண்ணி, விமான வெடிகுண்டுவீச்சு, இன்னும் பற்பல போர்க் கருவிகள்—இவைகளை வைத்துக்கொண்டு தன்னையே நாசமாக்கிக்கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டான். எத்தனை உபதேசம் செய்தும் பிரயோஜனமில்லை. போர் புரிகின்றபொழுது இப்படிக் குருதிவெள்ளம் கடல்போலப் பாய்கின்றதே என்று சற்றுச் சிந்திக்கிறான். ஆனால் எல்லாம் மயான வைராக்கியம்போலவும், பிரஸவ வைராக்கியம்போலவும் ஆகிவிடுகின்றன.

போரொழிந்து சமாதானத்திற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும்பொழுதே போர்க் கருவிகளைப் படைக்குந் தொழிலில் புத்தி சென்றுகொண்டிருக்கும். எங்கள் மத்தியில் மஹான்கள் தோன்றாமலில்லை. ஆனால் அதிக உண்மை அன்பு ஒளி உள்ளவர்களுக்கு எங்கள் நாட்டில் இடம் இல்லை. ஒருவரைச் சிலுவையில் ஏற்றினோம்; ஒருவருக்கு விஷங்கொடுத்தோம்; அன்பே வடிவாய் நின்ற அன்பிற்கே பாடுபட்ட ஒரு தூயோனைச் சுட்டுக் கொன்றோம். ஆனால் எங்களுக்கு ஆறுதல் ஒன்றுண்டு. இத்தகைய மஹான்களை உண்டுபண்ணக் கூடிய நாட்டில், ஒரு காலத்தில் நல்லது பிறக்காமற் போகாது என்ற எண்ணம் எங்கள் சோர்ந்த மனத்தைச் சற்று நிமிர்ந்து நிற்கும்படி செய்கின்றது. மஹான்களின் சாம்பலைக் கரைத்தால் போதாது; எலும்புகளைப் போற்றினால் போதாது; அவர்கள் அணிந்த துணிமணிகளைச் சேகரஞ் செய்தால் போதாது; அவர்களுக்குக் கோயில் கட்டிப் பூசை செய்யும் பூசாரிகள் நியமித்தால் போதாது என்ற உண்மைகளை உணர்கின்ற உத்தம மாந்தர்களும் இருக்கின்றனர். மகான்கள் தந்த பேருபதேசங்களை உருவாக்க வல்லவர்களே உத்தமத் தொண்டர்கள் என்று அவர்கள் சொல்லியும் பிரயோஜனமில்லாமற் போயிற்று. அறியாமை வேந்தன் அந்தகர் நாட்டில் அரசு செலுத்தத் தொடங்கிவிட்டால், அறிவுக்கிடமுண்டோ! இந்நிலையிலும் நாங்களும் சர்வதேசச் சங்கமொன்றை நிறுவினோம், ஆனால் அச் சங்கம் போர்க்கருவிகள் மீது நிறுவப்பட்ட சங்கமாகும். அமைதி போர்க் கருவிகள் மீது நிலைத்து நிற்குமோ? தாங்கள் தாம் சொல்லவேண்டும். தங்கள் கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,
பாஞ்சசன்னியம்,
செயலாளர்,
சங்கப் பலகை.

விமர்சனம்

கவிதையும் வாழ்க்கையும் :

திருவாளர் அ. முத்துசிவம் அவர்கள் எம். ஏ.
கார்த்திகேயினி பிரசுரம்,
இராமச்சந்திரபுரம்,
புதுக்கோட்டை,
விலை ரூ 3—0—0.

நம் நாட்டில் உண்மையான விமர்சனமில்லை. கலையைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் ஆராய்ச்சி நூல்களில்லை. பெரும்பாலும் விமர்சனங்கள் என்ன ஆச்சரியம்! என்ன அழகு! என்று சொல்லக்கூடிய ஆச்சரியக் குறிப்புக்களே தவிர பிறிதல்ல. சாதிச் சழக்குகளையும் சாதிப் பிளவுகளையும் கிளப்பக் கூடிய பாடல்களை ஒருவன் முடைவானுல் அவனுக்குச் சாதி நறவுண்ட வெறியிலே கவி அரசு என்ற பட்டமும் அளிப்பார்கள். கவிதை உலகில் இத்தகைய பகை நரம்பு ஒலிக்குமானுல், கவிதைக்குச் சாவு மணி அப்பவே அடித்துவிட்டதாகக் கருதலாம்.

மனங் கைக்கும் இந்நிலையில் திருவாளர் அ. முத்துசிவன் அவர்கள் எழுதிய கவிதையும் வாழ்க்கையும் என்ற புத்தகத்தைப் படித்துப் பார்க்கும்பொழுது என்னுள்ளத்தில் ஓர் அளவிலா மகிழ்ச்சி வெள்ளம் பொங்கி எழும்பிற்று. தமிழ் நாட்டிலும் பொருள்களை உள்ளபடி நடுவு நிலையிலிருந்து ஆராயத் தகுந்த ரசிகர்கள் இருக்கிறுர்கள், இனிக் கவலை இல்லை என்ற நம்பிக்கையை இப் புத்தகம் ஒவ்வொரு உள்ளத்திலும் எழுப்பாமற் போகாது. அவர் புத்தக இறுதியில் கூறப்பட்ட பின் வரும் வாக்கியங்கள் சிந்திக்கத் தகுந்தவை.

“வார்த்தைகளின் மூலம் இதயக் கூட்டினுள்ளே மறைந்து கிடக்கும் மர்மங்கள் வெளிவருமானுல், ஆத்ம வேதனை தணிக்கப்படுமானுல், கறியைத் தின்றுவந்த கவலை மறையுமானுல், அனுதாபம் கிட்டுமானுல், புத்திமதி கிடைக்குமானுல், அனுபவங்கள் நமது இதயத்தில் பதியுமானுல், இன்னும் விவேகம் விரியுமானுல் இலக்கியத்தைப் புறக்கணிப்பது சிலாக்கியமான காரியம் ஆகாது. மற்றும் கலைஞர்களுடைய வார்த்தைகளின் பயனுக மக்கள் பலரும் இணைய நேரிட்டால், தேசப் பண்பாடு உருவானுல், கவிஞன் குரலையே தமது குரலாக மக்கள் பாவிக்க முற்பட்டால், இன்னும் அவனுடைய வார்த்தைகளின் பயனுகவே பழமையும் புதுமையும் இணங்கிச் செல்ல முன் வந்தால் அப்போதும் இலக்கியத்தைப் புறக்கணிப்பது பொருந்தாது” இவ்வரிகள் நியுமன் (**Newman**) இலக்கியத்தைப் பற்றி எழுதிய கட்டுரையில் காணப்படும் வரிகளின் மொழிபெயர்ப்புத்தான். இப்புத்தகத்தில் திருவாளர் முத்துசிவன் அவர்கள் கூறியிருக்கும் விஷயங்கள் மேனுட்டு விமர்சனக்காரர்களிடம் இவர் உள்ளம் ஈடுபட்டிருக்கிற தன்மையை நன்கு உணர்த்துகின்றன. பிராட்லி, ஆபர் கிராம்பி, கிரோச்சே முதலிய மேனுட்டு ரசிகர்களுடைய கருத்துக்களை நன்குய் ஆழ்ந்து சிந்தித்து அவைகளுக்குத் தக்க செஞ்சொற்கள் கொண்டு தமிழில் உருக்கொடுத்திருக்கிறுர்கள். கருத்துக்களை விளக்கத் தகுந்த பல உதாரணங்கள் காட்டியுள்ளார். அவருடைய நுண்ணறிவு, அவர் பரந்த படிப்பு, நடுவு நிலையிலிருந்து எல்லாவற்றையும் அலசி நோக்கும் அவர் மனப் பண்பு கருத்துக்கேற்றவாறு அமைகின்ற அவர் உரை நடையின் அழகு—எல்லாம் இப் புத்தகத்தில் ஒளி வீசுகின்றன.

சோற்றுச் செருக்கிலேதான் கலை வளரும் என்பதில் சந்தேகமில்லை. வயிறு வளர்ப்பதிலேயே காலம் கடந்துவிட்டால் கலையை அரும்பவைக்கும் ஆற்றல் நம்மிடத்தில் இல்லாமற் போய்விடும்.

நம்மிடத்தில் மிகுந்து நின்று மோதுகின்ற உணர்ச்சிதான் கலையாய்ப் பொங்கி வழிகின்றது. இக் காரணத்தால்தான் கலைக்காகவே கலை என்று சொல்லுகிறேம். இவ்வுண்மையை, சிசிரோ (**Cicero**) முன்னமேயே கண்டு நமக்குத் தந்திருக்கிறுர். உணர்ச்சி வெள்ளம்தான் கானமாய் வழிகின்றது என்ற உண்மை வால்மீகி தந்த காவியத்தில் புலனுகின்றது. இராமாயணத்தில் சுடு சோகந்தான் சுலோகமாய்ச் சுரந்தது என்ற விஷயம் யாவரும் அறிந்ததே.

விஞ்ஞானத்திற்கும் கலைக்குமுள்ள தன்மையை முத்துசிவன் அவர்கள் நன்றுகக் காட்டியுள்ளார். விஞ்ஞானம் தெரிந்ததை விரிக்கும்; கலையோ உணர்ந்ததை உணர்த்தும். பேட்டர் தம் ‘நடையில்’ **Fact, sense of fact** என்று மொழிகின்றுர். இச் சொற்றொடர் நம் மனத்தைக் கவராமற்போகாது.

கவிதை என்றுல் என்ன? கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள வித்தியாசமென்ன? பொருளுக்கும் உருவத்திற்கும் என்ன

தொடர்பு? பாவமென்றால் என்ன? ரசமென்றால் என்ன?

கலைஞன் உண்மையை நாடுகின்றானா? அல்லது அழகை நாடுகின்றானா? அல்லது நன்மையை நாடுகின்றானா? கலை ஒரு இனத்தாருக்கு மட்டுமா? ஒரு நாட்டினருக்கு மட்டுமா? ஒரு காலத்திற்கு மட்டுமா? என்ற விஷயங்களை அலசிக்கொண்டே ஆசிரியர் போகின்றார். பார்க்கப்போனால் ஆழ்ந்த கற்பனையெழுப்பிய உண்மையைக் கலைஞன் நாடுகின்றான்.

அழகு தன்னளவே பொலிந்தெழுகின்றது. எது உண்மையோ அது அழகாகத்தானிருக்கும். எது அழகோ அது நன்மையைத் தானே நல்கும்.

இப் புத்தகத்தில் ஒரு குறையுண்டு. பல புத்தகங்களுக்குப் பொருள்களாக அமையக் கூடியவை ஒரு புத்தகத்தில் திணித்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அம்சத்தை எடுத்துக்கொண்டு ஆசிரியர் தனித்தனியாய்ப் புத்தகங்கள் எழுதினால் தமிழுலகம் அவைகளை ஏற்று இன்புறும் என்பதில் சந்தேகமில்லை.

ரா. ஸ்ரீ.

சிற்பத்தின் சக்தி :

தே. ப. பெருமாள்
கவிக் குயில் நிலையம்,
கோட்டாறு,
தென் திருவிதாங்கூர்,
விலை ரூபாய் 1—4—0.

இக் கதைகள் நீதியைக் கற்பிப்பதற்காக எழுதியவை அல்ல. எனது வாழ்க்கை வீணையில் பல நிகழ்ச்சிகள் இசைத்த நாதக் கூட்டமே இக் கதைகள் என்று தம் நூலைப்பற்றி ஆசிரியரே முகவுரையில் கூறுகின்றார்.

இத்தகைய உணர்ச்சி இவருக்கு மட்டுமன்று ஒவ்வொரு உண்மைக் கலைஞனிடத்திலும் இதைக் காண்கிறோம்.

கலைஞன் பல நரம்புகளுடைய வாழ்க்கை யாழின் மீது எழுகின்ற சலனங்களுக்கு அழியா உருக் கொடுக்கின்றான் ஓவியக்காரனின் உணர்ச்சி அவன் கிழியில் ஓர் உயிர் ஓவியமாகப் பாய்கின்றது. சிற்பியின் கையில் அவன் கருத்து ஒரு சிற்பமாக மலர்கின்றது. கவியோ தன் உள்ளத்தைச் செஞ்சொற்கள்மூலம் கொட்டுகின்றான். சிறு கதை எழுதக் கூடியவன் ஒரு கவிதை உள்ளம் படைத்தவனாயிருக்க வேண்டும்.

இத்தகைய கவிதை உள்ளத்தைத் திருவாளர் தே. ப. பெருமாள் அவர்களிடம் நாம் பார்க்கின்றோம்.

ஒவ்வொருகதையும் ஒரு பாவத்தைக் காட்டுகின்றது. பாவத்தோடு கதை எழுதுவது சாதாரண காரியமன்று. காதல், வீரம், கற்பு, தியாகம், வாழ்க்கையின் போராட்டம், இன்ப துன்பம்—இவைகள் அவர் கதையில் இடம் பெறுகின்றன. ‘சிற்பத்தின் சக்தியில்’ கலையுருவம் தூண்டிய உணர்ச்சியின் முன்னே மத உணர்ச்சியும், பகை வெறியும் தலை குனியக் காண்கிறோம். நன்றி கெட்ட உலகத்தில் முதலாளியின் உள்ளமாம் வரண்ட பாலைவனத் தன்மையைச்சித்திரித்திருக்கிறார். வறுமைக் காவில் பூத்த மலர் உதிர்ந்து விழும் பொழுது நம்மனஞ் சற்றுத் துடிக்கத்தான் துடிக்கின்றது. ‘கடமை’யில் இரண்டு லட்சியங்களின் போராட்டத்தின் நிகழ்ச்சி தோன்றுகிறது.

இரண்டு மண்டபங்களில் காதலும் தேசபக்தியும் அன்புடன் தழுவி ஒன்றாய் நிற்க உணர்கின்றோம். ‘ஏமாற்றத்தில்’ வீரம்மை முன் வறுமையின் கோரக் காட்சி உலாவுவதைப்பார்க்கின்றோம். அவளது நினைவுத் திரையில் ஏமாற்றம் என்னும் இருளின் மத்தியில் வறுமை என்னும் பிசாக ஆடிக்கொண்டிருந்தது என்று கதையை முடிக்கின்றார், தமிழ்ச் செஞ் சொற்களின் வனப்பை உணர்கின்ற அவர் உள்ளம் இன்னும் அநேக கதைகளைப் படைத்துத்தரும் என்று நம்புகிறோம்.

ரா. ஸ்ரீ.

நாடக சாலையிலே

ரா. ஸ்ரீ. தேசிகன்

என் நண்பர் சதானந்தர் என் அகத்திற்கு வராத நாளில்லை. அவர் வந்தால் ஏதாவது அருமையான விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார். அவர் பேச்சு சிந்தனைக்கொருவிருந்தாய் அமையும். சில சமயம் நகைச் சுவை ததும்பப் பேசுவார்; மற்றுஞ் சில சமயம் பௌதிக சாஸ்திர நுட்பங்களைத் துருவி ஆராய்வார். தேசீய விஷயங்களைச் சல்லடை போட்டுச் சலித்துப் பார்ப்பார். வேறு வேளைகளில் மரணத்தின் மர்மம் மரணத்திற்கப்பாலுள்ள ரகசியங்கள்–இவை அவர் சிந்தனை வட்டத்திற்குள் மிதந்து வரும். ஆனால் வேதாந்த விஷயங்களில் அவிழ்க்க முடியாத அநேக சிக்கல்கள் தாம் அவர்முன் விரிந்து விடும். அவைகளைப் பற்றிச்சிந்தனை செய்யச் செய்ய இருள் தான் செறிந்து எழும் என்று அவர் அடிக்கடி சொல்லுவார். ஆனால் மனதைத் திகைக்க வைக்கக் கூடிய அத்தகைய விஷயங்களோடு இவர் போராடாமலிருக்க மாட்டார்.

இத்தகைய நண்பர் ஒரு மாத காலமாக என் வீட்டிற்கு வரவில்லை. நிதம் வருவாரா என்று ஜன்னல் வழியாய் எட்டிப் பார்ப்பேன். ஆனால் நிதம் ஏமாற்றந்தான். ஏன் வரவில்லை என்ற கேள்வி அடிக்கடி என் மனத்தகத்தே எழும். வேறு ஊருக்குப் போயிருக்கிறாரா?–தெரியவில்லை. அவர் தம் விலாசத்தை எனக்குத் தராத நிலையில் என்ன விலாசம் என்று கேட்க எனக்கு மனந் துணியவில்லை. சில கேள்விகளைக் கேட்டால் பிறர் மனம் சஞ்சலத்தை அடையுமென்று நான் வாளாவிருக்கிற வழக்கம். குழந்தைகள் இல்லாதவர்களை எத்தனை குழந்தைகள் என்று கேட்டால் மனத்தில் துயர்தான் எழும். அரசமரத்திற்குப் போடும்படியான அத்தனை குழந்தைகள் இருக்கிற ஒரு மனிதனைப் பார்த்துக் கேட்டாலும் சொல்லுவதற்குச் சற்று நாணுவான்.

உத்தியோகம் சம்பளம் இவைகளைப்பற்றிக் கேட்காமலிருப்பது உத்தமம். இப்படிச் சிந்திக்கிற என் உள்ளத்திலும் விலாசத்தைக் கேட்டுவைக்காமற் போனோமே என்ற கேள்வியும் பிறக்கும். அதற்குச் சமாதானத்தை என் உள்ளமே தரும். மனத்தைப் புண்படுத்தக்கூடிய சொற்களை அறியாமல் கூறிவிட்டேனா? என்ற சர்ச்சையை என் மனஞ் செய்ய ஆரம்பித்தது. அப்படி ஒன்றுஞ் சொல்லிவிடவில்லையே என்ற பதில் மனத்தின் மற்றொரு மூலையிலிருந்து ஒலித்தது. உடம்பு அசௌகரியத்தில் வரவில்லையா? அல்லது ஏதாவது உத்தியோகத்தை நாடி வெளியூருக்குச் சென்றிருக்கிறாரா? என்ற கேள்விகள் என் மனத்தின்முன் சுற்றி வட்டமிட்டன.

இப்படி நிதம் என் மனத்தில் கேள்விகள் எழும். அவைகளுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டே பொழுதைப் போக்கினேன்.

ஒருநாட் காலை எட்டுமணி இருக்கும், என் நண்பரைத் தெருக் கோடியில் வருவதைப் பார்த்துவிட்டேன். என் மனத்தில் புகலரும் ஒரு அமைதி ஓடிற்று. அவர் உள்ளே நுழைந்ததும் என் உதடுகள்மீது ஒரு முறுவல் தவழ்ந்து விளையாட உணர்ந்தேன்.

“என்னைப் பார்த்தால் உங்களுக்குச் சிரிப்பாகத்தானிருக்கும். எல்லாம் உங்களுக்கு வந்தால் தெரியும்” என்று சற்றுச் சீற்றத்தோடு என்னை நோக்கினார்.

அவர் முகத்தை அப்பொழுது தான் நன்றாகக் கவனித்தேன். ஒரு பெருஞ் சோக மேகம் அவர் முகத்தை மூடியிருந்தது. என் உதட்டுக் கோணங்களில் அரும்பிய முறுவல் மாய்வதை அறிந்தேன்.

“என்ன ஒன்றுந் தெரிய வில்லையே” என்றேன்.

“என் குழந்தை, மூன்று வயதானகுழந்தை கிட்டு இறந்துவிட்டான்.”

“அப்படியா?” என்று சொல்லி ஒன்றும் பேசாதிருந்தேன்.

ஐந்து நிமிஷங்கள் மெல்ல ஊர்ந்தன.

எனக்கு வந்தால் தெரியும் என்ற சொல் என் மனத்தரையில் சற்று மங்கிக் கிடந்த என் மாண்ட குழந்தையின் உருவத்தைச் சற்று ஒளிவிடும்படி செய்தது.

அதற்கு வர்ணமில்லை, மணமில்லை, ஒளியில்லை. அண்ணலே, ஏனோ அதைப் பறித்தாய் என்று ஏங்கின நாளுண்டு. ஆனால் அந்த மரணம் தெய்வ சங்கற்பத்தால் நடந்திருக்கிறது என்ற எண்ணத்தால் என் மனத்தைத் தேற்றிக்கொண்டிருக்கிறேன்.

"என்ன பதிலைக்காணோம்? எல்லாம் கர்மாவின் விசித்திரச் செயல்தானே. அந்தக் குழந்தை என்ன பாபத்தைச் செய்தது. அத்தகைய வியாதி வருவானேன்?"

நான் சற்றுப் பேசாமலிருந்தேன்.

என்னபதில் காணோம். கர்மா என்று சொல்லிக்கொண்டு நம்மை ஏமாற்றிக் கொள்ளுவதைத்தவிர வேறில்லை என்று மீண்டும் கூறினார்.

ஒன்றுந் தோன்றாத நிலையில் மனம் "ஏதாவது ஒரு சமாதானத்தை நாடுமன்றோ."

சமாதானம் உண்மையாகி விடுமோ? வேறு காரணமிருந்தால் சொல்லுங்களேன் என்றேன்.

"தெரியாததால்தானே தங்களைக் கேட்கின்றேன்."

சிறு வயதிலேயே அபாரசக்திகள் தோன்றுவதைப் பார்க்கவில்லையா?

ஆம் பார்த்திருக்கிறேன் அதனால் என்ன?"

"அது ஒரு ஜன்மாவில் வந்தவை என்று நினைக்கின்றீர்களா?

"அதற்கு ஜன்மாவா வரவேணும், தகப்பனுடைய சக்திகள் பிள்ளைகளுக்கு வரலாம்."

"ஆனால் முட்டாள் வயிற்றில், குப்பை மேட்டில் மல்லிகையோ, ரோஜாவோ மலர்கிறது போல ஒரு மேதாவி தோன்றக் காண்கின்றோம். இதற்கென்ன சொல்லுகிறீர்கள்."

இந்தத் தகப்பன் முட்டாளாயிருக்கலாம். இவனுக்கு முன்னோர்களின் ஒருவருடைய மேதாவித் தன்மை இவனிடத்தில் வரலாமன்றோ? வியாதியும் அப்படியே தோன்றுகின்றது. உதாரணமாக, தகப்பன் குஷ்டரோகியாயிருப்பான். பிள்ளைக்கு அவ்வியாதி வருகிறதில்லை. ஆனால் பேரனுக்கு வந்து விடுகின்றது. தாய் தகப்பன் செய்த பாபங்கள் தொடருமென்று சொல்லுவார்களே அந்தவளவில் உண்மை இருக்கலாம்.

பரம்பரைச் சக்திதான் ஆட்டி வைக்கிறது. மனிதனுக்கு ஆத்ம சக்தி இல்லையென்று நினைக்கின்றீர்களா? ஒவ்வொரு ஆத்மாவும்

"பேட்டானைஸ்"

செய்யப்பட்ட
கம்பளி ஆடைகள்
அன்றலர்ந்த பூவைப்போல்
ஒவ்வொரு சலவைக்குப் பிறகும்
புதுமையாகவே
இருக்கின்றன



நிட்டிங்
நூல்கள்.

"பேட்டானைஸ்" செய்யப்பட்ட நூல்களிலிருந்து தயாரிக்கப்படும் கம்பளி ஆடைகள் சுருங்கா வண்ணம் இருப்பதற்கு காரணமான 'பேட்டானைஸிங்" முறை எங்களுக்கு மிக்க பெருமையை அளிக்கிறது. ஒவ்வொரு தடவை சலவை செய்த பிறகும்கூட அவை நெய்த தினத்தன்று போல் மிருதுவாகவும் அடர்த்தியாகவும் இருக்கின்றன.

P&B

பேட்டான்ஸ் & பால்ட்வின்ஸ் லிமிடெட் தயாரிப்பு

தனக்குத் தகுந்த இடத்தை நாடுகின்றது. ஆண் பெண் கூடுதலும் இந்தப் பிறக்காத ஆத்மா கதவைத் தட்டுவதினுல் நிகழ்கின்றது என்று எனக்குத் தோன்றுகின்றது. தயரதன் செய்த தவத்தால் இராமன் பிறக்கவில்லை. தகப்பனை நான் நாடுகின்றேன் என்று ஆண்டவன் சொன்னது, எல்லா ஜீவராசிகளுக்கும் பொருத்தமாகும்.

விட்டகுறை தொட்ட குறையாயிருக்கும், நீயேன் கவலைப்படுகின்ருய்? மரணம் வந்தால் என்ன? யோகியாய்ப் பிறப்பாய் அல்லது யோகிகள் குலத்திலும் தோன்றலாம் என்று கண்ணன் சொன்னது நினைவுக்கு வருகின்றதா என்றேன்.

ஆமாம் வருகின்றது, ஆத்மாவுக்குத்தான் இறப்புங் கிடையாது பிறப்புங் கிடையாது என்று சொன்னவர் கர்மாவைப்பற்றிப் பேசுவானேன். எப்படி பிறப்பில்லாத அந்த ஆத்மாவுக்குக் கர்ம சம்பந்தம் வருவானேன்? இந்த ஆதி கர்மா எப்படி வந்தது என்பது ஒருவருக்குந் தெரியவில்லையே?''

''தெரியவில்லைதான். ஆனுல் இதை ஒத்துக்கொள்ளுகிருர்களா என்றேன்.

''எதை என்று கேட்டார்''

இயற்கையில் ஓர் ஒழுங்கை......காலையும் இரவும் மாறி மாறி வருகின்றன. நக்ஷத்திரங்கள் வானரங்கில் நடனமாடுகின்றன. இந்துவின் சபையில் பர்வ காலங்கள் முறை தப்பாமல் பவனி வருகின்றனவே. இதிலொரு ஒழுங்கு இருக்கிறதுபோல வாழ்விலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஓர் ஒழுங்கு இருக்கத்தானே செய்யும். குழந்தை இறந்ததும் அந்த ஒழுங்கைப்பற்றித்தானே இருக்கும் என்றேன்.

''அதைப்பற்றி யோசிக்கிறேன் என்று சொல்லிவிட்டகன்ருர்.

இரண்டு நாட்கள் கழித்து வந்தார். குழந்தை ராமு என்ற நாடகம் நடிக்கப் போகிருர்களாமே போகலாமா என்ருர்.

'ஆம்' என்றேன்.

நாடகசாலையில் ஒரு நிமிர்ந்தகூட்டம். முதற் காட்சியில் ஓர் ஏரி கரைமீது பொழுது சாய்கிற வேளையில் ஒரு குழந்தை தோன்றுகிறது. குழந்தை தாயோடு பேசுகின்றது.

குழந்தை: இதோ அலைகள் என்னைப்போல தொம் தொம் என்று குதிக்கிறதே இந்த அலைக்கு அம்மா இருக்காளோ?

தாயார்: அம்மா இருக்கா அம்மா தூங்கிக் கொண்டிருக்கச்சே இந்த அலைகள் குதிக்கிறது.

குழந்தை: நான் எப்படி வந்தேன்.

தாயார்: ('தாயார் சற்று திகைத்து நிற்கிருள்.') இந்த ஏரி மேலே மிதந்து வந்தே. நான் உன்னை எடுத்துக்கொண்டு வந்தேன் குழந்தாய்.

இதற்குள் வானில் நக்ஷத்திரங்கள் தோன்றுகின்றன.

குழந்தை: அம்மா, அதோ தெரிகிறதே அது என்ன அம்மா?

தாயார்: விளக்கு.

குழந்தை: அதை யார் ஏத்தினு?

தாயார்: நான் சாயங்காலம் ஏத்தறேனேல்லையோ, அதுபோல உம்மாச்சிக்கு அங்கே ஏத்ரு.

குழந்தை: நான் எப்பொழுது ஏத்தறது.

தாயாருக்கு அச்சம் வருகின்றது. பதில் சொல்ல வரவில்லை.

''எத்தனை அழகாய் குழந்தை பேசுகிறது. பாருங்கள்'' என்ருர் சதானந்தர்.

இந்தக் குழந்தைக்கு ஒன்றுவராமலிருக்க வேண்டுமென்கின்றனர் அங்கே கூடியிருக்கிற ஜனங்கள்.

மற்ருெரு காட்சி வருகின்றது. அதில் குழந்தை படுத்த படுக்கையாய்க் கிடக்கிறது. இக்காட்சியைக் கண்டவுடன் எழுந்திருந்துபோகலாம் வாருங்கள் என்கிருர் என் நண்பர். முழுதும் பார்த்துவிட்டுப் போகலாம் என்றேன்.

அரை மனதோடு அங்கே தங்கினுர். குழந்தை இறக்கின்றது. சதானந்தர் சோகத்தில் ஆழ்கின்ருர். தம் குழந்தையின் நினைவு அவருக்கு வருகின்றது. மாண்டுபோன என் குழந்தைபால் என் சிந்தையும் விரைகின்றது.

இன்னெரு காட்சியில் ஒருவர் வந்து உபதேசம் செய்கின்ருர்.

''இந்நாட்டில் தூக்கம், மற்ருெரு நாட்டில் விழிப்பு, இங்கே இரவு, அங்கே உதயம்'' என்கிருர்.

வேருெரு காட்சியில் தகப்பன் பேசுகின்ருர்; ''ஒரு குழந்தையினிடத்தில் காணப் பெருத நன்மைகளைப் பல குழந்தைகளிடத்தில் பார்க்கப் போகின்றேன். என் சொத்தைத் தீனக் குழந்தைகளுக்கு எழுதி வைக்கப் போகின்றேன்'' என்ருர்.

தாயார்: பிறர் குழந்தைகளுக்குச் செய்தால் நம் குழந்தை ராமுவுக்குச் செய்கிறதாகும். மறைந்த ஆத்மாவுக்கும் சாந்தமுண்டாகும்.

திரை விழுந்தது. அனைவரும் நாடக சாலையை விட்டகலுகின்றனர். நாங்களும் தனிவழி போய்க்கொண்டிருந்தோம்.

குழந்தையின் மரணம் எத்தனை மாறுதல்களைக் கொணர்ந்துவிட்டன பார்த்தீர்களா?

"நடுவில் போயிருந்தால் குழந்தையின் மரணம் பெருந் துக்ககரமான செய்தியாய்த் தோன்றியிருக்கும். முழு நாடகத்தைப் பார்த்ததனால் அன்றோ உண்மை வெளியாயிற்று என்றேன்.

"ஆமாம்" என்றார்.

இந்தப் பிரபஞ்ச மஹா காவியத்தை இயற்றிய ஆதியும் அந்தமுமில்லாத மஹாகவியின் திறமை சொல்லில் அகப்படுமோ. ஒவ்வொரு சம்பவமும் அக்காவியத்திற்கு முக்கியமாயிருக்குமன்றோ.

"ஆமாம்".

தங்கள் குழந்தையின் மரணத்தை நினைத்துப் பாருங்கள் என்றேன். அவரும் சிந்தையில் ஆழ்ந்தார். நானும் சிந்தையில் ஆழ்ந்தேன். மனம் மனத்தோடு பேசிற்று. ஆத்மா ஆத்மாவோடு உரையாடிற்று. கணக்கிலா தாரகா கணங்கள் மின்னும் வான விதானத்தின் கீழ் ஒரு கரையிலாச் சிந்தனைக்கடல் மீது நாங்களிருவரும் மிதந்து சென்றோம்.

குடந்தையில் புதிய ஜவுளிக் கடை

V. S. R.

புது வருஷ வாழ்த்துக்கள்

எமது வாடிக்கைக்காரர்களுக்கும், அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த புது வருஷ வாழ்த்துக்கள் உரியவாகுக.

கல்யாண காலத்தை உத்தேசித்து, புதுமாதிரியான டிஸைன்களில் பலவூர் பட்டுச் சேலைகளும், வெண்பட்டு வகையறுக்களும், நூல் ஜவுளி தினுசுகளும், நம்பிக்கையுடன் நாணயமாகவும் குறைந்த விலையில் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கின்றோம். நேரில் விஜயம் செய்து தேவைக்கு வாங்கி ஆதரிக்குமாறு கோருகின்றோம்.

பட்டு ஜவுளி வியாபாரம்
138, பெரிய தெரு
கும்பகோணம்.

"சுப்பிரமணிய விலாஸ்"
Prop :- விருபாக்ஷிபுரம் V. S. ராமஸ்வாமி
(son of V. N. S. அய்யர்).

ஏடுகள் சொல்வதுண்டோ!

விந்தியா

(முன் தொடர்ச்சி)

ராதை ஒரு அலாதி இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்தாள். எல்லா உறவினர்களும் ஒரே யிடத்தில் குழுமியிருக்க, ஏகச் சந்தடியாகி இருந்த இல்லம், ஒரு குட்டி 'உலகம்' போலத் தோன்றியது அவளுக்கு. அந்தக் 'குட்டி உலகத்தில் அவளுக்கு ஒரு அருமையான ஸ்தானமும் இருந்தது. அவளுடைய பெருமிதத்திற்குக் கேட்பானேன்!

வடக்கே யிருந்து வந்திருந்த ராதை, எல்லோருடைய கவனத்தையும் சற்றுக் கவர்ந்தாள். பெரியவர்கள் முதல் சிறுவர் சிறுமியரும், அவளுடைய சிற்றுடை தினுசுகளையும், காதணிகளையும், வளைகளையும் பார்த்து வியப்பும், மகிழ்வும் காட்டினார்கள். நடையுடை பாவனைகளில் தனக்கும் மற்றச் சிறுமியர்களுக்குமிடையே வித்தியாசம் இருப்பதாக ராதை உணராவிட்டாலும், வித்தியாசம் இருப்பதாக அத்தையும் பெரியப்பாவும் சொன்னபோது, அதை ஒரு பெருமையுடன் ரசித்தாள் ராதை. சில சமயம் வெகுளித்தனமாகவும் குழந்தைத் தனமாகவும் ராதை பேசும் பொழுதும், நடந்துகொள்ளும் பொழுதும் அவர்கள் "வடக்கே இருந்த பெண்! சூன்யம் தெரியாது!......" என்று சொல்லி, அவளுக்குப் புகழ் மாலை இட்டபொழுது அவள் அதை வெகு அடக்கமாக ஏற்றுக் கொண்டாள்.

ஒரு நாள் பகல், அவளுடைய அத்தங்காள் ராதையின் பெட்டியிலிருக்கும் சாமான்களைப் பார்த்துவிட்டு, "என் சிநேகிதி பட்டு, பட்டணத்திலிருந்து வந்திருந்தாள்! அவள் இதையெல்லாம் தூக்கி யடிக்கிறதாக எத்தனையோ வச்சிருக்காளே!" என்று சொன்னபோது, கொஞ்சம் சிறுமையாகப்பட்டது ராதைக்கு. ஆனால் அவளுடைய தம்பி பாலு, இளையது காளை என்ற பேச்சுக்குப் பொருத்தமாக ஒரு வீருப்புடன் அக்காளின் உதவிக்கு வந்து நின்றான். "ஏய்......உங்கள் பட்டு கிடக்கட்டும்!...இங்கே உங்களுள்ளே யாராவது வச்சிருக்களா சொல்லுங்கோ! அதான் பாய்ண்ட்!" என்று ஒரு கர்ஜனை செய்தான்.

"டேய் சும்மா இருடா பாலு!......எங்கிட்ட இருக்கிறதெல்லாம் எனக்கொண்ணும் பெருமையாகவே தோணல்லையே! மற்றவாள்ளாம் தானே அன்னியிலேருந்து என்னண்டை இருக்கிற வளையைப் பத்தியும் புடவையைப் பத்தியும் புகழ்ந்துண்டு இருக்கா!......பாட்டிகூட எல்லாம் பார்த்து சந்தோஷப்பட்டாள்!" என்று வெகு சாவதானமாகச் சொல்லிக்கொண்டாள் ராதை!, அதனால் "சாது......நல்ல சுபாவம்!" என்று பெயர் வாங்கிவிட்டாள்.

இந்தச் சந்தோஷப் பெருக்குக்கு ஒரு தடை ஏற்படத்தான் ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

சபேசனின் பயண திட்டத்தைக் கொஞ்சம் மாற்றினாள் அவருடைய அக்காள்.

கல்யாணத்திற்கு ஈரோடு வழியாகப் போவதால், கல்யாணத்திற்கு நாலுநாள் முன்னதாக, தாம் மட்டும் குடும்பத்துடன் புறப்பட்டு ஈரோடிலே தங்கிக்கொண்டு, கல்யாணத்திற்கு முதல்நாள் கோவை போய்ச் சேரலாம் என்று எண்ணியிருந்தார் சபேசன். ஆனால் அந்த ஏற்பாடு அவருடைய அக்காளின் முதிர்ந்த அனுபவத்திற்கும் அறிவுக்கும் உகந்திருக்கவில்லை.

"எல்லோருமா இங்கிருந்து கல்யாணக்காராளாய் லட்சணமாய்ப் போகிறதை விட்டுட்டு, இந்த ஏற்பாடு என்ன வேண்டியிருக்கு! அழகுதான் போ!...... ஷட்டகரோட தமையனார் வீட்டுலே நாலுநாள் தங்கறது அவ்வளவு முக்கியமாக உனக்குத் தோன்றினால்......கல்யாணத்திலிருந்து திரும்பிவர வழியிலே நீ இறங்கிக்கொண்டால் போச்சு!......" என்று சொல்லிவிட்டாள் அந்த அம்மாள், சபேசனுக்கு அதுதான் ஒழுங்கான ஏற்பாடு என்றும் தோன்றியது. கோலாஹலமாக எல்லோரும் சேர்ந்து கல்யாணத்திற்கு முதல்நாள் புறப்படுவதைத்தான் விரும்பியது அவர் மனசு.

ராதையைக் கூப்பிட்டார். "ராதே!......வருகிற வழியிலே ஈரோடுலே தங்கலாம்மா!. அண்ணாவைப் பார்க்கலாம்!...... உன் அதிர்ஷ

ட்டம்...... கல்யாணத்திற்கு ஈரோடுக் காரர்கள் வரமாட்டார்கள் போலிருக்கு! இல்லாவிட்டால் அங்கேயே உன் ஆசை பலிக்கும்!...... அதனாலென்ன!......ஒரு நாலுநாள் தானே எப்படியும் தாமசப்படும்!...... கல்யாணக் குஷியிலே நாலுநாளும் நாலுநிமிஷமாய்ப் பறந்துடும் பார்!......"என்று ராதையைக் குஷிப் படுத்திவிட்டார் சபேசன்.

ராதை ஒப்புக்கொண்டு விட்டாள். ஒப்புக் கொள்ளாமல் வேறென்னசெய்வாள்? அப்பா தட்ட முடியவில்லை அத்தையின் யோசனையை. இவளுடைய அபிப்பிராயமா அம்பலம் ஏறும்?...... ஏறாது! ஏறணும்...... பழைய திட்டம் நிறைவேறணும் என்பதும் அவளுக்கு அவசியமாகத் தோன்றவில்லை.

"போனால் போகிறது!...நாலுநாள் தானே தாமசம்!......போகிறபோது இறங்கிப் போவதானால் கணக்காக இரண்டு மூன்றுநாள் தான் இருக்க முடியும்!......கல்யாண நாள் நெருக்கும்!......அண்ணாவோடு பழக ஆரம்பிச்சு......கூச்சம்விட்டுப் பழகி ஆரம்பிக்கும் சமயம் புறப்பட்டுவிட்டால்.........அப்புறம் அண்ணாவோடு எப்போது தாராளமாகப் பழகுவது?.........வருகிறபோது இறங்கினால் இரண்டுநாள் அல்ல......நாலுநாள்......ஏன் பத்துநாள்கூட தங்கலாம்!......அண்ணாவும் தடுத்தால்......நாமும் சொன்னால் அப்பா கட்டாயம் ஒப்புவார்......"......இப்படி ஒரு யோசனையும் கற்பனையும் எழவே.........'ஒட்டைச்சாண்' பெண்ணான தன் அபிப்பிராய பேதம் பலனளிக்காது என்ற விவேகத்துடன் மனதைத் தேற்றிக் கொண்டு விட்டாள் ராதை.

கோவைக்குப் புறப்பட்டது திருமண கோஷ்டி. ஈரோடிலே 'வண்டி மாறும்' கட்டம் வந்தபோது அண்ணனைப் பற்றிய சிந்தனை சிறிது படர்ந்தது ராதையின் உள்ளத்திலே.

"அண்ணா இருக்கும் ஊரைத் தாண்டிக் கொண்டு போகிறோம், அவனைப் பரர்க்காமல் போகிறோம்!" என்ற ஒரு எண்ணம் தலை தூக்கியது, கைகாட்டி மரம்போல.

கோவைக்கு ஏற்றிச் செல்லும் வண்டியை அண்டியது கல்யாண கோஷ்டி. சபேசனும் அவருடைய தங்கை புருஷனும் எந்தப் பெட்டியில் ஏறுவது என்ற யோசனையுடன் பெட்டிகளுக்குள் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டே முன் சென்றனர். சபேசனுடைய அண்ணா, வயது சென்ற தந்தையின் கையைப் பற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்தார். பெண்களும் குழந்தைகளும் அவரவர் போக்கிலே பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தனர்.

"இதோ, இந்தப் பெட்டிக்குள்ளே ஏறக் கூடாது?" என்று சொல்லிக்கொண்டே, லேசாகத் திறந்திருந்த ஒரு பெட்டியின் கதவுகளைத் தள்ளித் திறந்து, பெட்டிக்குள் எட்டிப் பார்த்தாள் ராதை. அடுத்த கணம் ஏதோ அதிசய சோதியைக் கண்டு கண் கூசியது போல, தலையை வெளியே இழுத்துக்கொண்டாள் ராதை!

படபடப்புமிக்கவளாய் ...."ஐயையோ ......"என்றாள். பெட்டிக்குள்ளிருந்து ஒரு மெல்லிய சிரிப்பொலியும், "ஏண்டி......... கண்டபடி கத்தறே......நன்னாருக்கு!" என்ற அம்மாவின் அதட்டலும் ஒருமிக்கப் பாய்ந்து வந்து ராதையின் செவியில் விழுந்தன.

கல்யாணக் கூட்டம் போகிறபோது அந்த 'ஐயையோ' வார்த்தையைத் தான் சொல்லிவிட்டதைப் பற்றித்தான் அம்மா கோபிக்கிறாள் என்று ராதை அறிந்தாள். "இல்லைம்மா......அந்தப் பெட்டியிலே காபூலிக் காரக் குடும்பம் இருந்தது, பயந்துட்டேன்!......" என்று சொல்லிக்கொண்டே வேகமாக முன் நடந்தாள் ராதை. அம்மாளாவது வேறே யாராவது குட்டிகளாவது அந்தப் பெட்டிக்குள்ளே எட்டிப்பார்த்துத் தன் பேச்சு உண்மைப் பேச்சு அல்ல என்பதைக் கண்டு கொண்டால்...... ஐயோ......அவமானம்...... என்று பயம் அவளுக்கு.

ஆம்......காபூலிக் குடும்பமா பெட்டிக்குள் இருந்தது!......இல்லையே!......

பெட்டிக்குள் ராதை எட்டிப் பார்த்ததும் ......அங்கே பெஞ்சியின் உள் கோடியில் நேரே காட்சியளித்தவர்கள் சில வாலிபர்கள்; நாலுபேர் இருப்பார்கள்......ராதை கதவைத் தள்ளிக்கொண்டு எட்டிப் பார்த்ததும், அவர்கள் எல்லோரும் 'சட்'டென்று ஒருமிக்கத் திரும்பிப் பார்த்தார்கள் ராதையை. அந்த நால்வருள் ஒருவன்......அவன் அழகாகவும் இருந்தான்......ராதையை ஒரு வினாடி ஊன்றிக் கவனித்து விட்டான், பயல்!......அந்த வாலிபனின் பளபளக்கும் கண்களைக் கண்டு ராதை படபடப்பு அடையாமல் இருக்க இயலுமா?

ஆனால் 'பொல்லாத' காதல் உணர்ச்சி தன் ஆர்ப்பாட்டத்தை 'அப்பாவி' ராதையின்மீது எவ்வளவு சீக்கிரமாக ஆட்சி செலுத்தத் தூண்டிவிட்டதே!......அதுதானே விந்தை! ஜாலக்காக வேறு ஒரு காரணம் கற்பித்து எப்படியோ படபடப்பின் உண்மைக் காரணத்தை மறைத்துவிட்டாளே போக்கிரி!

ரயில் வண்டியின் வேகத்திலே அடித்துக் கொண்டு ஓடிவந்த இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின், கைகாட்டி போலே தலை தூக்கி நின்ற

சாதாரண ஆம்லெட் தான்—



ஆனாலும் அதை டால்டாவில் பொரித்தால் தனிருசியே!

முட்டையின் வெள்ளைக்கருவை தனியாக எடுத்து கெட்டியாவதுவரை கடையவும். பிறகு மஞ்சள் கருவைப்போட்டு ஐந்து நிமிஷங்கள் கடையவும். நறுக்கின வெங்காயம், உடைத்தபயறு அல்லது அரிந்த தக்காளிப் பழம், ருசிக்குத் தகுந்தபடி உப்பு, மிளகு, இவைகளைச்சேர்த்துக்கொள்ளவும். பரந்த வாணலியில் பொரிக்குமளவு டால்டாவை சூடாக்கி அதில் கலந்து வைத்திருப்பதை ஊற்றவும். கீழ்பக்கம் இலேசாக சிவக்கும்வரை பொரித்து, இரண்டாக மடித்து, மறுபக்கம் திருப்பவும். இந்தப்பக்கமும் சிவந்ததும் சூடாக பரிமாறவும். ரொம்ப ருசியாயிருக்கும்.

நீங்கள் சாப்பிடும் பக்ஷணங்களை டால்டாவினால் எப்படி அதிக ருசியுள்ளதாகச்செய்யலாம் . . . ஒரு சாதாரண சாப்பாட்டிற்கோ அல்லது விசேஷமாகவரும் விருந்தாளிக்கோ என்னென்ன தயாரிப்பது . . . உங்களுக்கு தேவையான தகவல்களுக்கு எழுதுங்கள்.

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 76-23 TM

"அண்ணா எண்ணம்" தலை சாய்த்துத்தான் விட்டது. மனதைக் கவர்ந்த அந்தப் பையனின் நினைப்பு சுதி போல இழைய 'யாரோ இவர்!' என்று பண்ணிசைத்துக் கொண்டிருந்தது ராதையின் நெஞ்சம், பயணம் நெடுக. இந்தப் புதுமையான அனுபவமும், கல்யாணக் கோஷ்டியின் உறவிலே ஏற்பட்ட உத்ஸாகமும், அண்ணாவைப் பார்க்க அதிகநாள் செல்லாது என்ற நம்பிக்கையும், இளமையின் பூரிப்பும், உள்ளத்திலே நிறை கொள்ளாமல் நிரம்பி யிருக்க, பதினைந்து வயதுப் பெண்ணான ராதை உவகையின் உருவாகிக் காட்சியளித்ததில் வியப்பென்ன? அகத்தின் பொலிவு முகத்தில் வீசி, சோதி முகத்துடன் உலாவினாள் ராதை,

முன்னாளில் 'மாயை சபை' என்று இருந்ததாகச் சொல்வார்கள். அந்த இடத்திற்குச் சென்றால் விசித்திர விசித்திரமாகக் காட்சிகள் காணப்படும் என்று சொல்வார்கள். பார்ப்பவரின் கண்களுக்கு எல்லாம் அதிசயமாக இருக்கும் என்பார்கள். கண்களே ஒரு விசித்திரத் தன்மை யடையும் என்றுகூடச் சொல்பவர்கள் உண்டு.

"அந்த மாயை சபையை யாரும் இப்போது பார்க்க முடியாது. அந்த மாதிரி அனுபவம் கிட்டாது," என்றுதான் நினைப்போம்.

ஆனால் ஏன் கிட்டாது? மாயை சபை என்றால் மாயை சபைதானா வேண்டும்—அத்தகைய அனுபவம் ஏற்படுவதற்கு? ஒன்றுமில்லை—அந்தக் கல்யாணக் கோலாஹலமும் வைபவமும் ராதைக்கு அத்தகைய அனுபவம் அளிப்பதாக இருந்ததே!...மாயை சபைக்கு இருக்கக்கூடிய சக்தி அந்தத் திருமண வைபவத்திற்கு......அவள் விஷயத்தில் — இருந்தது!

அதற்குமுன் எப்போதும் ராதை அது போன்ற 'விழா'வில் கலந்து கொண்டது கிடையாது. ஓரிரண்டு தமிழ்நாட்டுத் திருமணங்களைத்தான் பார்த்திருக்கிறாள். அப்போதெல்லாம் அவளும் சிறு பெண். அவளுடைய பெற்றோர்க்கே அந்த வைபவங்களில் விசேஷப் பங்கு இருந்தது கிடையாது! ஆனால் இப்போதோ, இது "வீட்டுக் கல்யாணம்". இவளும் மங்கை. எல்லாம் ரசிக்கத் தெரிந்தவள். உலக விஷயங்களில் ஆர்வம் மிகுந்திருக்கிறாள்.

ஜானவாஸத்தின்போது ஏற்பட்ட கலகலப்பையும் விமரிசையையும் அப்படியே அள்ளிப் பருகிவிட ஆவல் கொண்டவள்போல, ராதை கண்களை நாற்புறம் ஓட்டிய வண்ணம், கோயில் மண்டபத்தையும்...அதிலே குழுமியிருக்கும் கல்யாணக் கூட்டத்தையும் ஆராய்ந்து கொண்டிருந்தாள்......

"ஆ!......அது யார்?......?......"......

"அவர்தான்!......ரயிலிலே காட்சி யளித்தவர்தான்!......அவரேதான்!......"

ஈரோடு நிலையத்திலே 'அந்தப் பெட்டி'க்குள், நண்பர்களுடன் காட்சியளித்த அதே பையன், அதே நண்பர்களுடன் கோயிலின் முன் வாசற்படி யருகு மீண்டும் காட்சியளித்தான்! ராதை திடுக்கிட்டாள், ஒரு கணம். தெய்வத்தைக் கண்ட பக்தையைப் போலத்தான் பரவசப்பட்டாள். ஆனால் 'சட்'டென்று தன்னுணர்வு பெற்றாள். அந்தப் பையனும் அதே சமயம் தன்னைக் கூர்ந்து நோக்கியதைக் கண்ணுற்றதும், தலை குனிந்துகொண்டாள்.

கல்யாணப் பிள்ளையாகிய 'அத்தானை' ஏற்றிக்கொண்டு சென்ற மோட்டாருக்குப் பின்னே அமைதியாக நடந்து சென்ற கூட்டத்துடன், ராதையின் கால்களும் ஊர்ந்தன. ஆனால் மனது மட்டும் நாதசுரக் காரரின் கமகப் பொழிவுகளுடனும், பிர்க்காக்களுடனும், போட்டி போட்டுக்கொண்டு சுழன்றது. கண்களும் போட்டி யிட்டன. நாதஸ்வரக் காரரின் வாசிப்பைச் சற்றுநேரம் நிறுத்த முடிந்தது, திருமணவாசல் வந்தபின்—ஆனால் அவளுடைய கண்களின் சுழற்சியை நிறுத்துவதற்கு மட்டும் இயலவில்லை. அந்தப் பையனின் உருவம் தென்படவில்லை அப்புறம்.

மறுநாள் முஹூர்த்தத்தின் போதும், அதற்கு முன்னும், பின்னும், சில மணி நேரங்கள் மட்டும், அத்தகைய அழற்சிக் குள்ளாகவில்லை, ராதையின் நீள் விழிகள். கல்யாணப் பந்தலின் ஒருபுறத்தில் அதே மூன்று நண்பர்களுடன் அந்தப் பையன் வீற்றிருப்பதைக் குறிப்பாகக் கண்ட அந்தக் கண்கள், தேடாமல், வாடாமல் அவன் பால் திரும்பிக்கொண்டிருந்தன! "டைப் மெஷினை"ப்போல வார்த்தைகள் வீசின.

அந்த இளைஞனும் ஏனோ அமைதியாக அங்கேயே இருந்தான்! அவன் அவ்வப்போது இடம் மாறினாலும்—அவனுடைய நண்பர் குழாமும், எல்லோருடனும் அதிகம் கலவாமல் கல்யாணச் சந்தடியில் அதிகம் பங்கு கொள்ளாமல் நடந்துகொண்ட அவனுடைய தனிப் போக்கும் அவனைச் சீக்கிரமாகக் காட்டிக் கொடுத்துவிட்டன.

இளைஞனின் 'தனிப் போக்கும்' 'தனிமை ஆர்வமும்' ராதைக்கு ஒரு விதத்தில் சௌகரியமாகவும், சந்தோஷகரமாகவும் இருந்தாலும், ஒரு வேதனையும் அளிப்பதாகத்தான் இருந்தது.

"யார் அந்தப் பிள்ளை? பெண் வீட்டுக் காரரா?......நம்ம பக்கத்தவரா? ஏன் கல்யா

ணச் சந்தடியில் கலகலப்பாக இல்லை அவர்? ஊக்கங் காட்டவில்லை, மற்றவர்களைப்போல? அந்த நண்பர்கள் மூவரும் அவரை இணை பிரியாமல் இருக்கிறார்கள்......வேறு யாராவது அவ்வப்போது பேச்சுக் கொடுக்கிறார்கள் ......அவரும் சிரித்துப் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்......ஆனால் ஏன் ஒரு மாதிரி விலகினாற்போலவே நடந்துகொள்கிறார் கல்யாணத்திலே!......இப்படி ஒரு கேள்வி "கன்னூஞ்சலைப்போல லேசாக ஆடிக்கொண்டிருந்தது அவளுடைய இதயரங்கத்திலே. அந்த வாலிபன் திருமணத்தை ரசித்த விதம் அவளுக்கு "ஒரு மாதிரி"யாகத் தோன்றியது. ஆனால் அவன் 'தன்னை' ரசித்த விதத்தை மட்டும் அவள் குறை காணாமல் ஏற்றுக்கொண்டாள்—மனத்துள் பாராட்டினாள்.

அன்று மாலை நடந்த பாட்டுக்கச்சேரியில் பாடகர் ராகமாலிகையாகக் "கண்ணம்மா" பாட்டுப் பாடியபொழுது ராதை அந்தப் பாட்டின் கருத்தினிமையை ரசித்ததற்கும் குறை வில்லை.

"வெண்ணிலவு நீயெனக்கு,
மேவு கடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீயெனக்கு,
பாட்டினிமை நானுனக்கு;"

என்று பாடகர் பாடியபோது, ராதையின் 'நோட்டம் பார்க்கும் நோக்கு' வாலிபனின் பக்கம் பாய்ந்தபோது, அவனும் அதே போன்ற பார்வையை அவள்மேல் திருப்பி விட்டான். ஆனால் அந்த வேல் விழியைத் தழுவி ஏற்றது இவள் நெஞ்சம்! ஆனால் அந்த இன்ப நுகர்ச்சிக்குப் பின்—ராதைக்கு வாழ்க்கையிலே ஒளியே இல்லையோ என்று ஏங்கும்படி நேர்ந்தது. அப்புறம் அந்தப் பையனைக் காணவேயில்லை, கல்யாணப் பந்தலிலே!

ஒருநாள் கல்யாணம் என்ற தோரணையில் தான் எல்லாம் நடந்தாலும்......முதியவர்களான சபேசனின் பெற்றோருடைய திருப்தியை எண்ணி, ஔபாசனம், ஹோமம் முதலிய முக்கிய காரியங்கள் நான்கு நாட்கள் நடத்துவதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெரும்பாலானோர் உறவினர்கள் 'மள மள' வென்று தத்தம் ஊர்களுக்குப் புறப்பட்டுவிட்டார்கள். சில முக்கியமான நபர்களும், சபேசனின் குடும்பமும் "பிள்ளை வீட்டா"ராகத் தங்கினார்கள். பாலிய நண்பர் ஒரிருவரும், உறவினர் ஒருவரும் கோவையில் இருந்ததால், சபேசனுக்கு அந்தச் சலுகை.

திருமணத்தின் கோலாஹலமும் குறைக்கப்பட்டுவிட்டது, கண்களுக்கும் உள்ளத்திற்கும் விருந்தாக இருந்த இளைஞனும் போய்விட்டான், திடீரென்று — ராதைக்கு "வெறிச்" சென்று பட்டது சூழ்நிலைமை. இந்த மனச் சோர்வை அதிகமாக்கியது, சபேசனுக்கும் வேறொருவருக்கும் நடந்த சிறு சம்பாஷணை. அந்த வேறொருவர்—ராதையின் "அத்தான் மன்னி"யின் தந்தைதான். வேறு யாருமல்ல. திருமணப் பெண்ணின் அப்பா. அவருடைய பிள்ளைக்கு......ராதையைக் கொடுக்கலாம் என்று பிரஸ்தாபம் எழுந்திருந்தது அவர்களிடையே. பிரஸ்தாபம் முற்றிவிடவில்லை, "பேச்சு வார்த்தைகள்" ஓங்கவில்லை...... ஆனால் ராதை இதை ஒருவாறு கேட்டதும் திடுக்குற்றாள். ஏனெனில் "இந்தப் பிள்ளை"யை அவள் பார்த்துவிட்டாள்......பார்த்துக்கொண்டு மிருந்தாள் ...... கல்யாணப் பெண்ணின் அண்ணா...பொறியிட்ட அண்ணா, யாருடைய பார்வையிலிருந்து தப்பமுடியும்? அவன் கறுப்பாக, குண்டாக வேறே யிருந்தான்......நாலுபேர் வாயில் நுழைந்து புறப்படாமல் தப்புவானா?

அவளுடைய உள்ளத்தைக் கவர்ந்து மாய மாய் மறைந்துவிட்டான் அந்த அழகன். இந்த 'மன்மதனே' இவள் கண் முன்னே அடிக்கடி தென்பட்டுக்கொண்டு சிரிக்க வைத்துக்கொண்டு அதை அடக்கிக்கொள்ளும்படியாகவும் பாடுபடுத்திவிட்டு, இப்போது 'வரனு'கவும் வேதனை மூட்டுகிறான்!. ராதை இப்படித்தான் எண்ணினாள்.

அப்பாவின் மேலே கோபம் வந்தது ராதைக்கு. "இந்த அப்பாவுக்கு ஏன்தான் இப்படி சபலமோ?......'சட் சட்னு' மனசு மாறிவிடுகிறது!......எனக்கு எப்போது அண்ணாவைக் காட்டப்போகிறதாக உத்தேசம் வைத்துக் கொண்டிருக்காளோ, தெரியவில்லை! அத்தை சொன்னதும் 'புரோகிராமை' மாற்றி விட்டார்! இப்போது "ஈரோடு" சமாசாரமே மறந்துவிட்டு, இந்தக் கல்யாணப் பேச்சுப் பேசுகிறார்! எனக்கு இந்த 'இவருக்குக் கொடுக்கிறதாகப் பேச்சா?......பேஷ்......நல்ல கூத்து!......" என்று பொருமினாள் உள்ளம்.

ஆனால் இந்தக் கல்யாணப் பேச்சு பலப்படாது என்ற தைரியம் அவளுக்குஇருந்தது. இந்த வருஷம் தனக்குக் கல்யாணம் செய்யும் நோக்கம் அப்பாவுக்குக் கிடையாது என்பதை அவள் அறிந்திருந்தாள். "ஏதோ, பார்க்கலாமே வரன்!" என்று அம்மாவின் திருப்தியையும் முன்னிட்டுத்தான் அப்படிச் செய்கிறார் அப்பா என்று ஊகித்தாள்.

ஆனால் 'அனாவசியமாக' இந்த வரனைப் பற்றிப் பேசுவானேன். ஈரோடு பயணத்தைப்பற்றித் துரிதப்படாமல் இருப்பானேன்' என்று அப்பாமேல் குறைதான் அவளுக்கு.

இந்தியன் பாங்க்
லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
கார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் -	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ 53,00 000
ரிஸர்வ் நிதி - -	ரூ. 62,00,000

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

"அந்த அழகன்" தான் தனக்குப் பார்க்க வேண்டிய வரன் என்ற எண்ணம் அவளுக்கு! அண்ணாவைப் பார்க்க 'ஈரோடு' போகணும் என்ற துடிப்பு ராதைக்கு—அப்பாவின் போக்கு சினத்தை எழுப்பாமல் என் செய்யும்? இந்த மாதிரி வேதனையில் தான், பட்டணத்துச் சித்தியின் குடும்பம் கல்யாணத்திற்கு வரவில்லை என்ற நினைப்பே அவள் உள்ளத்தில் வந்தது! அதற்கு முன் அவள் உலவி வந்தது வேறொரு புதுமை யுலகில் அன்றோ?

அப்பா ஈரோடு பயணத்தைப் பற்றித் துரிதப் படவில்லை என்று ராதை நினைத்தாளே தவிர, உண்மையில் சபேசன் அப்படியிருக்கவில்லை. கல்யாண விடுதியிலிருந்து கோபுவின் தந்தை சுப்பையருக்கு ஒரு கடிதம் விடுத்திருந்தார். ஸ்டேஷனுக்கு அவர் 'இன்ன இரவு' வந்தால் தமக்குச் சௌகரியமாக இருக்கும் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

எல்லோருடனும் கோவையிலிருந்து புறப்பட்டார். அவர் தம் குடும்பத்துடன் ஈரோடிலே இறங்கிக் கொள்ளவும், மற்ற பேர் நேராகக் கரூர் போகவும் ஏற்பாடு.

ஈரோடு நிலையத்திலே வண்டி நிற்பதற்கு முன் ஊர்ந்து வருகையிலே, ராதை ஜன்னல் வழியாக எட்டி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். சபேசனும் பக்கத்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த வண்ணம், சுப்பையரைப் பிளாட் பாரத்துக் கும்பலிடையே கண்டு பிடிக்க முயன்று கொண்டிருந்தார்.

வண்டி நகர்ந்து கொண்டேயிருந்தது...... "அதோ—அந்தக் கம்பத்துக் கிட்ட........." என்று திடுக்கிட்டாற் போலச் சொன்னாள் ராதை.

"ஆமாம்.........அதோ கம்பத்துக் கிட்டத் தான் இருக்கார்!" என்று ஆமோதித்துக் கூவினார் சபேசன்.

"என்ன......நீயா முதல்லே கண்டு பிடிச்சே!......நீ பார்த்தது கிடையாது போலிருக்கே அவரை;" என்று வியப்புடன் வினவினாள் விசாலம்.

ராதை மிரள விழித்தாள் ஒரு கணம்... உடம்பெல்லாம் ஏனோ பதட்டங்கொண்டது, மார்பு பட பட வென்று அடித்துக் கொண்டது. ஆனால் அந்தச் சமயத்தில் அவளுடைய மௌனம் ஒரு பொருட்டாகத் தோன்றுமா? வண்டி நிற்கிறது... மள மள வென்று இறங்க வழி யல்லவா அப்போது கவனிக்க வேண்டும்? விசாலம் கேட்டாளே ஒழிய, பதிலை எதிர் பார்த்தாளா?......எதிர் பார்த்தாலும் ராதை பதில் சொல்லக் கூடிய நிலையில் இல்லை......

கம்பத்தினருகே இவள் பார்த்த நபர், அந்த அழகிய இளைஞன்! ஏதோ பட படப் பில் வார்த்தை நழுவி விட்டது நாவிலிருந்து!......ஆனால் கம்பத்தருகே சுப்பய்யரும் இருந்தார்! சபேசன் அவரைக் குறிப்பிட்டது சரிதான்!......

வண்டி நின்றுவிட்டது. சபேசனுடைய கையசைப்பைக் கண்ட சுப்பய்யர் இவர்கள் இருந்த பெட்டிக்கு வந்துவிட்டார். ராதை அதையும் கவனித்தாள். கம்பத் தருகேயே சிறிது தள்ளினாற்போல நகர்ந்துகொண்டு இடம் விட்டுப் புறப்பட விரும்பாததுபோலத் தோன்றிய இளைஞனையும் கவனித்தாள். ஏதோ எதிர்பாராத சந்திப்பை வெளிப்படுத்திக் கொள்வதுபோல, அவனுடைய கண்களும், ராதையின் கண்களும் ஒரே வினாடி சந்தித்தன.

இங்கே சபேசன் சாமான்களைப் பெட்டியிலிருந்து இறக்கிக்கொண்டே, நடுநடுவே ஓரிரண்டு வார்த்தை சுப்பய்யருடன் பேசினார். சுப்பய்யர் சபேசனின் பெற்றோரையும் தமக்கையையும் கல்யாணம் விசாரிக்கத் தொடங்கினார். விசாலம் பாலுவையும் லல்லுவையும் 'ஒரு கண்' பார்த்துக்கொண்டும், சபேசனுக்கு நடுநடுவே உதவியாகவும், மாமனார் மாமியாருக்குப் பேச்சனுசரணையாகவும் அஷ்டாவதானம் செய்துகொண்டிருந்தவள், திடீரென்று ராதையையும் பார்த்தாள்.

அப்போதுதான் ஜன்னலிலிருந்து தலையை உள்ளே இழுத்துக்கொண்டு, நாற்புறமும் பரக்கப்பரக்க விழித்துக்கொண்டிருந்தாள் ராதை.

"ஏண்டி ராதே!......என்ன......உத்ஸாகத்தை யெல்லாம் அடக்கிண்டு சாதுபோல இருக்கையே!......அண்ணாவை இன்னும் கால் மணி நேரத்தில் பார்க்கலாம் போ!" என்று சொல்லிக்கொண்டே,......ஏன் மாமா......... கோபு வரக்கூடாது......இப்பவே அண்ணாவைப் பார்த்திருப்பாளே ராதை!" என்று சுப்பையரைக் கேட்டாள் விசாலம்.

சுப்பையர் ஏதோ பேச்சிலீடுபட்டிருந்தவர்......எப்படியோ, அரை குறையாகக் கவனித்துவிட்டார் விசாலத்தின் கேள்வியையும். "ஏன்......வந்திருக்கானே......அங்கேயே நிற்கிறானா?" என்று கேட்ட வண்ணம், கழுத்தைத் திருப்பி, கதவு வழியே நோக்கினார். "டேய் கோபு......வாயேண்டா......!" என்று அழைத்தார்.

"கோபுவும் வந்திருக்கானா?" என்று சபேசனும், விசாலமும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த சமயம், ராதையின் மனசு "அண்ணாவும் வந்திருக்கானா......என்ன......இந்தப் பையனா......கோபு அண்ணா!" என்று துணுக்குற்று விட்டது.

சுப்பையருடைய அழைப்பை ஏற்று, கம்பத்தடியிலிருந்து விலகி இவர்கள் பெட்டியை நோக்கி வந்துகொண்டிருந்த பையன்—அவளுடைய மனதைக் காதலனாகக் கவர்ந்திருந்த இளைஞன் தான் என்பதைக் கண்ணுற்றதும் திடுக்கிடாமல் என் செய்வாள் ராதை!

சிரித்த முகத்துடன் வந்துநின்றான் கோபு. சபேசன் புருவங்களை உயர்த்தி ஒரு அரை வினாடி அவனைப் பார்த்து விட்டு...... "உம்... கோபுதான்......ஆனால் இவனை......எங்கேயோ சமீபத்திலே பார்த்தேனே!" என்று இழுத்தார்.

"எங்கே பார்த்திருப்பேள்......கல்யாணத்திலே தான்!......இவனும் வந்திருந்தானே!... ...முகூர்த்தத்துக்கு இருந்துட்டு வந்துட்டான்!......நீங்க சரியாகக் கவனிக்க முடிஞ்சிருக்காது!.........இவனும் வலுவிலே வந்து பேச்சுக் கொடுத்திருக்க மாட்டான்......என்னமோ திராதேன்னுதான் அங்கே ஒருநாள் பொழுதைக் கழிச்சுட்டு வந்திருக்கான்......" என்றார் சுப்பய்யர்.......

"உம்......பார்த்தேளா......அவனும் ஒதுங்கி ஒதுங்கித் தான் கல்யாணத்துலே இருந்திருக்கான் போலிருக்கு......அதான் நாங்கள் அவனை தெரிஞ்சுக்கல்லே! நீங்க யாரும் வரல்லேன்னு நினைச்சோம்......கோபு மட்டும் வருவான்னு நினைக்கல்லே......அவன் சிறு பிள்ளைன்னுதானே எங்கள் எண்ணம்......எப்போ பார்த்ததோ......அதானே மனசிலே பதிஞ்சிருக்கு!......அவனை 'ஓஹோ'ன்னு வளர்ந்துட்டான்!...... நன்னாருக்கு...... ராதைக்குப் பாவம்......அண்ணாவை அப்போதே காட்டியிருக்கலாம்!......எப்போ அண்ணாவை பார்ப்பம்னு துடிச்சிண்டு இருந்தாள்!......நன்னாக் கண்டு பிடிக்காமல் இருந்தோம்னு தோண்றது......அவரே தெரிஞ்சுக்கல்லேன்னா...... நானா தெரிஞ்சிண்டிருக்கப் போறேன்......" என்று எல்லோருக்கும் பொதுவாகப் பதில் மொழிந்தாள் விசாலம்......

"இப்போ உற்றுப் பார்க்கப் பார்க்க...... பழைய முகம் நன்னாத் தெரியத்தான் தெரியறது!......அப்போ மீசை முளைக்காத பையன்தான்......ஆனாலும் முகம் மாறவேயில்லையே......எப்படித்தான் கண்டுபிடிக்காமல் இருந்தேனோ" என்றார் சபேசன்.

"ராதே, அண்ணாவை நன்னாப் பார்...... அட......ராதையும் எப்படி வளர்ந்துட்டாளே......நாலு வயசு பெண்ணா அவளைப் பார்த்திருக்கேன்......அதுவும் ஒரே தடவை......" என்று ராதையை அப்பொழுதுதான்

நன்ருகப் பார்த்த சுப்பையர் பகர்ந்தார். அண்ணுவுக்கு முன்னே வந்து நிற்கும்படி, பெண்ணின் கையைப் பற்றிய வண்ணம் சிறிது தள்ளினுள் விசாலம், "ஐயோ...... நான் மாட்டேன்!" என்று பின்னுக்குப் பாய்ந்து மறைந்து கொண்டாள் ராதை. எல்லோரும் சிரித்தார்கள் குஷியாக! ராதையின் வேதனையை அவர்கள் கண்டார்களா?

எப்படியோ சபேசனின் குடும்பம் குதூகலமாக, சுப்பையர் வீட்டை அடைந்தது. கோபு சொற்பமாகத்தான் பேசினுன். "அப்பா கட்டாயப்படுத்தினுர்......கல்யாணத்துக்கு எப்படியாவது யாராவது போய் வரணும்னு! அதான் வந்தேன்!......நானும் அங்கே ஏனே தானேன்னுதான் இருந்துவிட்டேன்!......'நீங்கள்'னு தெரியவும் இல்லே... இல்லாவிட்டால் பேச்சுக் கொடுக்காமல் வந்திருக்க மாட்டேன்!" என்று சபேசனிடம் சொன்ன வண்ணம் தன் பக்கமும் ஒரு கண் வீச்சுப் போட்டதை ராதை வெகு நிதானமாகக் கவனித்தாள். அவ்வப்போது கோபுவின் கரு விழிகளும், ராதையின் கமலக் கண்களும் உரையாடிக் கொண்டிருந்தன வெனினும், அவற்றின் சம்பாஷணை முன்னிருந்த ரீதியில் இருக்கவில்லை. சிறிது மாறுபட்டுத்தான் இருந்தது.

"ஐயோ, நீங்களா எனக்கு அண்ணு?" என்று கேட்பதுபோல ஒரு வேதனையும் கூச்சமும் ராதையின் முகத்திலே ஊசலாடுவதைக் கோபு உணர்ந்தான்.

"ஐயோ......என்னையா நீ அண்ணு என்று இத்தனை காலம் போற்றி வந்தாய்?.........நீதான அந்த ராதை?" என்று கோபு கேட்பது போல ஒரு ஊகம்......பிரமை, ராதைக்கு.

தங்கு தடையற்ற உவகைப் பெருக்கோடு முந்தி கண்ணேட்டம் நிகழ்ந்தது. ஆனல் இப்போது குன்றுகளுக்கும் பாறைகளுக்கும் இடையே பாய்ந்து செல்லும் நதிப் பெருக்கை யொத்திருந்தது இவர்களுடைய உள்ளம்.

"அண்ணு" வீட்டில் ராதை பதுங்கிப் பதுங்கி யிருப்பதைப் பார்த்து மற்றவர்களுக்கு......கோபு தவிர மற்றவர்க்கு......... சிரிப்பாகத் தான் இருந்தது. 'ஐயைய'...... அண்ணு, அண்ணுன்னு என்னமோ பறந்தாளே!......இப்போ வெட்கத்தைப் பாரேன்' ......ஒரு வார்த்தை பேசக்காணேம்!......... அண்ணுன்னு ஆசைதீரக் கூப்பிடக்காணும்! ....நல்ல பொண்ணு!" என்று விசாலம் சபேசனிடம் சொல்கிறுப் போலச் சொல்லி, சிரிசிரி என்று சிரித்தாள்.

"ஏய் ராதே!......அப்புறம் ஊருக்குப் போய், தொண தொணப்பக்கூடாது!...... இப்போ நாலுநாளுக்குள்ளே நன்ருப் பழகு அண்ணுகிட்ட! ஊருக்குப் போய்க் கடுதாசி எழுத ஆரம்பிக்கணும்னு சொல்லிண்டிருந்தே! அங்கே போய் எழுதறதா வேண்டாமான்னு அல்லாடப்போறே......பத்திரம்!" என்ருர் சபேசன்.

"கோபு! நீ தான் முதல்லே தங்கையைப் பேச்சுக்கு இழேன்!......" என்று கோபுவையும் கிண்டினுர். எல்லாவற்றுக்கும் கோபு புன்னகை செய்துவிட்டுச் சும்மா விருந்தான். ராதை......"ஐய......இந்த அப்பாவையும் அம்மாவையும் பாரு......ஏனிப்படி என்னை வதை பண்ணனும்!" என்று பொருமிக் கொண்டிருந்தாள். என்னதான் பொருமினுலும் முகத்திலே ஜொலிப்பும், ஒரு நாணமும் ......புன்னகையும் மறையவில்லை.

கல்யாணப் பந்தலில் பெண்ணையும் பிள்ளையையும் 'ஆட்டிவைத்து' வேடிக்கை பார்ப்பார்களே அதுபோலத்தான் ஒரு தமாஷ் விஷயமாக இருந்தது எல்லோருக்கும். ராதையும் மணப்பெண்ணைப் போலத்தான் நாணிக் கோணிக் கொண்டு ஒளிந்துகொண்டிருந்தாள். கோபுவும் மணமகனைப் போலத் தான் ஒரு அசட்டுப் புன்னகையுடனும் ஆனல் விருப்புடனும் அவற்றை ஏற்ருன். ஆனல் உள்ளூர ராதைக்கும் கோபுவுக்கும் ஒரு வேதனை இருக்கத்தான் இருந்தது.

கோபுவைக் காதலன் என்ற தோரணையில் தான் ராதையின் புலன்களனைத்தும் பாவித்தன வெனினும், அவன் 'அண்ணு' என்ற நினைப்பு எக்களிப்புடன் கூத்தாடியது. ராதையைக் காதலி என்ற போக்கிலே தான் கோபுவின் உள்ளம் பார்த்திட்டாலும், தங்கை யென்ற நினைப்பிலேதான் இருந்து வந்தவள் ராதை என்ற எண்ணம் பாதை செய்தது.

ராதைக்கு ஊருக்குப்போகணுமே என்றும் வேதனை. ஊருக்குப் போனலாவது அப்பா அம்மாவின் 'நச்சு' குறையுமோ என்றும் யோசனை.

ஒருநாள் பிற்பகல் சபேசனும் சுப்பையரும் ஊஞ்சற் பலகையில் அமர்ந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். ராதையைப் பற்றிப் பேச்சு வந்தது.

என்னதான் இருந்தாலும்......முன்பின் அறியாதவர்களாச்சே......இரண்டும் சிறிசுகள்......கூச்சப்படத்தான் படும்......அப்போ மூன்று வருஷத்துக்கு முந்தியே பழக்கம் ஏற்பட்டு இருந்திருந்தால் இப்போ இந்தக்கூச்சம்

இருந்திருக்காது......என்னமோ அப்போ அப்படி ஏற்பட்டுப்போச்சு......நீங்களும் வராமலேயே ஊருக்குப் போய்ட்டேள்'' என்றார் சுப்பய்யர்.

"ஆமாம்......ஆமாம்......'' என்றார் சபேசன்.

"நான் சொல்றேனேன்னும் வித்தியாசமா எண்ணிவிடக்கூடாது...... பாருங்கோ!...... இப்போ கோபுவும் ராதையும் அண்ணன்—தங்கைன்னு......அண்ணன் தங்கையாகி விடுவாளா?......துளியாவது ரத்த சம்பந்தமான உறவானுக்கே......அந்த 'ரத்தசம்பந்தத்தி'ன் மகிமையாகப்பட்டது......இந்த மாதிரி கூச்சப்பட வைக்காது......என்ன சொல்றேள்!......'' என்று கூறி நிறுத்தினார் சுப்பய்யர்.

"உம்......உம்......ஆமாம்......'' என்றார் சபேசன்.

"இப்போ பாருங்கோ!......சித்தி குழந்தைகளுக்குப் பெரியப்பா பிள்ளைன்னாலும்...... தனக்கும் அண்ணா என்கிற அந்த நம்பிக்கையிலே......குழந்தை, 'அண்ணா' இல்லாக் குறையைத் தீர்த்திண்டிருக்கா......விசாலம் கெட்டிக்காரிதான்......நன்னாத்தான் சோடிச்சிருக்காள்!'' என்று கூறிச் சிரித்தார் சுப்பையர். மூக்குப் பொடியை ஒரு இழுப்பு இழுத்தார்.

சபேசனும் லேசாகச் சிரித்தார். சமையலறைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்த விசாலத்தையும் பார்த்தார். "சோடித்த உறவு'' என்ற வார்த்தை ராதையின் உள்ளத்தை உலுக்கப் போகிறதே என்னும் அச்சம்தான். குயவனுக்குப் பலநாள் வேலை, தடியனுக்கு ஒரு நிமிஷ வேலை என்பதுபோல நல்லவேளை ராதையைக் காணவில்லை அங்கே.

மூக்கைத் துடைத்துக்கொண்டு பேச்சைத் துவக்கினார் சுப்பய்யர்.

"இப்போ......பாருங்கோ......இப்ப நான் சொல்ல வருகிறது எனக்கே பாந்தமாயில்லை......இந்த மாதிரி நடந்திருக்காட்டா—நம்ம பையனுக்கு.........குழந்தையைப் பண்ணிக் கொள்ளக்கூட பேச்சு எடுத்திருப்போமோ என்னமோ......இல்லையா...... சொல்லுங்கோ......நடந்திருக்கக் கூடியதுதானே......நீங்க வேறே குடும்பம்......நாங்க வேறே குடும்பம்......கோத்திரம் தனித்தனி......ஈடு ஜோடும் நன்றாவே பொருந்தியிருக்கும்!...........ஆறு வயசோ......ஏழு வயசோ வித்தியாசம்...... அப்படித்தானே!......'' என்றார் சுப்பய்யர்.

"இதேதடா!......'' என்றுகூடத் தோன்றியது சபேசனுக்கு.........சுப்பய்யரின் பேச்சு 'வழ வழா'ப் பேச்சாகப்பட்டது.

"அப்படி விடாதேங்கோ, மாமா......ராதை கேட்டால் எகிறிக் குதிப்பாள்!......அண்ணா இல்லேன்னா, எங்களைச் சும்மா விடமாட்டாள்! ......அப்புறம் எங்கள்பாடு திண்டாட்டம்!'' என்று சிரிப்போடு சொல்லிவிட்டார் சபேசன்.

சுப்பய்யரின் பேச்சை மாடிப் படிகளின் மேலே உட்கார்ந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந்த ராதை உண்மையிலேயே துள்ளிக் குதிக்கத்தான் ஆவேசம் கொண்டாள். ஆனால் மாடிப்படியின் ஓரத்திலே துள்ளிக் குதித்தால், உருண்டு அல்லவா விழவேண்டியிருக்கும்?......அவளுடைய உள்ளத்துடன் அடங்கியது அந்தத் துள்ளல். சுப்பையரின் கடைசி வார்த்தைகள் உந்திய ஒரு உள்ளக் கிளர்ச்சியை, அப்பாவின் சொற்கள் அடக்கின. எனினும், கடலலைகளிலே அமுங்கி விடாமல் உல்லாஸ நர்த்தனம் செய்யும் சுரக் குடுக்கை போல அவளுடைய மனசு களிநடம் புரியத் தொடங்கியது.

யாரோ நண்பன் வீட்டிலிருந்து அப்போதுதான் திரும்பிவந்த கோபு, மெல்ல ஏதோ பாட்டின் அடியைப் பாடிக்கொண்டே மாடிப் படிகளில் ஏற வருவதை உணர்ந்த ராதை, 'விசுக்' கென்று-எழுந்து வராண்டா வழியே, மாடி ஹாலின் பின்புறத்தை யடைந்து, அந்தப் பக்கத்திலிருக்கும் மாடிப் படிகளின் வழியே இறங்கி, கிணற்றங்கரைப் பக்கத்திலிருந்து வீட்டுக்குள் வந்து புகுந்துகொண்டாள். எல்லாம் இரண்டு விநாடிகளில்! கடலலைகள் கரையில் வந்து விழும்போது அந்தக் கடல் நீரிலே விளையாடப் பயமும் ஆசையும் ஒருமிக்க உணரும் குழந்தை, சங்கடமும் சந்தோஷமும் ஒருங்கே தோன்ற ஆசையை ஓரளவு நிறைவேற்றிக் கொள்ளுமே...... அதுபோல முதல் இரண்டு நாட்களையும் ஒரு விசித்திர நிலைமையில் கழித்த ராதை, அடுத்த இரண்டு நாட்களையும் கலப்பற்ற மகிழ்வுடன் கடத்தினாள்.

"ஏண்டி ராதை!......இப்போவாவது ஒரு தரம் அண்ணாவோட பேசிவிட்டு வந்துடு!...... ஆமாம்...... சொல்லிட்டேன்...... ஊருக்குப் போனப்புறம் கடுதாசி எழுதலாம்!'' என்றார் சபேசன் ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம்.

"போப்பா!'' என்று நெளிந்தாள் ராதை.

"எனக்கென்ன!.........ஊருக்குப் போய் அண்ணா அண்ணான்னு அலட்டினாயோ...... அப்போ சொல்லுவேன்!'' என்று கடுமையாகக் கூறினார் சபேசன். பெண்ணின் பிடிவாதம் தளராதது கண்டு அவருக்குக் கோபம். இத்தனை நாளும் எப்படி 'ஆட்ட மாடித் தம்மையும் ஆட்டி வைத்தாள் என்று ஆத்திரம்.

"ஆகட்டும்.........அலட்டல்லை!" என்று மெல்ல முணுமுணுத்து விட்டுச் சும்மா விருந்தாள் ராதை. யார் செவியிலும் அவள் முணுமுணுப்பு விழுந்திருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

அந்த வீட்டிற்கு வந்ததும் "அண்ணா அண்ணான்னு இனிமேல் ஊரிலே அல்லாடாதே!" என்று வேடிக்கையாகச் சொன்னபோது, குபு குபு வென்று கண்ணீர் பெருக்கிவிட்டு உள்ளே ஓடின ராதை, இன்று இந்தக் கடுமையான தொனிக்குக் கலங்காமல் இருந்ததைக் கண்டு சற்று வியந்தார் சபேசன். தெர்மா மீட்டரிலிருக்கும் பாதரச இழை மிக மெல்லியது தான். உடம்புச் சூட்டுக்கு உள்ளூர மேலேறும் அந்த இழை, தன் சுற்றிலும் இருக்கும் கண்ணாடிக் குழாய் மேல் ஒரு செம்பு பச்சை ஜலம் பட்டாலும் கீழிறங்குமா? பலமாகக் குலுக்கப்பட்டால் தானே இறங்கி வரும்? சபேசனின் இந்த அதட்டல், ராதையின் பிடிவாதத்தை உலுக்கும் தன்மை வாய்ந்ததல்லவே! அவளுடைய மனப் போக்கு மாறியிருந்தது அன்றோ? கடைசியில் ஒரு கூர்ந்த பார்வையுடன் கோபுவின் பார்வையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போனாள் ராதை. சொந்த ஊர் 'கட்டாக்' திரும்பியாச்சு.

"அம்மா! காதலன், சகோதரனாக மாறுவது பல பெண்களுக்கு இந்நாளில் அனுபவம். காதல் வெற்றி பெறாமல், வேறு புருஷன் கணவனாக வாய்க்கும்போது.........ஏமாற்றமடையும் பெண்களுடைய மனப் போக்கு அப்படி மாறுவதுதானே இயல்பு?

ஆனால், அண்ணா என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேனே......அவர் எனக்குக் கணவராக மாறமுடியும் என்ற 'அதிசயத்தை' நான் எப்படியோ தெரிந்துகொண்டுவிட்டேன். என் விஷயத்திலே இதுபோல அதிசய கல்யாணம் நடப்பதை நீ தடுப்பாயா? நிறைவேற்றி வைப்பாயா?"

இந்தக் கேள்வியை......தன் மனத் துடிப்பை......காகிதத் துண்டிலே பதித்துவிட்டு, சாமர்த்தியமாக ராதை பக்கத்தகத்துக் குடும்பத்துடன் சாயங்கால ஆட்டம் சினிமா பார்க்கப் போய்விட்டாள். திரும்பி வருவதற்குள் சதிபதி யாலோசனை நடக்கட்டுமே என்ற எண்ணம்! சினிமா பார்த்துவிட்டு வந்ததும் 'கப்சிப்' பென்று போய், படுக்கையில் படுத்துக்கொண்டு விட்டாள்.

இவளுடைய கடிதத்தின் பலன் மட்டும் பதினைந்து நாட்களுக் கப்புறம்தான் பழுத்தது. வெகு தந்திரமாகப் பதுங்கி யிருந்து, திடீரென்று மணத்தை வீசிக்கொண்டு 'கம கம' வென்று அம்பலத்திற்கு வரும் பலாப் பழத்தைப் போல, ராதையின் திருமணப் பேச்சு மணம் பெற்றது. உடனுக்குடனே பறந்த கடிதங்கள் மூலம், ராதை—கோபு இவர்களுடைய மனப் பொருத்தமும் பெயர்ப் பொருத்தமும், ஜாதகப் பொருத்தத்தின் ஆமோதிப்பையும், பெரியவர்களின் ஆசியையும் பெற்றன.

"மங்கலத் தாலியுடன் துலங்கும் எனக்கு, இனி உலகம் முழுதும் சகோதர சகோதரிகள் தான்! அண்ணா என்று நான் மதித்திருந்த ஒரே ஒருவர், கணவராக என்னுள்ளே ஒன்று பட்டுவிட்டாரே!......அவரே என் உலகம்..." என்று பெருமிதம் கொண்டுள்ள ராதையின் உள்ளம், "இதுபோன்ற விந்தைத் திருமணத்தைப்பற்றி **ஏடுகள் சொல்வதுண்டோ?**" என்றுதான் கேட்கிறது. ஆதரிசக் காதலர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் புராணகால ராதையையும் கோபாலனையும் அத்தை—மருமகன் என்று ஓரிரண்டு குட்டிக் கதைகள் சொல்வதை ராதை அறியாள்!

அறிந்தாலும், கெட்டிக்காரி ராதை அதைப் பொருட்படுத்த மாட்டாள்! துவாபர யுகத்திலே 'அந்த மாதிரி' இருவரும் தோன்றி விட்டு, இந்தக் கலியுகத்திலே 'இந்த மாதிரி' அவதரித்து இருப்பதாகக் கூறி விட்டு, பெயர்ப் பொருத்தத்தை எடுத்துக் காட்டி வாயைக் கட்டி விடுவாள்!

அவளுக்கு 'அண்ணா' கிடையாதே என்றும் யாரும் பரிகசிக்கப் போகவேண்டாம். அன்புக்கும் ஆதரவுக்கும், இனிய குணங்களுக்கும் உறைவிடம் அண்ணன் என்று 'சிறு வயதில்' அவள் எண்ணினாள். ஆனால் கணவன்தான் அத்தகையவன் என்பதை இந்த மங்கைப் பருவத்திலே அவள் உணர்ந்து கொண்டு விட்டாள். இனி அவளுடைய வாணாளின் இன்பத்துக்கு ஊற்று இந்தப் புத்துணர்ச்சி தானன்றோ?

அலை மனம்

வே. ரங்கராஜன்

நடுச்சாமக் கோழி கூவி ஒரு நாழிகை சென்றுவிட்டது. சங்கிலிக்கறுப்பன் கோவில் முன்னாலே உட்கார்ந்த வண்ணம் ஓயாது அலை கடலையே நோக்கிப் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள், பச்சையம்மா. பின் நில வெரித்துக் கொண்டிருந்தது. கோவில் வன்னி மரப் பொந்துகளில் வாசம் செய்து வந்த ஆந்தைகள் மட்டுமே அலறின. பரதவர் குடிசைகளின் இடையே ஆங்காங்கே ஓங்கி வளர்ந்திருந்த தென்னை மரங்கள் தம் செம்பசும் கீற்றோலைகளால் பால் நிலவைப் பள பளக்க வைத்தன. இவைகளில் ஒன்றிரண்டில் குறும்பைகளைக் கடிக்கும் மர நாய்கள் அமைதியைக் குலைத்தன. சற்று முன்தான், அதோ, அங்கிருக்கும் குடிசைகளில், ஆரவாரம் ஓய்ந்தது. அன்று இரவு அந்தப் பரதவர் சேரி நடுவே உள்ள கன்னியம்மன் கோவிலில் 'லாவணி' முழங்கியது. இப்போது கண்ணுக்கெட்டிய மட்டும் உள்ள சுற்று வட்டாரத்திலே இருந்த ஜீவராசிகள் அனைத்தும் இரவின் மோனத்திலே லயித்து மயங்கிக் கிடக்கின்றன.

ஆனால் ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும் கலங்கரை விளக்கத்தைப் போல், பச்சையம்மாவின் மனம் சுழன்று கொண்டிருந்தது. பூசாரி சிங்காரம் தன்னை இப்படி பழி தீர்த்துக் கொள்வான் என்று அவள் எண்ணவே யில்லை.

பூசாரி சிங்காரம் அந்தச் செம்படவர் சேரியில் செல்வாக்குள்ள பேர்வழி. அவனுக்கு வயது சுமார் முப்பது இருக்கும். ஆனால் அவன் உடலில் இளமை துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. சிவந்த மேனியுள்ள அவன் நடையிலும் பேச்சிலும் பாமரர்களை வசீகரிக்கும் சக்தி இருந்தது. நாள் முழுதும் கடல் மேல் வலைவீசச் சென்று உழைக்க மனம் இல்லாத அவன், சுகவாசியாக உடுத்துத் திரியலாம் என்ற எண்ணத்துடன், மிலிட்டரியில் சேர்ந்தான். தெய்வாதீனமாய், அவன் சேர்ந்த பட்டாளம் போர் முனைக்குச் செல்ல வேண்டி வந்துவிட்டது. வெற்றிகரமாக வாபஸ் செய்யும் போது ஓடி வந்த வேகத்தில் கீழே விழுந்து வலது கையை ஒடித்துக் கொண்டான், சிங்காரம்! சரியான சமயத்தில் வைத்திய உதவி செய்யப்படாததால், உடைந்த எலும்பு சதையைக் கிழித்துக் கொண்டு வந்து புண்ணாகிப் புரைகொண்டுவிட்டது. மிகச் சுலபமான முறையில் நாளில் ஆயிரக் கணக்கான கேஸ்களைக் கவனிக்க வேண்டியிருந்த மிலிட்டரி டாக்டர் அவன் புஜத்தின் கீழ் நாலு அங்குல நீளம் வரை விட்டு, கையைத் துண்டித்து விட்டார்! இதன் விளைவாகச் சிங்காரத்திற்கு மிலிட்டரியிலிருந்து விடுதலை கிடைத்தது. விடுவிக்கும் போது கை நிறையக் கொடுத்த பணத்துடன் திரும்பி வந்து சேர்ந்தான் சிங்காரம்.

சண்டைக்குப் போன மகன் நொண்டிக் கையுடனாவது திரும்பி வந்தானே என்று அவன் தாய் சந்தோஷப் பட்டாள்.

அவளுக்கு அவன் ஒரே பிள்ளை; வேறு நெருங்கிய சுற்றத்தாரும் இல்லை. ஆகவே தாயும் மகனும் ஒருவருக்கு மற்றவர் துணையாக வசித்து வந்தனர். தன் மூச்சுள்ளபோதே சிங்காரத்திற்குக் கால் கட்டு போட்டுவிடவேண்டுமென்பது அவள் ஆசை. ஆனால் அவன் என்னவோ இதற்குச் சம்மதிக்கவில்லை.

பட்டாளத்திலிருந்து வந்த புதிதில் அவன் கையில்காசு கொஞ்சம் மிதப்பாகவே இருந்தது. ஆகவே சேரியின் தென் கிழக்கு மூலையில் சிதைவுண்டு கிடந்த கன்னியம்மன் கோவிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தான், சிங்காரம்,

தன் சொந்தச் செலவில் மட்டுமல்ல; ஊர் தண்டியுந்தான். அது முதற் கொண்டு அவனே அக் கோவிலின் நிர்வாகஸ்தனாகவும் பூசாரியாகவும் இருந்து கொண்டு சுகவாழ்க்கை நடத்தி வரலானான். திருவிழாவுக்கெனப் பொதுவரி வசூலித்தும், கோவிலில் தினம் தீபமேற்றி நிவேதனம் செய்வதற்கென மாமூல் வசூலித்தும், கோவிலில் சீட்டெழுதிக் கட்டுதல், வைப்பு சூனியம் இவைகளைப் பிறர் மேல் ஏவுதல், நீக்குதல் இப்படி வருவாயை வளர்த்துக் கொண்டான், சிங்காரம். இதனாலெல்லாம், மற்றச் செம்படவர்களைப்போல் உழைத்துப் பாடுபடா விட்டாலும், சுகபோகமாக வாழ்ந்து வந்தான். சுக வாழ்வு சும்மா விடுமா? வாழும் ஊரிலே அடிப்பாரற்றுத் திரியும் பித்தேறிய நாயைப்போல் தலை கிறுகிறுத்தது. உழைப்பாளிகள் கடல் மீது சென்றதும், விபூதிப் பூச்சு, சந்தனம், குங்குமப் பொட்டு இவைகளுடன் கையில் மயில் பீலி, பிரம்பு, சிலம்பு, மஞ்சள் பொடி இவைகளுடன் வீடு வீடாகச் சென்று கண்வலை வீசுவதையே தொழிலாகக் கொண்டு விட்டான், கன்னியம்மையின் பெயரைச் சொல்லிக் கொண்டு அவன் சேரியின் எந்தக் குடிசையுள்ளும் பிறர் சந்தேகப்பட இடமின்றி நுழைந்துவரச் சௌகர்யம் இருந்தது. பிறகு கேட்பானேன்! இளமையும் அழகுமுள்ள எத்தனையோ பெண்களைத் தன் வலையுள் சிக்க வைத்துவிட்டான். இப்படி நீண்ட நாட்களாக நடந்து கொண்டு வருகிறது. பகல் முழுவதும் கடல் மீது வலை வீசச் சென்று விடும் வலைஞர்களுக்கு இது தெரியாது.

இப்படி தான்தோன்றித்தனமாகத் திரிந்த பூசாரி சிங்காரத்திற்குப் பச்சையம்மா பெரிய புதிராக இருந்தாள். அவள் மேனியழகிலே அவன் மயங்கி மதியிழந்து விட்டான். வழக்கம்போல் அவள் மீதும் தன் மோக வலையை வீசினான். ஆனால் அவள் நாகமெனச் சீறி யெழுந்தாள்.

இண்டோ கமர்ஷியல் பாங்க்

லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:-	சென்ட்ரல் ஆபீஸ்:-
மாயவரம்	மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

2

கையில் முழ நீளக் கோலை எடுத்துக் கொண்டு, 'சோஸ்யம் பாக்கலையா சோஸ்யம்!' என்று ஒரு யாழ்ப்பாணப் பெண் ஒரு நாள் இந்தச் சேரிக்கு வந்தாள். பூசாரி சிங்காரத்திற்குச் சரியான யோசனை ஒன்று தோன்றியது. அவள் மூலம் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள எண்ணிய அவன் அவளைத் தனி யிடத்திற்கு இட்டுச் சென்று, கையில் ஒரு வெள்ளை ரூபாயைக் கொடுத்து, "அதோ அந்தக் குடிசைக்குப் போ. அந்த வீட்டிலே பச்சையம்மான்னு ஒரு பெண் இருக்காள். அவளுக்கு,

'பிள்ளைக் கலியே பெரிய கலி யாச்சம்மா!
கன்னியே உனக்கு காசிருந்து என்ன பலன்?
பாலூட்டி வளர்க்க பிள்ளையொன்று
வேண்டாமா?

கண்ணாலம் கட்டி காலமது போச்சுதே!
தங்கமே உனக்கு சிங்கமொன்று ஏனில்லே?
கணவனவன் உன்மேலே கருத்தாக
இருப்பதில்லை!

காசோ காசென்று காற்றைப்போல் அலைகிறான்!
கடல்மேலே சென்று கழுகுபோல் திரிகிறான்!
பிள்ளையது பெற்று பாலூட்டி சீராட்டி
கொஞ்சிக் குலவி கூப்பிட வேணுமானால்
கன்னியம்மா கோவிலுக்கு காலை மாலை
போய்வா!

பட்சமது மூன்று பாய்மீது படுக்காதே!
காத்தவ ராயனைப்போல் குமரன் பிறந்திடுவான்!'

என்று சொல்லவேண்டும்!. அவள் மனதைக் குழப்பிவிட்டு வந்துவிடவேண்டும்!'' என்று அந்த யாழ்ப்பாணத்து ஜோஸ்யக் காரியிடம் சொல்லி யனுப்பினான், பூசாரி சிங்காரம்.

உப்பில்லாமல் கலக் கஞ்சி குடிப்பவளுக்கு ஒரு பச்சை மிளகாய் கிடைத்து விட்டால் கேட்க வேண்டுமா? அந்த ஜோஸ்யக்காரப் பெண், அவன் சொல்லிக் கொடுத்ததையும் தனக்குத் தெரிந்ததையும் சேர்த்துப் பெரிய பாட்டாகவே இட்டுக் கட்டி, பச்சையம்மாவின் மனதைக் குழப்பி, அவளிடமும் இரண்டு வீச ரூபாய் வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

இதன் விளைவாகப் பச்சையம்மா தினம் கன்னியம்மன் கோவிலுக்குப் போய் வரத் தொடங்கினாள். பிள்ளை யில்லாத குறை பெருங்குறை யாகிவிட்டது அவளுக்கு. கன்னியம்மன் கோவில் பூசாரி என்ற முறையில் அவளுக்கு விசேஷ உபசாரங்கள் செய்து கரம் தீண்ட முயன்றான், சிங்காரம். பச்சையம்மா மீண்டும் நாகமெனச் சீறினாள்; கோவிலுக்குப் போவதையே நிறுத்திவிட்டாள்.

இதன் பிறகு ஒரு மாதம் கழித்துப் பச்சையம்மாவின் கணவன் ஐயப்பனுக்கு வைசூரி கண்டது. பெரியம்மை அமிதமாகப் பூரித்துக் கவலைக்கிடமாய் விட்டது. சாமிக் குற்றம் என்று வந்து பார்த்துப் போனவர் சொல்லவே கன்னியம்மனுக்கு வேண்டிக் கொண்டாள், பச்சையம்மாள். அம்மை இறங்கியதும், கடலில் செல்லு முன், பூசை போட ஏற்பாடு செய்தான், ஐயப்பன். பச்சையம்மா மிக்க பய பக்தியுடன் பூஜைக்கு வேண்டிய நிவேதனப் பொருள்களைத் தயாரித்து வைத்தாள். பொறுக்கியெடுத்த கருவாட்டுத் துண்டங்களும் கத்தரிக்காயும் போட்டுக் குழம்பு சமைத்தாள். முருங்கைக் கீரையுடன் எள்ளுப் பிண்ணுக்கு போட்டுச் சுண்டிவைத்தாள். இருப்புப் பூண் இல்லாத மர உலக்கையால் அப்பொழுதே குற்றி, முறத்தி விட்டுப் புடைக்காமல், விசிறியால் விசிறி உமி போக்கி, முனை மழுங்காமல் பத்துப் புறங்கை அரிசி சேகரித்து, புதுப் பானையில். நாற்சந்தி கூடு மிடத்தில் பொங்க விட்டு எடுத்து வைத்தாள். இவை யாவையும் தன்னந் தனியளாக, மூச்சு மட்டும் இமையக் கீழே போகும்படி விட்டு, மூக்கு வாய் இவைகளின் மேல் துணியைக் கட்டிக் கொண்டு, பய பக்தியுடன் செய்து முடித்தாள், பச்சையம்மாள். செய்து வைத்த படையல் பொருள்கள் யாவையும் வைத்து, நிவேதனம் செய்யும் சமயத்தில் பூசாரி சிங்காரத்திற்கு அமர்க் களத்துடன் ஆவேசம் வந்து விட்டது. ஐயப்பன் குடிசை கிடு கிடுத்தது. மற்றக் குடிசைகளில் இருந்தவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். கன்னியம்மா உற்பவமான அந்த அரிய சந்தர்ப்பத்தை ஒவ்வொருவரும் கை நழுவ விடாமல் பயன் படுத்திக் கொள்ள எண்ணி,

தங்கள் தங்கள் குறைகளைக் கேட்டுத் தெளிய விரும்பி, ஆவேசத்தைப் பன்மடங்காகத் தூக்கி விட்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு, 'தெய்வம்' உடனுக்குடனே பதிலிறுத்தது. ஐயப்பனும் பச்சையம்மாவைத் தூண்டினன். நாணத்தால் எண்சாணுடம்பும் ஒரு சாணுகக் குறுக, "தாயே! கன்னியம்மா! எனக்கு எப்போ பிள்ளை பிறக்கும்?' என்று கேட்டாள். உடனே 'தெய்வம்' பலத்த ஹோ கா காரமிட்டு, கண்களை நாலா புறமும் சுழற்றி, பெருத்த கனைப்பு ஒன்று கனைத்து,

"சண்டாளி நீலி சதிகார வெள்ளாட்டி!
பிண்டமே உண்டுனக்கு
பிறக்குமது பருவத்தில்
கண்டவன் மீது கண்வலை வீசாதே!"

என்று விடையைப் பாட்டாகவே விளாசியது! பச்சையம்மாவின் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. ஐயப்பன் அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். சுற்றிலும் இருந்தவர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தனர். ஆர்ப்பரித்த ஆவேசத் தெய்வம் எரியும் கற்பூரக்கட்டியைக் கையிலே வாங்கி வாயில் போட்டு,—(அவித்து)— விழுங்கிவிட்டு 'மலையேறிப் போய் விட்டது!' பூசாரி சிங்காரம் தன் சுய உணர்வுடன் பேசி, தனக்குச் சேரவேண்டிய காணிக்கைகளைப் பெற்றுச் சென்று விட்டான்.

கன்னங்களில் கைகளை ஊன்றிய வண்ணம் ஐயப்பன் உட்கார்ந்து விட்டான். விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சாம்பிராணி புகைந்து, ஊதுவத்திப் புகையுடன் கலந்து, குடிசை முழுதும் வியாபித்து வெளியேறிக் கொண்டிருந்தது. பச்சையம்மாள் மௌனமாக உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். அன்று கோழி கூவும்போது எழுந்து, பம்பரம் போல் சுழன்று, இடுப்பு ஒடிய வேலை செய்து கன்னியம்மனுக்குப் படைத்ததற்கு இதுவா பலன்? சிங்காரம் பழி வாங்கி விட்டானே!

3

சிள்வண்டுகள் பயங்கர சப்தமிட்டன. இருந்தும் பச்சையம்மா சங்கிலிக் கறுப்பன் கோவிலை விட்டு எழுந்து போகவில்லை.

ஆவேசம் வந்த பூசாரி ஊர் அறிய அப்படிச் சொல்லி விட்ட பிறகு பச்சையம்மாவுடன் எப்படி வாழ்க்கை நடத்துவது? என்ற சிக்கலான பிரச்னையை ஐயப்பன் விடுவிக்க முயன்று கொண்டிருந்தான். அதைக் காதால் கேட்ட நேரத்திலிருந்தே, அதுவரை பெண்ணுகக் கிரகதர்மம் செய்த அவள் இப்போது தன்னுள் விஷமுள்ள மனை நாகமென அவன் கண்களுக்குப்பட்டாள். அவளை என்ன செய்வது? அடித்துத் துரத்திவிடலாம் என்ருல் எங்கே துரத்துவது? அவள் அலுத்துப் போகத்தாய் வீடுகூட இல்லையே!

இரவு முழுவதும் சிந்தனை வலையுள் சிக்குண்டு கிடந்த அவனுக்கு ஒருவழியும் தோன்றவில்லை. காலையில் எழுந்து கடல் மீது சென்று விட்டான். புறப்படாமல் நின்று விடலாமா? என்றுகூட எண்ணினன். இல்லை, அது நல்லதல்ல. கூட்டாளிகள் அனைவரும் எதிர் பார்த்திருக்கும் பொழுது போகாமல் தங்கிவிடுவது அழகாகுமா? மேலும் மறுநாள் செலவிற்குக் காசில்லை. கடல்மேலே போனுல்தானே காசு. தினம் தினம் கடல்மேல் சென்று வந்தும், ஒரு நாள் அலுத்து நின்று விட்டால் செலவுக்கு ஆகுமே என்று மீத்து வைக்கும் வழக்கந்தான் உண்டா? மீத்து வைக்கத்தான் முடிகிறதா என்ன? அவர்கள் இரண்டே பேர்தான். வரவுக்கும் செலவுக்கும் சரியாகத்தான் இருந்தது. என்றும் வற்றுத களஞ்சியமாகக் கடலையும் அதனுள் மீனையும் கடவுள் படைத்திருக்கும் போது மீத்து வைக்கவேண்டிய கட்டாயந்தான் என்ன? அது கிடக்கட்டும். இந்தக் குட்டி பிச்சையம்மா செய்யும் பகடி வித்தையை உண்டு இல்லையென்று கண்டுவிட வேண்டும். பெண்ணுய்ப் பிறந்த இவளுக்குத்தான் என்ன ஆணவம்? என்ன பகட்டு? என்ன சாகசம்? என்னை ஒன்றும் தெரியாதவன் என்று அவள் நினைத்துக் கொண்டாள். கடல் மேல் போய்விட்டால் மனம் மீன் பிடிப்பதிலேதான் இருக்கும், வேறு எதையும் நினைத்துப் பார்க்காது என்று எண்ணிவிட்டாளா என்ன?

அவனுக்கு அம்மை வார்ப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே பச்சையம்மா

வின் போக்கை ஐயப்பன் கருத்தூன்றிப் பார்த்துக்கொண்டிருந்தான். அதில் அவ ளுல் புரிந்துகொள்ள முடியாத சிறு மாறுதல்கள் இருந்தன. மணமாகி இரண்டுமூன்று வருஷங்களாக இல்லாது இப்போது நடக்கும் இவைகளுக்கு என்ன அர்த்தம்? பச்சையம்மாவுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையா என்ன? வீட்டில் இருந்த ஒரே பாயை அவனுக்கு விரித்துவிட்டு, தான் சேலை முன்தானையைத் தரையிலே விரித்து, மணைக்கட்டையைத் தலைக்குய ரம் வைத்துக்கொண்டு, படுத்துத் தூங்கு வானேன்? அவள் இப்படிச் செய்ய ஆரம்பித்த புதிதில் இரண்டொரு நாட் கள் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தது அவனுக்கு. அவளை ஒன்றும் கேட்கவில்லை. மௌனமாகப் படுத்துத் தூங்கி விட்டான். தினம் இவ்விதம் நடக்கவே இது என்ன? இவளுக்கு என்ன வந்தது? என எண்ணினுன். பச்சை யம்மாவை மனம் விட்டுக் கேட்டுவிட வேண்டுமென்று எண்ணி வாயெடுத் தான். ஆனுல் ஏனே மனம் வரவில்லை. 'அவளைக் கேட்க என்ன இருக்கிறது? அவளுக்கு என் கூட்டுறவு அலுத்து விட்டது!' என்றுதான் எண்ணத் தோன்றியது.

இப்படி எண்ணியபொழுது மணமான புதிதில் அவர்கள் நடத்திய இன்ப வாழ்க்கை அவன் மனக்கண்முன் எழுந் தது. ஆஹா! அப்போது அவள் அவனை மன்மதனுகவே நினைத்தாள். அவனும் அவளை ரதியாகவே நினைத்து அன்பை வர்ஷித்தான். வீட்டில் மாமியார் நாத்தனுர் என்ற தொந்தரவு பச்சை யம்மாளுக்கு இல்லை. அவள் இட்டது சட்டம், கிழித்தது கோடாகவே காரியங் கள் நடந்துவந்தன. அவளை மகிழ்விக்க அவள் கடலின்மீது கழுகைப் போல் அலைந்து எவ்வளவு பிடிக்க இயலுமோ அவ்வளவு மீன்கள் பிடித்தான். காலை முதல் மாலை வரை வலைகளை இழுத்தும் கைகள் சளைப்பதில்லை; கட்டுமரத்தின்

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேட்ட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர்ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷிமி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறஸ்.

மேல் செல்வது, நீர்மட்டத்தின் மேல் தவழ்ந்தாற் போல் லாவகமாகப் பறந்து செல்லும் கடல்வாழ் புள்ளினங்களைப் போல் சிரமமற்று இருந்தது; அப்போது அவன் உடலில் ஒருவித மின்சார சக்தி பாய்ந்து கொண்டிருந்ததோ! அப்படிப் பாடுபட்டுக் காசு மிச்சம் பிடித்து, பச்சையம்மாவின் கழுத்திலே ஒரு பொன் மணத்தக்காளி மணி செய்து போட்டான். கூந்தல் பனையைப்போல் அடர்ந்து வளர்ந்திருந்த அவள் கொண்டைக்கு ஒரு தங்கத் திருகுப் பூ வாங்கிக் கொடுத்தான். அவைகள் இன்னமும் இருக்கின்றன. வீட்டில் இல்லை; மெ.ப.வ.மு. வட்டிக் கடையில் இருக்கின்றன. சமீபத்தில் தான் அடகு வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. ஐயப்பன் குடித்து அழித்துக் கடன் வாங்கிவிடவில்லை; தெய்வாதீனமாய்ப் பெரியம்மை வார்த்து, செலவு வைத்துவிட்டது.

* * *

கடல் மீது வலை வீசச் சென்ற பிறகும் அவனுக்கு மன நிம்மதி உண்டாகவில்லை. பச்சையம்மாவைச் சோதித்துப் பார்த்து விடவேண்டும் என்ற எண்ணம் கடைசியாக எழவே, மற்றவருடன் திரும்பிய அவன் தன் கட்டுமரத்தைச் சேரிக்கு வெகு தூரத்தில் இருக்கும் உப்பங்கழிக்கு விட்டுச் சென்றான். ஏதோ கையில் கிடைத்திருந்தவைகளை வந்த விலைக்கு விற்றுவிட்டு உப்பங்கழியை அடுத்திருந்த தென்னந் தோப்பிலேயே குந்திவிட்டான். சற்று நேரத்திற்குப் பிறகு, தலையில் சுற்றியிருந்த துணியைத் தரையிலே விரித்து, அலுப்புத் தீரச் சற்று நேரம் படுத்தான். மெத்து மெத்தென்றிருந்த கடல் மணலின் ஸ்பரிசம் சுகமாக இருந்தது.

'பார்க்கிறேன்! நான் வீடுதிரும்பவில்லை என்று பச்சையம்மா என்ன செய்கிறாள்? பூசாரி சொன்னதும் நிஜந்தானா? என்று பார்ப்போம்! நடுச்சாமம் ஆன பிறகு கூட வீட்டுக்குப் போகக் கூடாது!' என்ற எண்ணத்துடன் படுத்திருந்தவன் அப்படியே உறங்கி விட்டான்; துக்கத்தின் எல்லை தூக்கம் போலும்!

ஏதோ ஒரு கனவு கண்டு திடீரென விழித்துக் கொண்டான். அந்தத் தூக்கத்தால் அவன் மனம் சற்று நிதானமடைந்தது. உடல் அலுப்பும் தீர்ந்துவிட்டது.

வானத்தை நிமிர்ந்து பார்த்த அவன் ஏதோ சில நக்ஷத்திரங்களைப் பார்த்து நடுச்சாமத்திற்கு மேல் ஆகிவிட்டது என்று தெரிந்துகொண்டான், மெல்ல எழுந்து தன் குடிசையை நோக்கிச் சென்றான். மோனம் நிலவிய அந்த நடுச்சாம வேளையிலே தூரத்தில் வரும்பொழுதே அழுகுரல் தன்னை வரவேற்குமென்று அவன் எதிர் பார்த்தான். ஆனால் குடிசையை அவன் நெருங்கியதும் ஏமாற்றம் அவனை வர வேற்றது. குடிசையின் மூங்கிற்பாய்க் கதவு இழுத்துப் பூட்டப் பட்டிருந்தது.

எப்போதும்போல் சுமுகமான மன நிலையில் இருந்தால் அக்கம் பக்கத்தில் கூட விசாரித்திருப்பான். ஆனால் இப்போது நிலைமை முற்றிலும் மாறியல்லவோ போய்விட்டது! தெய்வ ஆவேசம் சொன்னதை அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் நம்பி விட்டதாக வல்லவோ அவனுக்குப் பட்டது.

குடிசை வாயிலிலே உட்கார்ந்து சற்று நேரம் சிந்தித்தான் ஐயப்பன். அவன் வலை வீசும் வேளையிலே சூழ்ந்திருக்கும் கரு நீலக் கடலைப்போல் அவன் மனதில் பெரும் இருள் சூழ்ந்தது. அவன் எதிர் பார்த்து வந்தது என்ன? அவனுக்குக் கிடைத்தது என்ன? 'சந்தேகமில்லை; பச்சையம்மா படுமோசக்காரி!' என நினைத்த அவனுக்கு வாழ்வே சூன்யமாகப் பட்டது.

4

அவன் எழுந்தான். தற்கொலைசெய்து கொள்வதற்கான மார்க்கங்களைச் சிந்தித்தது அவன் மனம். கடைசியில், சங்கிலிக் கறுப்பன் கோவில் பாழுங்கிணற்றில் விழுந்து சாவதுதான் சரி என்ற முடிவுக்கு வந்தான்; உடனே அவன் கால்கள் அவனை அங்கே கொண்டு சேர்த்தன.

இது என்ன? அவன் கோவிலை நெருங்கிக்கொண்டிருந்தபொழுது பேச்சுக் குரல் கேட்டது. யார் பேசுவது? எவருடன்? என்ன பேசுகிறார்கள்? ஐயப்பன் அடி

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

மேல் அடி வைத்து நடந்து அந்தச் சிறு கோவிலின் முன் இருக்கும் பிரமாண்ட மான குதிரைச் சிலையின் நிழலிலே ஒதுங்கி உற்றுக் கேட்டான்.

ஆ! உண்மைதானா? காண்பது கனவா நினைவா? நிலவொளியிலே தலைவிரி கோலமாய், கண்ணீரும் கம்பலையுமாக நிற்பது பெண்ணோ? அல்லது மோஹினி உருவமா? பேய்ப் பெண்ணோ! கடல் தேவதைதானோ!.........இல்லை, சந்தேக மில்லை. அவள் பச்சையம்மாதான்! இந்த நடுச்சாம வேளையிலே இவளுக்கு இங்கு

19857

என்ன வேலை? சங்கிலிக் கறுப்பனை என்ன வரம் கேட்கிறாள்? விம்மலுடன் கலந்து வந்த அவள் பிரார்த்தனையைக் காது கொடுத்துக் கேட்டான், ஐயப்பன்.

"………ஒரு பாவமும் அறியாத என் மேலே இப்படி வீண் சந்தேகப்படும்படி செய்தானே அந்தப் பாவி சிங்காரம்! அவன் கண்கள் அவிந்துபோகும்படி செய்யமாட்டாயா சங்கிலிக் கறுப்பா? அவன் கெட்ட எண்ணத்திற்கு இணங்காததால் இப்படி நாடகம் நடத்தி என்னைப் பழிவாங்கிக்கொண்டான் என்று இப்போது நான் சொன்னால் யார் நம்புவார்கள்? கொண்ட புருஷனே சந்தேகப்பட்டுவிட்டாரே! எங்கிருந்தோ வந்தாள் அந்த யாழ்ப்பாணத்து ஜோஸ்யக்காரி! அவள் பேச்சைக் கேட்டு பாய்மிதிக்காமே வேறே இருந்தேன்.

குழந்தை ஆசையிலே அங்கு மனசு நோவதைக்கூடப் பொருட்படுத்தாமே இருந்தேன். சங்கிலிக் கறுப்பா! இந்த முன்தானையை என் புருஷர் ஒருவருக்குத் தான் விரித்தேன்; இதன்மேல் ஆணையாகச் சொல்கிறேன், நாளை அந்திக்குள் அவரு வீடு திரும்பினலாச்சு! இல்லாட்டி உன்னுடைய பாழுங் கிணற்றிலே விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வேன்!.........''

"ஆ! என்ன? பச்சையம்மா!'' என்று வாய்விட்டுக் கூவிவிட்டான், ஐயப்பன். சந்தோஷத்தாலும் பிரமையாலும் அவன் உடல் படபடத்தது. இரண்டெட்டில் நடந்துசென்று அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டான்!

கண நேரம் இருவரும் பிரமை பிடித்த மாதிரி நின்றனர். பிறகு இருவரும் சாஷ்டாங்கமாகச் சங்கிலிக் கறுப்பன் சந்நிதியின்முன் விழுந்து வணங்கினர். தம் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீருடன், "அடுத்த மகத்துக்குள்ளே ஒரு ஆண் குழந்தை; கறுப்பன் என்று உன் பெயரையே வைச்சுப்புடறேம்!'' என்று இருவரும் வேண்டிக்கொண்டனர்.

சங்கிலிக் கறுப்பன் சிலையின் முன்னே எரிந்த திரிவிளக்கு, 'பட்'டெனச் சப்தித்து ஒரு சிறு சுடரைத் தெறித்தது. அச்சுடர் கண நேரம் மின்னி மறைந்தது. ஐயப்பனும் பச்சையம்மாவும் உள்ள நிறைவுடன் தம் குடிசையை நோக்கிச் சென்றனர்.



[அன்று சந்திர கிரஹணம். குளிர்ந்த நிலவை அள்ளி அள்ளி வீசும் பௌர்ணமி தினம். ஆனால் பெயரளவில் தான் பௌர்ணமி. அந்தச் சந்தர்ப்பத்தில் எங்கும் இருள் கவிந்திருந்தது. கிரஹண இருள். அது சூழ்வது சில நிமிஷங்களுக்கே யானாலும் அந்த இருளின் வலிமையோ.........ரஞ்ஜனியின் சிந்தையில் குடிகொண்ட அந்தகாரத்தை வெளியே காட்டுவது போல் சூழ்ந்திருந்த இருள். ரஞ்ஜனிக்கு வாழ்வில் ஒரு குறையும் இல்லை. அரசகுமாரி. சகல ஐசுவர்ய போக பாக்யங்களும் நிறைந்த வாழ்க்கை. துன்பம், தொல்லை என்றால் இன்னது என்றே அவள் அறியாள். அப்படித்தான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் ரஞ்ஜனியின் மனோ நிலை அப்படியிருக்கவில்லை. அவள் மனம் நிறைந்திருக்கவில்லை. அவள் உள்ளத்தில் ஒரு பெருங் குறை இருந்து அவளை வாட்டி வருத்தத் தான் செய்தது.

அன்று சந்திர கிரஹணம். பௌர்ணமியின் இருளை மனோஹரனின் உள்ளத்திலும் கண்டோம்...........அவனுக்குத் தான் என்ன குறைவு. கம்பீரமான தோற்றம். ஆழ்ந்த அறிவு. ரஞ்ஜனியைப் போல் அவனும் சுகமாக வாழப் பிறந்தவன். அவன் விரும்பியிருந்தால் மலர்ப்பாதையிலேயே சென்று கொண்டு இருக்கலாம். ஆனால் அவனும் முள் பாதையைத்தான் தேர்ந்தெடுத்தான். தன் மனதிலிருந்த குறையும், தீராத குறையாக நிலைத்துப் போகுமோ என்று அவன் மனம் எண்ணி எண்ணி மருகியது.

அன்று சந்திர கிரஹணம். ரஞ்ஜனி, தந்தையின் அருகே சிலை போல் அமர்ந்திருந்தாள். அவளுடைய கண்கள், கீழே, நியாய அரங்கத்தின்மீது பதிந்து போயிருந்தன. அங்கே கூடியிருந்த ஜனங்களின் ஆரவாரம் அவள் காதுகளில் விழவில்லை. அவள் கருத்தெல்லாம், நியாய அரங்கத்தில், எதிரேயிருந்த கதவுகள் மேல்தான். கதவுகள் எப்பொழுது திறக்கப் போகின்றன என்று எதிர்பார்த்து, ஆவலே வடிவமாய் அசைவற்று வீற்றிருந்தாள் ரஞ்ஜனி. எவ்வளவு நாழிகை தான் காத்திருப்பது! கதவுகள் திறக்க எவ்வளவு நேரம்!...... இந்தப் பொறுமை இழந்த நிலையில் அவளுடைய பாழும் மனம் வேறு அவளைச் சோதனை செய்யவேண்டுமா? எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த நினைவு நம் மனதில் தோன்றக் கூடாது என்று நாம் விரும்புகிறோமோ, அந்தச் சந்தர்ப்பத்தில் தான், அந்த விருப்பமே, அந்த எண்ணத்தை நமது மனதிற்குள் புகவிட்டு வேடிக்கை பார்க்கிறது. இல்லாவிடில் கதவுகள் எப்பொழுது திறக்குமோ, என்று அவள் காத்திருக்கும் நேரத்தில், வானத்தில் சந்திர கிரஹணம் உச்ச நிலையை எட்டியிருக்கும் அந்தகார வேளையில், ரஞ்ஜனியின் உள்ளத்தில், முப்பது தினங்களுக்கு முன் தோன்றி மறைந்த பௌர்ணமி தினம் ஞாபகத்திற்கு வருவானேன்? கடுஞ் சோதனைக்கு உள்ளாகி, துடிதுடிக்கும் உள்ளத்தில் இன்ப நினைவை மூட்டி, துன்பத்தை இன்னும் அதிகரிப்பானேன்? அந்தப் பௌர்ணமி தினத்தன்று, ரஞ்ஜனி, அடுத்த பௌர்ணமி தனக்கு யமனாக வரப்போகிறது என்று கண்டாளா! பௌர்ணமியின் எழிலை அழிக்கும் கிரஹண இருளைப்போல், அன்பு நிலவையும் விழுங்கிவிட ஒரு துன்பம் வரப்போகிறது

என்று எதிர்பார்த்தாளா? மனோஹரன் உள்ளமும், ரஞ்ஜனியின் உள்ளமும் ஒன்றையொன்று அறிந்த அந்தத் தினத்தில். அந்த ஆற்றங்கரையைப் போலவும், அந்தப் பௌர்ணமி நிலவைப்போலவும், ஆயுள் பரியந்தம் தம் வாழ்க்கை இன்பமயமாகவே இருக்கும் என்றே அவள் நினைத்தாள்.]

ரஞ்: இந்தப் பூரண சந்திரனுக்கு ஆனாலும் இவ்வளவு துடுக்குத்தனம் உதவாது.

மனோ: ஏன் ரஞ்ஜனி!

ரஞ்: பாருங்கள் நம்மைக்கண்டு அது ஏன் சிரிக்கிறது!

மனோ: நம்மைக்கண்டு அது சிரிக்கவில்லை· நமது அன்பைக் கண்டு அது குதூஹலம் அடைகிறது.

ரஞ்: இல்லையில்லை; நாம் இப்படி ரகஸ்யமாகச் சந்தித்து, நம்மிடையே இவ்வாறு அன்பு உதயமானது, சந்திரனுக்கு இளக்கரமாகப்படுகிறது.

மனோ: அப்படி இல்லை ரஞ்ஜனி......

ரஞ்: இருக்கட்டும். இந்தப் பூரண சந்திரன், மீண்டும் முப்பது தினங்களுக்குப்பிறகு வராமலா இருந்துவிடப்போகிறான்! அப்போது நம்மைத்தம்பதிகளாகக் கண்டு மனம் பொருமிப்போவான்.

மனோ: அப்படி நீ சந்திரன் மீது பழி தீர்த்துக்கொள்ளப் போகிறாய் என்றால் அது எனக்கு மிகவும் சந்தோஷந்தான் ரஞ்ஜனி.

[ஆனால் அடுத்த பௌர்ணமியன்று, தன் காதலன், தன்னைக் காதலித்த குற்றத்திற்காக, அந்த நியாய அரங்கத்தில், அந்த பரம்பரையான, முரட்டுத்தனமாக நீதி வழங்கும் அந்தச் சோதனை அரங்கத்தில் வந்து நின்று. என்ன செய்வதென்று அறியாமல் தவிக்கப் போவதைத்தான் சந்திரன் பார்க்கப் போகிறான் என்பதை ரஞ்ஜனி எதிர் பார்த்தாளா......இல்லை.]

ர: அப்பா, போதும், உங்கள் நியாய வெறி. உங்கள் அருமைப் புதல்வியின் சுகத்தையே, நியாயத்திற்காகத் தியாகம் செய்யத் துணிந்து விட்டீர்களே, அப்பா.

அ: ரஞ்ஜனி, பெற்றெடுத்த புதல்வியே யானாலும், குற்றம் குற்றந்தான்,

ர: அன்பு செய்தால் அது குற்றமா? அப்பா இரண்டு உள்ளங்கள் ஒன்றையொன்று விரும்பினால் அது பாதகமா?

அ: குழந்தாய்! அன்பு வெறியில் அறநெறியை மறந்து பேசுகிறாய். கள்ளத்தனமான உங்கள் செய்கை, குற்றம்தான். உனக்கொரு நியாயம். ஊருக்கொரு நியாயமா? சிலசந்தர்ப்பங்களில் தந்தையின் பாசத்தைவிடத் தரும பரிபாலனம்தான் பெரிது குழந்தாய்.

ர: அப்பா, உமது புத்திரியின் ஹ்ருதயம் துடிதுடித்துத் துவண்டு போவதைக் கண்டும், அமைதியோடு நீதி பேசிக் கொண்டு போகிறீரே உமது மனம் கல்லா?

அ: ரஞ்ஜனி! வீணாக என்னை ஏன் நொந்து கொள்ளுகிறாய்? எனக்கும் ஹ்ருதயம் உண்டு. அறிவும் உண்டு. அறிவுக்கு ஹ்ருதயம் அடங்கும் வேளையும் உண்டு. ஹ்ருதயத்திற்கு அறிவு அடங்கும் வேளையும் உண்டு. தொன்று தொட்டு வந்துள்ள நீதி நெறி முறைகளுக்கு விரோதமாக நான் எதுவும் செய்ய முடியாது.

ர: அப்பா, நான் தங்கள் மகள் அல்லவா? என் க்ஷேமத்தில் உங்களுக்குக் கருத்தில்லையா?

அ: க்ஷேமத்தில் மட்டுமல்ல. உன் கௌரவத்திலும் கருத்து உண்டு. அதனால் தான் உன்னைப் பிறர், "தருமந் தவறிய துரோகியின் மகள்" என்று ஏசாமலிருக்க வழி செய்து கொள்ளுகிறேன்.

ர: எனக்குக் காதல்தான் பெரிது. கௌரவம் பெரிதல்ல.

அ: காதல் காதலர்களுடன் அழிந்து போகும். கௌரவம் பரம்பரை உள்ள வரை நிலைத்து நிற்கும்.

ர: அப்பா, தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். அவரை விடுதலை செய்து விடுங்கள்.

அ: குழந்தாய்!

ர: அநியாயமாக அவர் மாண்டு போகும்படி விட்டுவிடாதீர்கள். என் மீது அன்பு கொண்டதற்காக அவர்

G.K.

உயிர் துறக்க வேண்டுமா? அப்பா, நீதி, நீதி என்று சொல்லி இப்படி சித்ரவதை செய்கிறீர்களே......அன்பு எனக்களித்த மன நிம்மதியை உங்கள் அறநெறி அழிந்துவிடப் போகிறது. அதில் உங்களுக்கு ஒரு திருப்தியா? கடமையும் நீதியும் இவ்வளவு கொடியவைகளா?

அ: குழந்தாய்.........நீ ஏன் இப்படிப் பதறுகிருய்? நானு விசாரணை செய்யப் போகிறேன்? நானு தண்டனை அளிக்கப் போகிறேன்! இல்லையே.........பரம்பரையாக வரும் நியாயஸ்தலம் இருக்கிறது. நியாயம் வழங்கும் முறையும் இருக்கிறது......அந்த நீதி அரங்கத்தில்......

ர: நீதி அரங்கமா அது?...........அது கொலைக் களம். அபராதிகள், நிரபராதிகள் என்ற வேற்றுமையின்றி எல்லோரையும் கொன்று குவிக்கும் கொலைக் களம்.

அ: ரஞ்ஜனி, ஏன் இப்படிப் பதறுகிருய்? காரியம் மிஞ்சிப் போகவில்லை. உன் காதலன் செய்தது நியாயமாயிருந்தால் உயிர் தப்புவான். இல்லாவிடில் அநியாயத்தின் பலனை அனுபவிப்பான்.

ர: என்ன மிருகத்தனமான நீதிமுறை! விவேகத்தின் உதவி கொண்டு மனிதனே நேர்மையாக வழங்கக் கூடிய நீதியை, ஒரு காட்டு மிருகம்.........

அ: குழந்தாய், அவனுடைய விதிப்படிதான் நடக்கும்.

ர: அந்த விதிக்கும் நீங்களல்லவா வழி காட்டுகிறீர்கள்.

அ: விதண்டாவாதத்தினுல் என்ன பலன்? நான் போய் வருகிறேன் ரஞ்ஜனி. தனிமையாவது உன் மனதிற்கு இதம் செய்யுமோ பார்ப்போம்.

ர: தனிமையா?......அந்தத் தனிமையிலும் உங்களுடைய பயங்கர நீதி வந்து வெருட்டுகிறதே ...... அப்பா......அப்பா ......அப்பா.

[அப்படி ரஞ்ஜனியை வெருட்டி நின்ற பயங்கர நீதி எது? அவளுடைய தந்தை நியாயம் வழங்கிய முறைதான். ஆனுல் அவர்தான் என்ன செய்வார்! பரம்பரையான ராஜரீக முறைப்படி அரசு புரிந்தார். அந்த அரசில், யாரேனும் குற்றம் செய்தால், விசாரணை செய்ய நியாயாதிபதிகள் கிடையாது. அவன் கட்சியை எடுத்துப்பேச நியாயவாதிகள் கிடையாது, நியாயாதிபதிகள் ஒரு சிங்கமும், ஒரு அழகிய யுவதியுந்தான். உங்களுக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கலாம். அந்த நியாய அரங்கம் வட்ட வடிவமானது. அரங்கத்திற்குமேல் சுற்றிலும், ஜனங்கள் உட்கார ஆசனங்கள் போடப்பட்டிருக்கும். அரங்கத்திற்குள்ளே இரண்டு கூண்டுகள். ஒன்றைத் திறந்தால், அதிலிருந்து ஒரு சிங்கம் பாய்ந்து வந்து ஆளைக் கொன்றுவிடும்; மற்றென்றைத் திறந்தால், அழகிய யுவதி, ஆவலுடன் தாவி வந்து மாலையிடுவாள். எந்தக் கூண்டைத் திறப்பது என்பதே, அரங்கத்தின் நடுவில் வந்து நிற்கும் குற்றவாளியின் மனதை வாட்டி வருத்தும் பிரச்னை. சிங்கக் கூண்டைத் திறந்தால் அவன் அபராதி, மற்றதைத் திறந்தால் அவன் நிரபராதி என்பது, அந்நாட்டுப்புராதன நீதி முறை. குற்றவாளியின் விதியே அவனுடைய கதியை நிர்ணயிக்கும் இந்தப் புதிய ரீதியைக்கண்டு ரஞ்ஜனி நடுநடுங்கினுள். ஆற்றோரத்தில் அன்று மனோஹரனைச் சந்தித்தபோது பரஸ்பரம் உள்ளங்கள் பறிபோயின. அந்தக் காதல் ஒரு குற்றமாம். அந்தக் குற்றத்திற்கு அவன் பொறுப்பாளியாம். அதற்காக, அவன் அந்தச்சோதனை அரங்கத்தில் வந்து நிற்க வேண்டுமாம். தந்தை தீர்ப்புச் செய்துவிட்டார். தம் ஒரே புதல்வி, ரஞ்ஜனியின் மனக்கோட்டையை இப்படித் தயக்கமில்லாமல் இடித்துத் தள்ளி, அவள் ஹ்ருதயத்தையே வதைத்து விடுகிருேமே என்பதை அவர் உணரவில்லை. ரஞ்ஜனியின் பிரலாபமும் மன்ருடலும் வீணுயின. தந்தையின் கடமையின் கொடுமையை நினைக்க நினைக்க அவள் நெஞ்சில் ஆத்திரமும் வேதனையும் அதிகரித்தன. தன் காதலனை எவ்வாறேனும் காப்பாற்றிவிட வேண்டும் என்று துணிவு கொண்ட அவள் மனம் சூழ்ச்சியின் உதவியை நாடியது; தான் எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றி அவள் முடிவு செய்துகொண்டதும், யாரும் அறியாமல் தோழியின் உதவியுடன் சிறைச்சாலைக்

குச்சென்ருள். எதற்கு? தன் காதலனுக்கு நம்பிக்கை அளிக்க,]

மனே: ரஞ்ஜனி, இந்தப் பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

ரஞ்: பேருதவியா? இது என் கடமையல்லவா! இந்தப் பாவியிடம் மனதைப் பறிகொடுத்ததினல் அல்லவா, உங்களுக்கு உயிரைப் பறி கொடுக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது?

மனே: நான் மரணத்திற்காக அஞ்சவில்லை, ரஞ்ஜனி. தன்மீது அளவு கடந்த அன்பு கொண்ட ஒரு பெண்மணி இருக்கிருள் என்ற நினைவே போதும் ஒரு புருஷனுக்கு. அதுதான் அவனுக்கு மன நிறைவை அளிப்பது, அந்தப் பாக்யம் எனக்குக் கிட்டிவிட்டது. நான் மரணத்திற்கு அஞ்சவில்லை. ஆனல் தூய்மையான ப்ரேமை இப்படி அழிந்து......

ரஞ்: அழியாமலிருக்கத்தான் நான் வழி செய்திருக்கிறேன். எப்படியும் கூண்டுகளின் ரகசியத்தை நான் அறிந்து கொள்வேன். எந்தப் பக்கம் கையை உயர்த்துகிறேனே. அந்தப் பக்கத்தில் தான் சிங்கம் இல்லாத கூண்டு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நேரமாகிறது. நான் வருகிறேன்.

(போக முயல)

மனே: ரஞ்ஜனி!

ரஞ்: என்ன?

மனே: நாளை இரவு, மீண்டும் பௌர்ணமி.

ரஞ்: ஆமாம்?

மனே: மீண்டும் பூரண சந்திரன் நம்மைக் கண்டு சிரிக்குமா?

ரஞ்: அது மீண்டும் சிரிக்க நான் விடப்போவதில்லை.

[எந்தக் கூண்டில் பெண்மணி, எந்தக் கூண்டில் சிங்கம் என்பதை அறிந்து கொண்டால், சமிக்ஞையின் மூலம் தன் காதலனைத் தப்ப வைக்கலாம் என்று ரஞ்ஜனி தீர்மானித்தாள். அரசகுமாரியென்ருல், வெறும் ஆடம்பர நிலைக்கும், அலங்கார கோலத்திற்கும், படாடோப வாழ்விற்கும் தான் அடிமையா? செயற்கைக்கு அடிமையானல்தான், ராஜகுமாரி ஆக முடியுமா? அவளுக்கும் ஹ்ருதயமில்லையா? அந்த ஹ்ருதயத்தில் இனிய உணர்ச்சிகள் பிரவேசிக்க அனுமதி இல்லையா? உள்ளத்திற்குமா கட்டுப்பாடு? உணர்வுகளுக்குமா தடை உத்தரவு? தந்தையின் மனம், தன் கடமையைச் செவ்வையாகச் செய்து முடிக்கிறோம் என்று திருப்தி அடைய, மகளின் உள்ளமோ, தந்தையின் கடமையின் கொடுமையை நினைந்து நினைந்து வருந்தியது.]

[முப்பதே தினங்களில் நிகழ்ந்த இத்தனை சம்பவங்களையும், கதவு திறப்பதற்காகக் காத்திருந்த அந்தச் சில விநாடிகளில் ரஞ்ஜனியின் மனம் பன்முறை எண்ணி எண்ணி நொந்து கொண்டது. "ஐயோ, இந்தப் பாழும் மனம், ஒரு விநாடியாவது, எதைப்பற்றியும் சிந்தியாமல் சும்மா இருக்காதா" என்று ஏங்கினுள் ரஞ்ஜனி. மனதிலேயே தோன்றி மனதிலேயே அழிந்த ஆசைகளின் நினைவு ஒரு புறம் வாட்டி வருத்த, தன் சூழ்ச்சி நிறைவேறும், என்ற நம்பிக்கையும் ஆவலும் மற்றொருபுறம் பரபரப்பை உண்டாக்க, கதவுகளையே நோக்கியிருந்த ரஞ்ஜனியின் கண்கள் மலர்ந்தன. கதவுகள் திறந்து கொண்டன. அழகும் கம்பீரமும் இணைந்து உருவெடுத்தது போல், மனேஹரன், ராஜ நடை நடந்து, அரங்கத்தின் நடுவே வந்து நின்ருன். வானத்தில் சந்திர கிரஹணம் உச்ச நிலையை அடைந்தது. நிலவொளி மறைந்தது. இருள் மண்டியது. கம்பீரமான தேஜஸ்ஸுடன் வந்து நின்ற மனேஹரனைக் கண்டாள் ரஞ்ஜனி. திடீரென்று திடுக்கிட்டவள் போல் தலை நிமிர்ந்தாள். ஏதோ ஞானேதயமானது போல் உணர்ச்சி. மலர்ந்த கண்களில் மீண்டும் ஓர் கலக்கம். இது வரை, அவள் ஏதோ ஒன்றைப் பற்றி நினைக்காமலே இருந்ததாகவும், அந்த எண்ணம், இப்போது எதிர்பாராத விதமாகத் திடீரென்று தோன்றி, அவள் மனதை ஒரு கலக்குக் கலக்கி விட்டது போலவும் புலப்பட்டது. அவள் மனதில் ஒரு பெரும் போராட்டம், வெளியே பரவிய இருள் உள்ளத்திலும் கவிந்தது.]

ரஞ்ஜனியின் ஹ்ருதயம்: ஐயோ, இது வரையிலும் நான் இதைப்பற்றிச் சிந்திக்காமல் இருந்துவிட்டேனே. என் அறிவே என்னை மோசம் செய்து விட்டதே.

ர. அறிவு: என் மீது ஏன் பழிபோடுகிறாய்? எதைப்பற்றி நினைக்க நீ மறந்தாய்?

ர. ஹ்: சிங்கக்கூண்டிலிருந்து அவரைத் தப்புவிக்க நான் முயற்சி செய்தேனேயொழிய மற்றொரு கூண்டிலுள்ள பெண்மணியைப்பற்றி நான் நினைத்தேனில்லையே.

ர. அ: அதனால் என்ன?

ர. ஹ்: அந்தப் பெண்மணியைத்தானே அவர் மணம் புரிய வேண்டும்.

ர. அ: அதுதானே நமது சட்டம்.

ர. ஹ்: ஆனால் அதற்காக நான் என் காதலை இழப்பதா? என் கண்முன்பாகவே, என் காதலனை மற்றொருத்தி, கவர்ந்து செல்ல நான் பார்த்துக்கொண்டிருப்பதா?

ர. அ: அப்படியானால் பெண்மணி இருக்கும் கூண்டைக் காட்டாதே.

ர. ஹ்: ஐயையோ......அப்படிச் செய்தால் அவர் சிங்கத்திற்கு இரையாகி விடுவாரே. என் காதலனை இழப்பதா!

ர. அ: இதோ பார். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தானா, இந்த எண்ணம் உன் மனதில் தோன்றியது.

ர. ஹ்: எல்லாம் நீ செய்த சதிதான். சரியான சந்தர்ப்பத்தில், இந்த எண்ணத்தை எனக்குத் தோற்றுவித்து...... ஐயோ, எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லையே! நான் காதலை இழப்பேனா? காதலனை இழப்பேனா? இரண்டில் ஒன்றை இழக்கத்தான் வேண்டுமா?

ர. அ: ஆம், இழக்கத்தான் வேண்டும். இதுவரை நீ அந்தப் பெண்ணைப்பற்றிச் சிந்திக்கவில்லை, உன் காதலன் உயிர் தப்புவது ஒன்றைப்பற்றித்தான் நினைத்தாய். ஆகவே, நீ நினைத்ததை நிறைவேற்றுவதுதான் நியாயம். இன்னும் சில விநாடிகள்தான் அவகாசம். காதலா, காதலனா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் மனந்தடுமாறுவதில் பயனில்லை. காரியம் மிஞ்சிபோய்விடும்.

ர. ஹ்: ஆனால் என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?

ர. அ: காதலை இழந்துவிடு. காதலன் உயிர்தப்பட்டும். விரும்பியதொன்றை அடைவதைவிட, துறப்பதுசிறப்பல்லவா?

[ரஞ்ஜனியின் உள்ளத்தில் இப்போராட்டம் நடந்த அதே வேளையில், கிரஹணம் உச்ச நிலையை எட்டியிருந்த அதே வேளையில், சாவையோ, சுக வாழ்வையோ எதிர் பார்த்து நின்ற மனோஹரனின் உள்ளத்திலும் பெரும் போராட்டம். இதுவரை நினைத்துப் பார்க்காத ஒரு பிரச்னை திடீரென்று அவன் மனதிலும் உதித்தது. அவனும் நிலை கொள்ளாமல் தவித்தான். அவன் ஹ்ருதயம் துடிதுடித்துப் போய் அவனுடைய அறிவை நொந்துகொண்டது. அறிவோ, ஹ்ருதயத்தை, இடித்துக் காட்டியது.

மனோஹரனின் ஹ்ருதயம்: விதிதான் என்னை இப்படிச் சோதனை செய்கிறதென்றால், மனமே, நீயுமா இந்தச் சந்தர்ப்பத்தில், நினைவுகளைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கிறாய்?

ம. அறிவு: ஓஹோ......யாருமில்லாவிட்டால், எந்தப் பழியைச் சுமப்பதற்கும் நான்தான் அகப்பட்டேனா?

ம. ஹ்: ஆனால் ஏன் இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி என் துன்பத்தை அதிகமாக்குகிறாய்?

ம அ: நான் என்ன செய்தேன்?

ம. ஹ்: என்ன செய்தாயா? கத்தி முனைமேல் நின்று தத்தளிக்கும் சந்தர்ப்பத்தில் கூண்டிலுள்ள பெண்ணைப்பற்றி நினைக்கச் செய்து விட்டாயே.

ம. அ: நீதான் அவளை மணந்துகொள்ளப் போகிறாயே. அந்த நினைவு இதமாக இருக்குமே.

ம. ஹ்: இதமா?......அந்தப் பெண்ணை மணப்பதால் என் வாழ்வே பாழாகிவிடுமே. எந்தக் காதலுக்காக நான் இவ்வளவு துன்பத்தை அனுபவித்தேனோ, அந்தக் காதல் சித்திக்காமல் போகுமே.

ம. அ: உயிர் தப்ப வேண்டுமானல் அவளை மணந்துதானே ஆக வேண்டும்?

ம. ஹ: ஆனுல், உயிர் தப்பினுல் ரஞ்ஜனியை இழக்கத்தானே வேண்டும்........, ஐயோ......உயிரைத்துறப்பதா? உள்ளக் காதலைத் துறப்பதா?

ம. அ: ஏதாவது ஒன்றைத் துறந்து தான் ஆக வேண்டும்.

ம. ஹ: நான் எதைத் துறப்பது? எனக்குப் புரியவில்லையே.

ம. அ: தூய்மையான காதலைத் துறப்பதைவிட உயிரைத் துறப்பதே சிறந்தது. உனக்கு ரஞ்ஜனியின் உள்ளத்தில் என்றும் இடம் உண்டு. உயிர் போனுலும் காதல் அழியாது. உயிர் தப்ப நினைத்தால், ரஞ்ஜனியைத் துறக்க வேண்டும். அந்தத் துன்பத்திற்கு இதுவே மேல். போ..............பயப்படாதே. துணிந்து சென்று சிங்கக் கூண்டைத் திறந்துவிடு.

[இவ்வாறு காதலன் உயிர் வாழ்வதற்காக, காதலைத் துறப்பது என்று ரஞ்ஜனி தீர்மானித்தாள். காதல் அழியாமலிருக்க உயிரைத் துறப்பது என்று மனேஹரன் தீர்மானித்தான். இந்த இரண்டு உள்ளங்களும் தெளிவடைந்து ஒரு முடிவுக்கு வருவதற்கும், சந்திர கிரஹணம் நீங்கி, பூரண சந்திரன் பிரகாசிப்பதற்கும் சரியாக இருந்தது. ரஞ்ஜனி வலது கையை உயர்த்தினுள். மனேஹரனே அதற்கு நேர்மாருன கூண்டை நோக்கி நடந்தான். "தன் அன்பன் வலது கூண்டைத் திறப்பான். பெண்மணி வந்து மாலையிடுவாள். அவன் உயிர் தப்பிச் சந்தோஷமடைவான்" என்று ரஞ்ஜனி மனதில் எண்ணி, இன்பமும் துன்பமும் அடைந்து மனேஹரனை நோக்கினுள்...... திடுக்கிட்டாள்.]

ரஞ்: ஐயோ......இதென்ன!.......இவர் இடது கூண்டை நெருங்குகிருரே. என் சமிக்ஞையை அவர் மறந்து விட்டாரா?... ஐயையோ, சிங்கத்தின் கூண்டையல்லவா திறக்கப் போகிருர்?......இவருக்கென்ன பைத்தியமா?......ஐயோ.......அப்பா...... அப்பா......அப்பா......

[ரஞ்ஜனி அலறிக் கொண்டு தந்தையின் மேல் சாய்ந்து மூர்ச்சையாகி விட்டாள்......மூர்ச்சை தெளிந்ததும் அவள் கண்கள் ஆவலோடும் பீதியோடும் அரங்கத்தை நோக்கின...என்ன ஆச்சரியம்!... சிங்கம் ஈட்டியால் குத்தப்பட்டு இறந்து கிடந்தது. மனேஹரன் தன் தந்தையின் அருகே புன்னகையுடன் நிற்பதைக் கண்டாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன நடந்தது என்று அறிய ஆவலுடன் தந்தையை நோக்கினுள்]

அர: குழந்தாய்......இனி உனக்கு ஒரு குறையும் இல்லை. உன் காதல் என் சோதனையில் வெற்றி பெற்றுவிட்டது. ......என் நீதி உணர்வை உன் உறுதியான காதல் வென்று விட்டது......இனி உனக்குக் கவலையில்லை.

[பூரண சந்திரனைக்கிரஹணம் பிடிக்கிறது. உண்மை தான். ஆனுல் அந்தக் கிரஹணம் நீடிப்பதில்லையல்லவா?......... சந்திரன் மீண்டும் தன் பிரகாசத்தைப் பெருமலா போகிருன்?

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள்நாடு	ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப்பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

மார்த்தாண்ட வர்மன்

டாக்டர் வே. ராகவன்

[கி. பி. 1729. திருவாங்கூர் ஒன்று பட்டு, பெரிய ஸம்ஸ்தானமாய் ஆகாத காலம்; சீர்கெட்டுத் 'தந்தலை தரதலை' ராஜ்யமாயிருந்த காலம். அரசரையும், அவர் குடும்பத்தையும் எதிர்த்து, கப்பங்கட்டாமல் தம் இஷ்டப்படியெல்லாம் இருந்து வந்தனர், எட்டு வீட்டுப் பிள்ளைமார்கள், மடம்பிமார்கள் என்ற தலைவர்களும், அவருடன்கூடி வழி கெட்டு நடந்து வந்த பத்மநாபஸ்வாமி கோயில் யோகக்கரார்களும். தன் மாமன் ராம வர்மன் காலத்தில், தான் இளவரசாயிருந்தபோதே இக்கலகக்காரரை ஒழிக்க யோசித்த மார்த்தாண்டவர்மன் தான் பட்டத்துக்கு வந்ததும் இத்தொழிலை முதலில் எடுத்துக்கொண்டான்.

மார்த்தாண்ட வர்மனும், தளவா ஆறுமுகம் பிள்ளையும், ஸேனாபதி, உப ஸேனாபதிகளான குமாரஸ்வாமி பிள்ளையும், தானுப்பிள்ளையும், மற்ற அரசாங்க உத்யோகஸ்தரும்:

மார்த்தாண்டவர்மன்: ஆறுமுகம் பிள்ளை! இந்தஎட்டுவீட்டுப்பிள்ளைமார்களின் அட்டூழியம் எனக்குப் பொறுக்கவே இல்லை. எதற்கும் அஞ்சாத பாதகர்கள், எம்முன்னோரான ஆதித்தவர்மனையும் அவர் மருமகள் குழந்தைகள் ஐவரையும் கொலை செய்தனர்; என் மாமன் ராமவர்மனையும் அவர் தாயையும் வழிமறைத்துக் கொலை செய்துவிட முயற்சித்தனர்; நல்ல வேளையாய், பத்மநாபன் அருளால் அவர் தப்பினர்.

ஆறுமுகம் பிள்ளை: அரசே! உங்கள் தலைமுறையையே இல்லாமற் செய்துவிடத் துணிந்திருக்கின்றனர், கடைசியாய்க் கிடைத்த செய்தி என்னவென்றால் மற்ற மடம்பிமார்களோடும், தேவஸ்வம் யோகக்காரர்களோடும் கூடி, சதியாலோசனை செய்கிறார்களாம்.

மா. வர்மன்: என்ன?

குமாரஸ்வாமி பிள்ளை: மஹாராஜ்! தளவா சொல்வது உண்மை. ஒற்றர்களை நான் அனுப்பி உளவறியச் சொன்னதில், உங்களுடைய மாமன் பிள்ளைகள் பப்புத் தம்பியும் ராமன் தம்பியும் உங்கள் பட்டத்திற்கு உரிமை கொண்டாடிக்கொண்டு, அப்பகைவரோடு சேர்ந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

மா. வர்மன்: தளவா! ஸேனாபதி! இவர்கள் எல்லோரையும் ஒழித்து, பக்கத்திலுள்ள கொல்லம் முதலிய ராஜ்யங்களையும் வென்று, ஒன்று சேர்த்து, திருவாங்கூரைப் பெரிய ராஜ்யமாகச் செய்ய வேண்டும் என்ற ஆசை எனக்கு. இந்த நான் இளவரசராய் இருக்கும்போதே எனக்குத் தோன்றிய பெருங் கனவு.

தானுப்பிள்ளை: கனவு கைகூடி உண்மையாக இதோ ஆகப்போகிறது.

மா. வர்மன்: உங்களைப்போல் பல வீரர்களும் மேதாவிகளும் உதவி செய்ய எனக்கு ஏற்பட்டிருக்க, அது எப்படி கைகூடாமலிருக்கும்? எங்கே நம், ராயஸம் ராமய்யன்? ராமய்யன் நமக்குக் கிட்டியது பத்மநாபன் அருளே! அன்று நான் உண் கழித்துக்கொண்டிருக்கும் போது, அவன் அணைந்துகொண்டிருக்கும் விளக்கைத் தூண்டிவிட்டானே, அது முதற்கொண்டு அவனிடம் எனக்கு ஓர் அளவுகடந்த அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றன.

ஆறுமுகம்பிள்ளை: அரசே! ராமய்யர் தூண்டிவிட்டது விளக்கல்ல, மார்த்தாண்டவர்மரின் ஸாம்ராஜ்யமே! தங்கள் புகழே!

மா. வர்மன்: இதோ யாரோ விரைந்து நம்மிடம் ஓடி வருகின்றனரே, யார்? ஓ, நம் ராமய்யனே! ராமய்யனே! என்ன செய்தி? என்ன இப்படி வேகம்? யாரிவ் விருவரும்? எங்கிருந்து இவரை இழுத்துக்கொண்டு வந்திருக்கிறாய்? ஏன் இவர் கைகளில் விலங்கு? யார் இந்தப் பண்டாரம்?

ராமய்யன்: மஹாராஜா! தாங்கள் வரும் பங்குனி ஆரத் விழாவில் கடவுள் ஊர் கோலத்தோடு சங்கமுகக் கடற்கரைக்கு நடந்து செல்லும்போது தங்களைக் கொலை வாங்கிவிடுவதா.........

எல்லோரும்: ஆ, என்ன, என்ன!

ராமய்யன்: ஆம், தங்களைக்கொலைவாங்கி விடுவாதாக எட்டு வீட்டுப் பிள்ளைமாரும் மற்றப்பகைவரும்கூடி வேங்கனூர் அம்பலத்தில் சதியாலோசனை செய்தனர். இதோ இந்தப் பண்டாரம் அந்த அம்பலத்திலிருந்து விரைந்தோடி வந்து இதை என்னிடம் சொன்னான். இந்தச் சதியாலோசனையை ஓலையில் எழுதி, தூதர்கள் தம் கால் செருப்புகளில் மறைத்து வைத்துக் கொண்டு பலருக்கும் கொண்டுபோகின்றனர். இதோ ஓலை, இவ்விரு தூதர்களைப் பிடித்ததும், இவர்களுடைய செருப்பிலிருந்து கிடைத்தது.

(இதற்குள் வாயிலில் முழக்கம், சண்டை சச்சரவு; ஒரு வாயிற் காப்போன் ஓடிவந்து தெரிவிக்கிறான்.)

வாயிற்காப்போன்: அரசே, அரசே! பப்புத்தம்பி எங்களை மீறி, தங்களைக்காண உள்ளே நுழைய முயற்சிக்கிறார். அவரைத்தடுத்துக் கீழே தள்ளினோம். அதன் மேல் ராமன் தம்பி பலாத்காரமாய் உள்ளே நுழைய மன்றாடுகிறார்.

(மேலும் முழக்கம்.)

இதோ ராமன் தம்பி உள்ளே நுழைந்துவிட்டாரே! ஐயோ! உருவிய கத்தியோடு மஹாராஜாவைக் குறித்து ஓடிவருகிறாரே! பிடியுங்கள்.........

மா. வர்மன்: இதோ நானே இவனைப் பிடித்து வீழ்த்துகிறேன்.

எல்லோரும்: மஹாராஜ், வேண்டாம்; இதோ நாங்கள் போகிறோம்.

(முழக்கம். மார்த்தாண்டவர்மனே பாய்ந்து ராமன் தம்பியைப் பிடித்து, கத்தியால் குத்தி வீழ்த்துகிறான். "ஜய மஹாராஜ்" என்ற சப்தங்கள். மார்த்தாண்ட வர்மன் ராமய்யனைப் பார்த்துச் சொல்லுகிறான்.)

மா. வர்மன்: ராமய்யனே! ஒழிந்தது ஒரு பகைக்கூட்டம்.

ராமய்யன்: அரசே! இப்படி திடீரெனத் தாங்களே பகைவரிடை பாயக்கூடாது; நாங்கள் இருக்கிறோமே!

மா. வர்மன்: வாஸ்தவம்! ஆனால் இந்த ஞாதிப் பகைவரின் மேல் எனக்கிருக்கும் சினத்தினால் என்னை நான் அடக்கிக்கொள்ளமுடியவில்லை. எட்டு வீட்டுப் பிள்ளைமாரும் வரட்டும், அவரையும் ஒரு கை பார்க்கிறேன். நான் வாளும் கையுமாய் ஆரத் விழாவில் ஸ்வாமியைச் சங்கமுகத்திற்கு அழைத்துப் போகிறேன்; நீங்கள் எல்லோரும் வாருங்கள்; இந்தப் பிள்ளைமார்கள் என்னை என்ன செய்துவிடுகிறார்கள், பார்ப்போம்......

[தங்கள் சூழ்ச்சி வெளியாகிவிட, பிள்ளைமார்கள் ஆரத்தில் தலை காண்பிக்கவில்லை; ஆரத் ஆனதும் அவர்கள் எல்லோரும் கைதியானார்கள்.

ராமய்யனே தளவா ஆனான்; மார்த்தாண்டவர்மனுக்கு வெற்றிமேல் வெற்றி வந்தது.

தம்புராட்டிகளோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தால் திருவனந்தபுரம் அதிகாரம் முழுதும் மார்த்தாண்டவர்மன் கைக்கு வந்தது; கொல்லம் ஜயிக்கப்பட்டது; இளயடத்துஸ்வரூபம் வசப்பட்டது; ஓலந்தர் தோல்வி அடைந்தனர்; 'வலியகப்பிதன்' என்ற ஓலந்தவீரனை 'டிலன்னாய்' (De Lannoy) மார்த்தாண்டவர்மனின் ஸேனாபதியாகி, படைகளைச் சீர் திருத்தினான்; அம்பலப்புழாவும் மார்த்தாண்டவர்மனின் ஆட்சிக்குள் வந்தது.

தற்பொழுது இந்தியாவிலேயே தயாராகின்றன!

★

- ப்ளோயர்களுடன் போர்ட்டபிள் போர்ஜுகள்
- உருளே வார்ப்பு யந்திரங்கள்
- பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்
- அஸிடிலேன் ஜெனரேடர்கள்
- ப்ளாட்பாரம் டிராலிகள்
- ஹெவி ட்யூடி ஜாக்கிகள்
- போர்ட்டபிள் கிரேன்கள்
- வீல் பாரோஸ்
- ஸ்டோரேஜ் டாங்குகள்

★

தயாரிப்பவர்கள் :

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோடு :: சென்னை - 2

1840-ம் ஆண்டு முதல் தொண்டாற்றி வரும் முதன்மையான இந்தியத் தொழில் ஸ்தாபனம்

பிராஞ்சுகள் :

பெங்களூர், திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், ஹைதராபாத் (டெக்கான்) :: கொழும்பு (ஸிலோன்).

மிளகு மண்டிகளை ஏற்படுத்தி, வியாபாரத்தை ஒழுங்குபடுத்தி, ஆங்கிலேயரோடும் ஒப்பந்தமும் ஸ்னேகமும் செய்து கொள்ளப்பட்டது; மக்களின் நலத்திற்காகப் பாடுபட்டு, பல நல்ல பணிகளை ராஜ்ய முன்னேற்றத்திற்காக மார்த்தாண்டவர்மனும் தளவா ராமய்யனும் யோசித்துச் செய்தனர்.

பத்மநாபன் அருளால் மேன்மேலும் வெற்றியடைந்த மன்னன் மார்த்தாண்டவர்மனும், தளவா ராமய்யனும் பத்மநாபஸ்வாமி ஸன்னிதியில் கடவுளை வணங்கிக் கொண்டிருக்கின்றனர்.]

2

(கோயில் ஓசைகள்)

மா. வர்மன்: ராமய்யனே! பன்னிராயிரம் ஸாலக்ராமங்களை உள்ளேபோட்டு, திருப்பணி செய்யப்பட்ட அனந்த பத்மநாபனின் திருமேனி அழகைப் பார்த்தையா? இவருடைய அருளே நமக்கு ஜயத்தை அளித்தது. இவருடைய அருளே என்னை மக்களின் நன்மைக்காகப் பாடுபடும்படி தூண்டுகிறது.

ராமய்யன்: அரசே! 'பொன்மன' முதலிய விடங்களில் வெள்ளத்திற்காகத் தாங்கள் கட்டளையிட்ட அணைகள், நாடெங்கும் போட உத்தரவிட்ட ரஸ்தாக்களும், செய்து முடிக்கப்பட்டன. நிலவரிச் சீர்திருத்தங்களும் தாம் சொல்லியபடி செய்யப்பட்டுவிட்டன.

மா. வர்மன்: ராமய்யனே! இவையெல்லாம் நல்ல காரியங்களே. இக் காரியங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலுள்ளன இந்த அனந்த பத்மநாபன் கோயிலில் நாம் செய்திருக்கும் ஊழியங்கள். கோபுரமும், ஒற்றைக்கால் மண்டபமும் என்ன நேர்த்தியாய் அமைந்திருக்கின்றன பார்த்தாயா?

ராமய்யன்: அனந்த பத்மநாபன் அருளோடு தங்கள் புத்தியும், வீர்யமும், உதாரமும் இல்லாவிடில் ஒன்றும் நடத்திருக்காது.

மா. வர்மன்: புத்தியும் வீர்யமும், ராமய்யனே, உன்னுடையவை, என்னுடையவல்ல. ராமனுக்கு லக்ஷ்மணன் ஏற்பட்டது எப்படியோ, அப்படி எனக்கு நீ வாய்த்தாய்! உனக்கு என்ன பதில் உபகாரம் செய்யப்போகிறேன்?

ராமய்யன்: பதில் உபகாரமா? ராமனுக்கு லக்ஷ்மணனிடம் இருந்த அன்பை என்னிடம் வைத்தால் போதும். நான் செய்த தொண்டு இன்னும் பூர்த்தியாகவில்லையே? இந்த ஜய மாலையில் கொச்சி என்ற ரத்னம் இன்னும் சேர்க்கப்படவில்லையே! கேரளம் முழுதும் ஒரே குடையின்கீழ் வரவேண்டாமா?

மா. வர்மன்: ராமய்யனே! இவ் வரிய ராஜ்ய லக்ஷ்மியை நானும் நீயும் உண்டாக்கியது பெரிதல்ல; இது யாருக்கு உரியது?

ராமய்யன்: தங்களுக்கே!

மா. வர்மன்: இல்லை; நம் அனந்த பத்மநாபனுக்கே இந்த ராஜ்ய லக்ஷ்மி உரியவள். இனி என் பட்டத்தில் வரும் அரசர் அனைவரும் இந்த ராஜ்ய லக்ஷ்மிக்கு ஸேவகர், ப்ரபுக்கள் அல்ல; அனந்த பத்மநாபனே ப்ரபு. தலையில் தாங்கும் தம் கிரீடங்களுக்குமேல் என் குலத்தவர் அனைவரும் இனி "பத்மநாபதாஸர்" என்ற பட்டத்தையே மேலான தாய்த் தாங்கவேண்டும். என்ன நினைக்கிறாய்?

ராமய்யன்: என்ன அருமையான எண்ணம்! நீர் ராஜரிஷி என்பதில் என்ன ஸந்தேகம்?

மா. வர்மன்: அனந்த பத்மநாபா! ப்ரபோ! இந்த வஞ்சி லக்ஷ்மி உனக்கு நிவேதனம்; உனக்கு ஸமர்ப்பணம்; பெற்றுக் கொள்ளுக; இதோ மார்த்தாண்டவர்மன் உன் முதல் தொண்டன். யோகக்காரர்களே, போத்திமார்களே, பட்டர்களே, மக்களே! இதோ நீங்கள் ஸாக்ஷியாக என் வாளைப் பத்மநாபன் ஸன்னிதியில் வைத்து, என் வாளின் மேல் ஆணையாய் இந்த வஞ்சி லக்ஷ்மியை அனந்த பத்மநாபனுக்கு அர்ப்பணம் செய்தேன்............

ராமய்யன்: ராஜ ரிஷி, பத்மநாபதாஸ, மார்த்தாண்டவர்ம மஹாராஜ், ஜய விஜயீ பவ!

எல்லோரும்: ஜய விஜயீ பவ!

(ஜய ஜய என்ற முழக்கங்கள்; கோயில் மணி யோசைகள்.)

கலையும் காதலும்

ஜி.எஸ்.மணி

திறந்திருந்த சாளரத்தின் வழியே வெகு தூரத்திற்குப் படர்ந்திருந்த பசும் புல் வெளியை நோக்கிப் பெருமூச்செறிந்தாள் புஷ்பகந்தி.

தூரத்திலே பருவமறிந்த பெண்ணின் பண்புடன் அமைதியாக அன்ன நடை போட்ட ஆற்றங்கரையருகே கவி கலாதாஸனின் குடில் எழிலுருவமாய்க் காணப்பட்டது.

மாலைப் பொழுதினிலே யந்த
முல்லை முறுவலிலே;
சூழ் அமைதி தன்னில்—குலவிடும்
புள்ளினப் பாட்டதனில்
கோலக் கலையழகி—உந்தன்
தீங்குரல் கேட்குதடி!

என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூடிய கலா தாஸனின் கவிதை காற்றிலே மிதந்து வந்து புஷ்ப கந்தியின் செவிகளிலே தேனாகப் பாய்ந்தது.

அவள் உள்ளம் விகசித்தது, அந்த அழைப்பு ஒருகால் தன்னைக் குறிப்பதுதானோ வென்றெண்ணி ஒரு கணம் பிரமையடைந்தாள்.

அத்தகைய பாக்கியமும் அவளுக்குக்கிடைக்குமா?

அந்த இன்பக் கனவிலே அவள் ஒரு நிமிஷம் தன்னை மறந்தாள்.

சாளரத்தை அடுத்திருந்த மாமரக்கிளையொன்றில் அணில்களின் காதல் நாடகம் நடந்து கொண்டிருந்தது,

பிணக்குக் கொண்ட பெண்ணிடம் ஆண் அஞ்சி அஞ்சி, கொஞ்சிக் கொஞ்சி நெருங்கியது; தயங்கித் தயங்கி அதன் சம்மதத்தை எதிர்பார்த்து நிற்பது போல் காட்டிக்கொண்டது. பெண்ணோ இருந்த இடம் விட்டு அசையாமல் நின்றது; கண்கள் மட்டும் ஆவலைத் தெளிவாகக் காட்டியது. துணிவு கொண்ட ஆண் மெதுவாக முன்னேறி அதன் மீது முகத்தை வைத்தது; அவ்வளவே; 'சரட்' டென்று பாய்ந்தோடி விட்டது பெண்; அதை ஆண் உற்சாகத்துடன் தொடர்ந்தது; மீண்டும் அதே ஊடல் நாடகம். ஆனால் இம்முறை ஆணுக்கு வெற்றி கிட்டிவிடும்போலிருந்த சமயம்—திடீரென்று மேற்கிளையொன்றிலிருந்து மூன்றாவது அணில் ஒன்று குதித்தோடி வந்தது. பெண் பயந்துபோய் மறுபடியும் பாய்ந்தோடிப் பதுங்கிவிட்டது. ஆணிடம் விவரிக்க முடியாத ஏமாற்றம்—எதிராளியிடம் சொல்ல முடியாத கோபம்... ....

உலகெங்கும் சர்வ சாதாரணமாக நடப்பது தான்.

ஆனால் மனமற்ற ஆணிடம் பெண் ஊடாடுவதைக் காண முடியுமா? அலக்ஷியமாக இருக்கும் ஆணின் பின்னே காதல் பிச்சையை வேண்டி ஒரு பெண் துரத்துவதைப் பார்க்க முடியுமா? வெகு அபூர்வம்தான்.

ஹ்ருதயமற்ற அந்தக் கவியிடம் அவள் காதலுக்காக மன்றாடுகிறாள்; அவனைப் பின் தொடர்ந்து போகிறாள், சரி; இருக்கட்டும்.

அணில் உலகிலே வந்த மூன்றாவது எதிரியைப் போல, அவள் அந்தரங்கத்தைப் பிளக்கும் அந்த மூன்றாவது மனிதன் யார்?

வாசலிலே நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய வெள்ளி ரதம், சுற்றிலும் தொங்கியாடும் சின்னஞ்சிறு தங்கமணிகள் ரமணியமாக ஒலிக்க வந்து நின்றது.

அதிலிருந்து வீரமும், காம்பீர்யமும் ஒருங்கே திகழ சுந்தர புருஷன் ஒருவன் இறங்கி, தட தடவென்று உள்ளே நுழைந்தான்.

புஷ்பகந்தி திடுக்கிட்டாள். மறுக்ஷணமே சமாளித்துக்கொண்டு அரசனை வரவேற்கத் தயாரானாள்.

சர்வ சுதந்தரத்துடன் அவள் இருக்கும் அறையில் நுழைந்த அரசன் விஜயவர்மனைப் புஷ்பகந்தி பணிவுடன் வரவேற்றாள்.

"அமருங்கள் அரசே!" என்று அன்புடன் சொல்லி ஆசனத்தைக் காட்டினாள்,

உட்கார்த்த அரசன் அவளை ஆர்வத்துடன் நோக்கினான்.

"புஷ்பா! சற்று முன்னர் சாளரத்தருகே நான் கண்ட உன்னுடைய திவ்வியத் தோற்றத்திற்காக என் தேசத்தையே கேட்டாலும் கொடுத்துவிடத் தயார்"—என்று முழுமனதுடன் கூறினான்.

புஷ்பகந்தி வெட்கம் கொண்டு தலைகுனிந்தாள்; பழங்கள் கொண்ட தாம்பாளத்தை அவனருகில் நகர்த்தியபடியே, "ஒரு பெண்ணின் வெறும் தோற்றத்திற்காக மட்டும் தேசத்தையே தர்மம் தந்துவிடக்கூடிய அவ்வளவு பலஹீன ஹ்ருதயமா உங்களுக்கு அரசே?" என்று தலை நிமிராமலே வினவினாள்.

விஜயவர்மன் திடுக்கிட்டான்; எதிரில் நிற்கும் அவளைக் கூர்ந்து நோக்கியபடியே, "உனக்காக எதையும் செய்வது பலஹீனமா, புஷ்பா?'' என்று பதிலுக்குக் கேட்டான்.

"என்னிடம் எதைக்கண்டு இவ்வளவு உயர்வாகப் பேசுகிறீர்கள் அரசே?''

"மட்டமென்று சொல்லக்கூடிய அம்சம் உன்னிடம் என்னதான் இருக்கிறது புஷ்பா?''

"அப்படிப் பார்க்கப்போனுல் என் பிறவியே மட்டம் தானே?''

"ஈச்வர ஸ்ருஷ்டியில் எப்பிறப்பும் உயிர் பிறப்புத்தான் புஷ்பா! ஜாதியை அனுசரிக்கும் தர்மங்களின் மூலம்தான் வர்க்கம் வேறுபடுகிறது.''

"அவ்விதமே வைத்துக்கொண்டாலும் என் குல தர்மம் கீழ்த்தரமானதுதானே? அந்த மாசைத் துடைத்துவிடமுடியுமா?''

"உன்னையே என் பட்டமஹிஷியாக்கிக் கொண்டு அந்த மாசைத்துடைத்துவிடுவேன், புஷ்பா, என்னை நம்பு. மனித சமூகத்தால் மாசுபடுத்தப்பட்ட தேவதாஸி குலம் அதே மனித சமூகத்தின் பெருந்தன்மையால் களையேறமுடியும்.''

"தங்கள் மாசற்ற உள்ளத்தை உணராமல் இல்லை, பிரபு; ஆனுல் என்மீதே எனக்கு நம்பிக்கையில்லையே? தங்களுக்கு எவ்விதம் நம்பிக்கையூட்டுவேன்?'' என்று உடைந்த குரலில் சொன்னுள் புஷ்பகந்தி.

அரசனின் கண்கள் ஆச்சர்யத்தால் அகல விரிந்தன.

"என்ன சொல்லுகிருய் புஷ்பா? உன்னையே நீ நம்பவில்லையா! அப்படியென்ருல் அர்த்தம் என்ன?'' என்று கூவினுன்.

"ஆம், அரசே! இந்திரபுரியை அடிமை கொண்டு அரசாளும் விஜயவர்மரின் உள்ளத்தைக்கூட நான் அடிமைகொண்டுவிட்டேன்; உண்மைதான்; ஆயினும் மனதை, நினைத்த போது, நினைத்தபடி கட்டுப்படுத்த முடியாத கவி கலாதாஸரின் ஹ்ருதயத்தை என்னுல் கட்டுப்படுத்தமுடியவில்லையே! அரசனை வசப்படுத்தும் அழகும், திறமையும், ஒரு ஆண்டியை வசப்படுத்த முடியவில்லையே? என்னை நான் எப்படி நம்புவது?''

அரசன் திகைத்துப்போய், சிறிதுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான், பிறகு மெதுவான குரலில், "அப்படியானுல் கலாதாஸன் பாக்யசாலிதான்!'' என்று முணுமுணுத்தான்.

"எப்படியும் என்னைப்போன்ற துர்ப்பாக்யவதி இருக்கவே முடியாது, அரசே!'' என்று கூறின புஷ்பகந்தியின் கமலக் கண்களிலே நீர் நிறைந்தது.

மௌன மயமாகக் கொஞ்ச நேரம் கழிந்தது.

"என் உள்ளத்திற்குத்தான் விருந்தளிக்க மறுத்துவிட்டாய்; கண்களுக்காவது விருந்தளிப்பாயா, புஷ்பா!'' என்று கடைசியாக வாய் திறந்தான் விஜயவர்மன்.

புஷ்பகந்தி ஆடத் தொடங்கினுள்.

எட்டிப்பிடிக்க முடியாத கொடியின் உச்சியிலே மலர்ந்த உயர்ந்த புஷ்பம் ஒன்று அந்த நாட்டியத்திடையே தோன்றியது. பறித்து முகர்ந்து மகிழ்வாரற்று அந்த மலர் கொடியிலேயே வாடி வதங்குவதாகக் காணப்பட்டது. விவரிக்கமுடியாத ஏமாற்றம் அந்த அபிநயங்களிடையே எட்டிப்பார்த்தது. உடைந்த உள்ளத்தின் மெலிந்த குரல் அவள் தோற்றத்திலே சன்னமாக இழையோடியது.

நாட்டியம் முடிந்ததும் அரசன் பெருமூச்சு விட்டான். வாய் திறவாமல் எழுந்து வெளியே போய்விட்டான்.

ரதத்தின் மணியோசை காற்றில் கரைவது அரசன் போவதை அறிவித்தது.

2

அறைக் கதவு லேசாகத் தட்டப்பட்டது. அயர்ச்சியுடன் படுக்கையில் சாய்ந்தபடியே, "யாரது?'' என்று குரலில் அலக்ஷியம் ஒலிக்கக்கேட்டாள் புஷ்பகந்தி.

"நான்தான், புஷ்பகந்தி! உள்ளே வரலாமோ?'' என்று கதவுக்குப் பின்னுலிருந்து குரல் வந்தது.

அது கவி கலாதாஸனின் குரல்!

பயந்தோடிப்போய் ஆசையுடன் கதவைத் திறந்தாள் புஷ்பகந்தி,

அரசன் கொடுத்திருந்த நீலப் பட்டினை யோகவேஷ்டியாக அணிந்துகொண்டு, நெற்றியில் விபூதியுடனும், கபடற்ற புன்னகையுடனும் உள்ளே நுழைந்தான் கலாதாஸன்.

"யாரோ அன்னியரைப்போல் வெளியே நின்றுகொண்டு, 'உள்ளே வரலாமா'வென்று கேட்கிறீர்களே! நினைத்தபோதெல்லாம் என்னிருப்பிடம் வருவதற்கு உங்களுக்கு உரிமையில்லையென்பதாக நினைத்துவிட்டீர்களா?'' என்று ஸ்வாதீனத்துடன் கொஞ்சிக் குழைந்தாள் புஷ்பகந்தி.

"அப்படியில்லை புஷ்பகந்தி! பெண்; அதிலும் அரசனின் மதிப்பைப்பெற்றவள்; நீனைக்கும்போது வரும் சலுகை சங்கடத்தில் வந்து முடிந்துவிட்டால்?" என்று சிரித்தான் கலாதாஸன்.

புஷ்பகந்தியின் அழகிய வதனம் சிறுத்து விட்டது.

"ஸ்வாமி! அரசனும், ஆண்டியும் எனக்கு ஒன்றுதான்; அரசனின் மதிப்புக்குப் பாத்திரமாகியிருக்கிறேன் என்பதும் ஓரளவு உண்மையே; ஆயினும் ஆண்டியின் மதிப்புக்கு நான் இன்னும் தகுதியற்றவளாகத்தானே இருந்து வருகிறேன்? அது என் குறைதானே?" என்ருள்.

"புஷ்பகந்தி! நான் வித்யாசமாக ஒன்றும் கேட்கவில்லையே" என்ருன் கலவரமடைந்த கலாதாஸன்.

அதற்குள் தனது படபடப்பை அடக்கிக் கொண்ட புஷ்பகந்தி, "நானும் வித்யாஸமாக ஒன்றும் பேசவில்லையே!" என்று அமைதியுடன் மொழிந்தவாறு அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினுள்.

கலாதாஸன் அவளைத் தாண்டிக் கொண்டு போய் அப்பால் இருந்த ஓர் ஆசனத்தின்மீது அமர்ந்து கொண்டான்.

"நாலைந்து தினங்களாகப் பாடம் கேட்க வரக்காணேமே யென்று நினைத்துப், பார்த்து விட்டுப்போகவே வந்தேன்."

"உள்ளத்தில் உற்சாகம் இருந்தால் அல்லவா பாடம் கேட்பதில் ஊக்கம் இருக்கும்?" என்று விடை பகர்ந்தாள் புஷ்பகந்தி.

"உற்சாகக் குறைவா? என்ன காரணம், புஷ்பகந்தி?"

'நீங்கள் தான் காரணம்' என்று பளிச் சென்று சொல்லிவிட எண்ணினுள்; ஆனல் பெண்மை குறுக்கே நின்று விட்டது. ஆகவே "காதல் என்றும், கலை என்றும் ஏட்டில் படிப்பதுடன்மட்டும் உள்ளம் திருப்தியடைந்துவிடுகிறதா, ஸ்வாமி? வாழ்விலும் அனுபவித்தறிய அவல மனசு ஆசைப்படுகிறது!" என்று தெரிவித்தாள், தலைகுனிந்தபடி.

அவள் உணர்த்திய குறிப்பை அவன் உணர்ந்து கொண்டானே, என்னவோ?

"காதலுக்காகக் கலையா? அல்லது கலைக்காகக் காதலா?" என்று கேட்டான்.

அவள் அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கினுள்; "காதலுக்காகத்தான் கலை என்பது என் அபிப்ராயம்" என்று விடையளித்தாள்.

"அப்படியல்ல; கலைக்காகவே காதல்" என்ருன் கவி.

"அப்படியானல் காதலுக்கும், கலைக்கும் நடுவே இருக்கும் பெண்மை எதற்காகவோ?" என்று வினவினுள் புஷ்பகந்தி.

கலாதாஸன் சிறிது நேரம் மௌனமாக வீற்றிருந்தான்; பிறகு, "காதலுக்கும் கலைக்கும் நடுவில் பெண்மை யென்பதோ—ஆண்மை யென்பதோ அவரவர் மனேபாவப்படி அமைவதாகும். ஆனல் அவற்றின் இடையே ஒன்றுமே இல்லை; தெய்வீகத்திலே அவை பிறக்கின்றன; தெய்வீகத்திலேயே அவை ஐக்யமாகின்றன. இடையே அவற்றைச் சம்பந்தப்படுத்துவதும் தெய்வீகம்தான். கலையின்றிக் காதல் இருக்கலாம்; ஆனல் காதல் இல்லாமல் கலை இருக்கவே முடியாது."

"நல்லது; பெண்மைக்கும், காதலுக்கும் உள்ள நெருங்கிய உறவு உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் புஷ்பகந்தி,

"அதைப்பற்றிய கவலை எனக்கு இப்போது ஏற்படவில்லை; குரு சிஷ்ய மனேபாவத்தில் காதலுக்கு இடமே இருக்கக்கூடாது."

"காதலுக்குக் கண்ணில்லை ஸ்வாமி!"

"சரி; புஷ்பகந்தி! இப்போது உன் மனநிலை சரியில்லை யென்றுதான் எண்ணுகிறேன்; போய் வருகிறேன்."

ஆக்ஷேபனையே இன்றி அவனைக் கைகூப்பி வணங்கினுள் புஷ்பகந்தி.

வானத்திலே சந்திரனின் மடியில் அமர்ந்திருந்த ரோகிணி அவளை நோக்கிப் புன்னகை செய்வதுபோல் தோன்றியது.

3

இவ்வுலக உணர்வையே அடியோடு மறந்தவளாய், ஸகலவிதமான கலைகளுக்கும் இருப்பிடமும், பிறப்பிடமுமாய் விளங்கிய நடராஜ மூர்த்தியின் விக்ரஹத்திற்கு எதிரே நாட்டியமாடிக் கொண்டிருந்தாள் புஷ்பகந்தி.

அந்த நடனத்திலே என்னதான் இருந்தது; என்னதான் இல்லை—என்பதையே நிர்ணயிக்க இயலாதவாறு அவ்வளவு அபூர்வமாய் இருந்தது. ஆனந்த மூர்த்தியின் ஆனந்த நடனம் இருந்தது; ஊர்த்துவரின் ஊழிக் காலக்கூத்து இருந்தது. பெண்மையின் மென்மை இருந்தது. ஆண்மையின் கம்பீரம் இருந்தது; ஸ்திரீயின் நளினம் இருந்தது; புருஷனின் முரட்டுத்தனம் தெரிந்தது; இன்னும் காதல் இருந்தது; காமம் இருந்தது; தாபம் தெரிந்தது; கோபம் தெறித்தது; அன்பு புன்

னகை புரிந்தது; குரூரம் அலை வீசியது; ஒரு சமயம் காட்டருவி குதித்தோடியது; இன்னொரு பொழுது அகண்ட ஆறு அன்ன நடை போட்டது; வேறொரு சமயம் வெள்ளம் கரை புரண்டோடியது; மற்றொருதரம் வறண்டு போய்க் கானலாடியது.

அபினயத்திலே அதியற்புதமான எவ்வளவோ பிடிகள்; மலையிலிருந்து புரண்டு விழுவது போல் ஒரு முறை; ஆகாயவீதியில் அனாயாஸமாகப் பறப்பது போல் ஒரு முறை; குளிர்ந்த தடாகத்தில் ஆனந்தமாக நீந்துவது போல் ஒரு தடவை; ஜ்வாலை வீசும் நெருப்பை வெகு லாகவமாகத் தாண்டிக்குதிப்பது போல் ஒரு தடவை. ரமணீயமான நந்தவனத்தில் உலாவுவதுபோன்ற பிரமை; அடுத்தாற்போல் தஹிக்கும் பாலைவனத்தில் வழி தெரியாமல் அலைவது போன்ற மலைப்பு.

மனமோஹனமான கடைக்கண் வீச்சிலே, தூண்டில் போட்டு இழுக்கும் மீனைப்போல், மனசைச் சுண்டிச் சுண்டி இழுத்தாள். ரஞ்சகப் புன்னகையிலே உயிரையே கவர்ந்து சென்றாள். அழகான முக அசைப்பிலே அவள் ஸகலத்தையும் மறக்கச் செய்தாள்; லாகவமான உடல் நெளிவிலே பித்தம் கொள்ளச் செய்தாள்.

வெறி கொண்டுதான் அவள் அப்படி ஆடுகிறாளா? உணர்விழந்தே அவள் சுற்றி வருகிறாளா? வியர்வை வெள்ளத்திலே அவள் மிதந்தாள்; அங்கமெல்லாம் சோர்ந்து, துவண்டு, தள்ளாடின. களைப்பு அவளையும் மீறிக் கவ்விக்கொண்டது; அயர்ச்சி அலை அலையாகப் பரவி வரத்தொடங்கிவிட்டது.

ஆயினும் அவள் நிற்காமல் ஆடினாள்; ஆடிக்கொண்டேயிருந்தாள். இதற்கு ஒரு முடிவே கிடையாதா?............முடிவில்லாத ஆட்டமாக இப்படி ஆடினால்............அவள் உடல் அப்புறம் எதற்குத்தான் உதவும்?......

“உன் உயிரையே பணயமாக வைத்து ஆடுகிறாயா, புஷ்பகந்தி? போதுமே!” என்று அலறிற்று அரசன் விஜயவர்மனின் குரல்.

“கலையில் காதலைக் கண்டேன்; காதலில் கலையைக் கண்டேன்; தனித்தனியே பிரிக்க முடியாத அவ்விரண்டிற்கும் உன் உடலையும், உயிரையுமே அர்ப்பணித்துக் கொண்டு விடாதே, புஷ்பா! என்னை மட்டும் தனியே தவிக்கவிட்டு விடாதே!” என்று தவித்தான் கவிகலாதாஸன்.

புஷ்பகந்தி சோர்ந்து போய், தரையில் விழுந்தாள்.

சுழன்று சுழன்று எழும்பிக்கொண்டேயிருந்த அகிற்புகை, அந்த அறையைச் சூழ்ந்து, அவர்களைச் சூழ்ந்து, கடைசியில் அவளையும் சூழ்ந்துகொண்டு விட்டது.

4

சுடர்தட்டி மங்கி எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டி, சுடரையும் தெறித்து விட்டாள், புஷ்பகந்தி. மீண்டும் அறையெங்கும் பிரகாசம் பரவி நின்றது.

“இப்போது சொல்லுங்கள்: காதலுக்காகக் கலையா? அல்லது கலைக்காகக் காதலா என்று?” என்று அரசனை நோக்கிப் புன்னகையுடன் வினவினாள்.

“காதலுக்காகத்தான் கலை” என்று சற்றும் யோசிக்காமல் விடை பகர்ந்தான் விஜயவர்மன்.

கவி கலாதாஸனின் பக்கம் அவள் பார்வை திரும்பியது.

கலாதாஸன் சொன்னான்:

“காதல்—கலை இரண்டும் உனக்காகவேதான் புஷ்பா!”

அப்போது புஷ்பகந்தியின் மதிவதனத்திலே தோன்றிய பிரகாசம் அசாதாரணமானதாக இருந்தது; அவள் சொன்னாள்:

“கலையின் பிறப்பிடம் தெய்வம்; காதலின் பிறப்பிடம் உள்ளம். அவ்விரண்டிற்கும் உறைவிடம் மனுஷ்ய தேகம்; இன்பத்திற்குக் காரணமான இவை அனைத்தையும் சாசுவத இன்பத்தின் நிலைக்களனாகிய இந்த நடராஜ மூர்த்திக்கே நிவேதித்து விட்டேன். உங்களுக்கும் ஸம்மதம்தானே?”

“தேவி! உன் காதலுக்கு ஸரி ஸமமாக என் உள்ளத்தால் ஈடு கொடுக்க முடியாது!” என்றான் அரசன் விஜயவர்மன்.

“தாயே! உன் கலையுணர்ச்சிக்கு முன்னே என் கவித்வம் வெறும் கூளமே!” என்றான் கவி கலாதாஸன்.

கலையும், காதலும் தெய்வத்திடம் ஒன்றாக ஐக்யமாயின.

பெண்மையும், ஆண்மையும் கூடி உறவாடின.

வெறும் சரீரங்கள் என்றென்றைக்கும் பிரிந்தன.

தனித்து நின்ற புஷ்பகந்தி சாளரத்தின் வழியே நோக்கினாள்; தூரத்தே ஆறு பூரணமாகப் பெருகிப் பாய்ந்துகொண்டிருந்தது. முழு மதி, பூரண கலையுடன், வான வீதியிலே பவனி வந்துகொண்டிருந்தான்.

அவள் உள்ளத்திலே விவரிக்க முடியாத ஒரு தெய்வீக சாந்தி நிலவியது.

கம்பனும் சித்திரமும்

வி.ஜி. ஸ்ரீநிவாசன்

கம்பன் ஒரு கவி. ஒரு பெருங் கவி. உண்மைக் கவி. "கவிதாலோகத்தின் பேரரசர் என்று சொல்லத் தகுந்தவர்களெல்லாம் கம்பனுடைய சன்னிதியில் முடிசாய்த்து வணங்க வேண்டியதுதான்!" அவன் அவ்வளவு புகழ் படைத்த கவிச் சக்கரவர்த்தி. "கம்பன் எனும் பெரும் பெயரை நினைக்கும் போதே கவிதை என்ற கன்னிகைதான் வருவாள் அங்கே!" கம்பன் "எல்லையில் அழகை எல்லாம் இனிதுற முகந்து நல்ல சொல்லமுதுடனே ஆழ்ந்த பொருளணி பொருந்தக் கூட்டிக்" கற்பகக் கவிதை தந்தான். "எண்ண எண்ணப் புதுப் பொருள் ஈந்திடும் எல்லையற்ற கலைச் சுரங்கம் அவன்." தமிழ்க் கன்னி வாழ்வதற்கெனவே "பழுதிலாப் பதினாயிரம் பொன் மணி இலகும் காவிய மாளிகை கட்டினான்." கம்பன் தனது வாக்கினால் மண்ணையும் விண்ணையும் ஒருங்கே அளந்தான். "கற்பனை நிறைந்தது கம்பன் சொல்; கலைத் திறம் நிறைந்தது கம்பன் சொல்; அற்புதச் சித்திரம் அவன் பாட்டு!" கம்பன் "நயம் தெரிந்து கதை நடத்தும், நாடகக் கவிஞன்", அந்த அற்புதச் சித்தன், "இந்திர ஜாலமெல்லாம் கவியில் இயற்றிக் காட்டிடுவான்!" இல்லை, "அயன் படைப்பினையும் திருத்தி அழகு செய்திடுவான்!"

கம்பனுடைய கவிதை ஒவ்வொன்றும் சித்திரம்தான்! "சொல்லோவியம்" தான்! ஆனால், கம்பன் கவிஞன் என்ற முறையில் 'சித்திரங்களை' என்ன மாதிரி உபயோகப்படுத்தி இருக்கிறான்; எங்கெங்கே சித்திரங்களுக்கு உயிர் ஊட்டியிருக்கிறான்; எங்கெங்கு உயிரை வாங்கியுள்ளான்; ஓவியங்களைப் பற்பல நிலைகளில் எவ்வாறு காண்கிறான் என்பதுவே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

காவிய நாயகியாகிய சீதையை வருணிக்கும் போது "எழுது பாவை அன்னாள்", "ஓவியப் பாவை போன்றனள்" எனச் சித்திரத்திற்கு ஈடுபடுத்தி அழகு படுத்திச் சொல்கிறான் கம்பன். காவிய நாயகனான ராமனைக் குறிக்கும் போதோ 'ஓவிய எழிலுடை ஒருவன்" என்றே சொல்கிறான்! சில நிலைகளைப் பார்ப்போம்.

அயோத்தி மாநகரம் 'கலை வாழ் நகரம்'. அத் தெய்வமாநகரின் மாட மாளிகை, கூட கோபுரம் அனைத்திலும் அழகிய வண்ண விசித்திரங்களில் சிறந்த, ஜீவகளை நிரம்பிய சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஒரு கோபுர வாசலில் புறாவின் சித்திரம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. அது வெகு நேர்த்தியாகவும் ஜீவனுள்ளதாகவும் துலங்குகிறது. அது இருக்கின்ற நிலை, இயற்கைகளின் அமைப்பு, கண்களில் தோன்றும் ஜீவன் எல்லாமாகச் சேர்ந்து "தத்ரூப"மாக ஆக்கிவிட்டன. இந்தச் சித்திரப் புறாவைக் கண்ட ஆண் புறா ஒன்று அதைத் தனக்குச் சொந்தமான பெண் புறாவாக நினைத்துக் கொண்டுவிட்டது! அதையே பார்த்துக் கொண்டிருந்தது. ஆதலால், இதனுடைய பெட்டை கூவியழைத்தது காதில் விழவேயில்லை. சித்திரப் புறவு அப்படி மயக்கி விட்டது! அதைக் கண்ட பெண்புறா தனது சேவல் வேறொரு பேடையிடம் அன்பு செலுத்துகிறது என்று நினைத்து, ஊடல் கொண்டு கற்பகச் சோலைக்குச் சென்றுவிட்டதாம்.

"ஆவியொத்த அன்பு சேவல் கூவவந்தணைந்திடா
ஓவியப் புறவின்மா டிருக்கவூடு பேடையே"

உயிருள்ள இரு புறவுகள் பிரமிக்கும் படியாக அவ்வளவு அற்புதமாக இருந்ததாம் சித்திரம்,

ஒளி விடுகின்ற திவ்ய மேனி பெற்றுத் துலங்குகின்றவர்கள் அயோத்தி நகர மங்கையர். அவர்கள் ரூபத்திலே மாத்திரம் சௌந்தரியவதிகளல்ல, கலை ஞானத்திலும் கூடத்தான். இந்தச் சுந்தரக் கலாவதியர் சித்திரம் வரைவதிலும் பேராற்றல் படைத்தவர்கள். அவர்கள் தீட்டிய சித்திரங்களெல்லாம், "உண்மையில் இவை சித்திரங்கள் தாமா?" என்று வியக்கும்படி அவ்வளவு எழிலுடனும், உயிர்க்களையுடனும் இலங்குகின்றன சித்திரங்கள். சித்திரத்தில் தீட்டப்பட்ட உருவங்கள் படிப்படியாக வளர்கின்றன. மங்கையின் கைநலச் சிருஷ்டி விசேஷத்தால் அவை உயிர் பெற்று விடுகின்றன போலும்! சித்திர உருவங்கள் கண் மலர்ந்து தம்மைத் தீட்டியோரை நோக்குகின்றன. என்ன ஆச்சரியம்! அவைகள் கண் இமைக்கவில்லையே! ஏன், சித்திரங்கள் எங்காவது கண்ணிமைக்குமா? எனக் கேட்டு விடலாம். ஆனால், கம்பன் அப்படிச் சொல்லி விடுவானா என்ன? ஒரு காரணத்தைக் கற்பிக்கிறான் கவி. தம்மைப் படைக்கின்ற பேரழகியரின் சுடர்போன்ற மாசு மறுவற்ற மேனியைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமென்ற ஆசையினால் தான் அந்தச் சித்திரங்கள் கண்கொட்டவில்லை எனப் பகர்கிறான்.

"பொழுதுணர் வரியஅப் பொருவில் மாநகர்த்
தொழுதகை மடந்தையர் சுடர்வி ளக்கெனப்
பழுதறு மேனியைப் பார்க்கும் ஆசைகொல்,
எழுதுசித் திரங்களும் இமைப்பி லாதவே!"

உயிரற்ற சித்திரத்திற்கு உயிர்கொடுத்து விட்டான் கம்பனெனும் கவிக்கரசன். அயோத்தி நகர வாசிகளுக்கு நல்ல இலக்கியப் பயிற்சியுடன், லலித கலைகளிலும் விசேஷமான தேர்ச்சியும் பழக்கமும் உண்டு! இப் பாட்டிலே இமையா ஓவியங்களுக்கு உயிர் அளித்து "உயிர்பெய் ஓவிய"மாக ஆக்கிவிடுகிறான் கவி தனது சொல்லோவிய மூலமாக.

கம்பனின் காவிய நாயகியாகிய சீதை சௌந்தர்ய சிகரம். "வரம்பில் பேரழகி" அவள். தெய்வப் பேரழகு கொண்டவள். கல்லும் புல்லும் கண்டுருகும் 'பெண் கனி' அவள்! அழகுக்கு அழகு செய்யும் சீதையைச் சித்திரமாகத் தீட்ட முயன்றான் மன்மதன். அழகெனும் தன்மையை நன்கு கண்டு தெளிந்தவன் காதல் தேவு. மிகப் பரிவுடனே ஓவியம் தீட்ட அமர்ந்தான். தக்க வண்ணப்பொருளாகத் தேவாமிர்தத்தையே தேர்ந்தெடுத்தான். தனது தூரிகையையும்அமுதிலேதோய்த்து விட்டான். தான் பழகிய தெய்வ மாதராகிய ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை எல்லோரையும் நினைத்துப் பார்த்தான். சீதையையும்பற்றிச் சிந்தித்தான். சீதையின் அழகைச் சித்திரத்தில் தீட்டுவது இயலாத காரியம் என்றே பட்டது அவனுக்கு. "சித்திரத்திலே சீதையின் அவயங்களை எவ்வாறு அமைப்பது?" என்று திகைத்துவிட்டானாம் மதனவேள்! ஏதோ ஒரு வகையாகத் தனக்கே திருப்தியுண்டாகாத வகையில் சீதா சித்திரத்தைத் தீட்டி முடித்தான் மன்மதன்.

"ஆதரித் தமுதில் கோல்தோய்த்
தவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லால்
மதனற்கும் எழுத ஒண்ணாச் சீதை"

என்றுதான் கம்பன் தீட்டுகிறான்!

கன்னிமாடத்தின் முன்பு உப்பரிகையில் வந்து நின்றாள் சீதை. ஆண்மை, அழகு,இளமை, கம்பீரம்இவையெல்லாம் அளவுபடக் கலந்தமைந்த ஒருருவாகத் திகழ்ந்த ராமனைக் கண்ணாரக் கண்டாள் சீதை. கண்ட நிலையில் நெஞ்சம் பறிகொடுத்தாள். ராமன் சென்றுகொண்டேயிருக்கிறான். அவனைப் பார்த்துக் கொண்டே பிரமை தட்டினவள்போலக் கண் இமையாது நின்று விட்டாள் சீதை! ராமன் பின்னாலேயே சீதையின் நிறையும், சிந்தையும், மெய்நலனும் சென்று விட்டன. வெகு நேரம் கண்கொட்டவேயில்லை! உணர்ச்சி சீதையின் வசம் இல்லை என்பது தவிர, கண்களை மூடிக்கொண்டு விட்டால் எங்கே ராமன் திரு உரு மறைந்துவிடுமோ என்ற எண்ணமாகவும் இருக்கலாம், இந்தக் 'கண்கொட்டா' நிலையில் உயிர்க்கும் சீதையைக் கண்டான் கவிஞன். அவள் சித்திரப் பதுமை போல அசைவற்று நிற்பது கண்டு,

"அந்தமில் நோக்கிமை அணைகிலா மையால்
பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள்!"

என்று சித்திரித்து விடுகிறான்.

மிதிலாபுரி வீதியிலே ராமன் பவனி வந்து கொண்டிருக்கிறான். 'அந்தமில் அழகனை'க் கண்டுகளிக்கும் ஆர்வத்துடன்

பெண்டிர் கூடி மொய்த்துக்கொள்கின்றனர். ராமனது பேரழகினைக் கண்டு சொக்கிப்போன ஆரணங்கு ஒருத்தி அசைவற்று எழுதிவைத்த சித்திரம் போலத் தோற்றமளித்தாள். அவள் நிற்கின்ற நிலையிலே, சொற்களின் நலன்களையெல்லாம் மீறிய காமச் சுவை தனையே ஒரு உருவமாகச் சமைத்து, 'இனிமை கலந்த அழகு இதோ' என்று தெரியும்படிக்கு மகா மேதாவியான சைத்திரிகன் தீட்டிவைத்த சித்திரம் போல நின்றாள் அக் கன்னிகை என்றே வருணிக்கிறான் கம்பன்.

"சொன்னலம் கடந்த காமச்
சுவையை ஓர் உருவ மாக்கி
இன்னலம் தெரிய வல்லான்
எழுதிய தென்ன நின்றாள்!"

உயிரற்ற ஓவியங்கள் உயிர்பெற்றெழுந்தன. உயிர்க்கும் மாந்தர் சித்திரமாகி நின்றனர். ஓவியம் புதுக்கப் பெறுவதையும் பார்த்து விடுவோம்!

ராமனின் திருமணச் செய்தி கேட்டு எல்லாரும் அயோத்தியிலிருந்து மிதிலைக்குக் கிளம்பிச் சென்றனர். போகின்ற வழியிலே யானை, குதிரை, ஆட்கள் எல்லாம் மிதித்துச் செல்ல, தூசி கிளம்பியது. தூசி எல்லாம் மங்கையர் தம் 'பழுதறுமேனி'யின் மீது படிந்து மாசுறச் செய்தது. இளைப்பாறுவதற்காக எல்லோரும் வழியிலே கூடாரமடித்துத் தங்கினர். தங்கிய இடங்களில் ஆடவர்கள் தங்கள் காதலியர்மீது படிந்துள்ள தூசியைத்துகிலைக்கொண்டுதுடைத்தனர். அந்த ஆடை பால் நுரையுடன் போட்டி போடுவதுபோல் மெல்லியதாகவும் தூயதாகவுமிருந்தது. தூசு நீங்கப்பெற்ற பருவகாலத் தருண மங்கையரும் புதுக்கப்பெற்ற சித்திரம்போலத் தூய்மை பெற்று விளங்கினர்.

"மிதிக்க நிமிர் தூளியின் மறைக்க மணிமெய்யைச்
சுதைக்கண் நுரையைப் பொருவு தூசு கொடு
தூசை
உதிர்த்தனர் இளங் குமரர்: ஓவியர் இன் ஓவம்
புதுக்கினர் எனத் தருண மங்கையர்
பொலிந்தார்"

என விளக்குகிறான் கம்பன்.

உயிர் வழங்கிய கவி எவ்விடத்து எவ்வாறு ஓவியங்களின் உயிரையும் வாங்கிவிடுகிறான் என்பதையும் காண்போம்.

ராமன், அயோத்தி நகர் நீங்கிக் கானகம் செல்கிறான். தங்களது உயிருக்கு உயிரான அருமை ராமன் காட்டுக்குப் போகிறான், பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகப் போகிறான் என்று உணர்ந்த நகர மாந்தரும் அவனுடன் செல்கின்றனர். ஊரைவிட்டு யார் யார் போகவில்லை என்பதை வெகு சுலபமாகக் கணக்கெடுத்துவிடலாம். விரல் விட்டு எண்ணிவிடலாம். மூர்ச்சையுற்ற மன்னன் தசரதனின் அருகேயிருந்த கோசலை முதலான தேவியர் போகவில்லை. இவர்கள் மட்டுந்தானா போகவில்லை! இன்னும் இருக்கின்றனரே! அவர்கள் யார்? சுவரிலே தீட்டப்பெற்ற சித்திர உருவங்கள் போக வில்லையாம்! ஏன்? அவற்றுக்கு வேண்டிய உயிர்த் தத்துவம் இல்லையென்பதுவே காரணம்!

"ஏகிய குரிசில்பின் யாவர் ஏகிலார்?
மாஇயல் தானைஅம் மன்னை நீங்கலாத்
தேவியர் ஒழிந்தனர்; தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன, உயிர்இலா மையால்!"

என்றே வரைகின்றான் கம்பன். உயிரில்லா ஓவியங்கள் இருந்த இடத்திலேயே இருந்துவிட்டன!

அருமையான வேலைப்பாட்டுடன், ஓவிய நிபுணன் ஆக்கிய சித்திரம் ஒன்று இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் பரிமளிக்கும். இடம் மாறிப்போய் புகை மண்டும் இடத்தில் இருந்தால் அது எவ்வாறு இருக்கும்? புகைகொண்டு மங்கிப் போய்க் கோலமிழந்து தோன்றும். அப்படிப்பட்ட சித்திரம் ஒன்றையும் காண்போம்.

'மதனற்கும் எழுதவொண்ணாச் சீதை' யெனும் செல்வி அசோக வனத்திலே சிறை யிருக்கிறாள். சோகமே உருவாகிய ஜானகி அரக்கியர் நெருங்கிக் காவல் செய்ய, புலிக் கூட்டத்தின் நடுவே அகப்பட்டுக் கொண்ட மானைப் போலவும், வெயிலிலே ஏற்றிவைத்த விளக்கினைப் போலவும் பொலி விழந்து நிற்கிறாள். இராமனை நினைந்து, அழுது, உள முருகி, ஏங்கி இளைத்து விட்டாள். பல நாட்களாகக் குளிக்கவேயில்லை. ஒரே ஆடையைத்தான் உடுத்தி யிருந்தாள். சீதையின் இந்த நிலை, மாசுபடிந்து அழகு மங்கியிருந்த நிலை, புகை மண்டிப்போன அற்புதச் சித்திரம் ஒன்றைத்தான் நினைப்பூட்டுகிறது. அதுவும் எப்படிப் பட்ட

சித்திரம்? காதல் கடவுளே தேவாமுதம் கொண்டு பரிவுடன் தீட்டிய சித்திரம்.

"தேவு தெள்கடல் அமிழ்துகொண் டனங்க
வேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே ஒக்கின்ற
உருவாள்"

இப்படிச் சிறையிருந்த காலத்தில் தான் கணவனுடன் வாழ்ந்திருந்தபோது சென்றுபோன சில முக்கியமான சம்பவங்கள் நினைவிற்கு வந்தன. அடிக்கடி ராமனது "முகாரவிந்தம்" தோன்றி, சீதைக்குச் சமாதானம் தந்து கொண்டிருந்தது. சீதை ராமனின் காதலி, இல்லக்கிழத்தி, சக சாரிணி, சகதர்மிணி என்ற தன்மையில் ராமனைப் பல நிலைகளில் கண்டு தெளிந்தவள். தந்தையின் ஆணைப்படி மகுடாபிஷேகத்திற்கெனவே சர்வாலங்கார பூஷிதனாக அலங்காரத்துடன் மலர்ந்த முகத்துடன் பொலிந்த ராமனைக் கண்டிருக்கிறாள். சிற்றன்னையின் சொற்படி மரவுரி உடுத்துக் கானகம் செல்லும் தோரணையிலும் மலர்ந்த முகத்துடன் விளங்கிய ராமனையும் பார்த்திருக்கிறாள். முற்றிலும் மாறுபட்ட இரு சந்தர்ப்பங்களில் ராமனை நெருங்கிக் கவனித்தவள் சீதை. ராமன் விருப்பு வெறுப்பு ஏதுமில்லாதவன். கள்ளம் கபடமற்ற சுபாவமுடையவன். எப்போதும் மகிழ்ச்சி ததும்பும், மலர்ச்சி பெற்ற முகத்துடன் இருப்பவன். அவனது திருமுகம் எப்போதும் எந்த நிலையிலும்—இன்பம், துன்பம் இரண்டிலும்—ஒரே மாதிரியாக மலர்ந்த தாமரை மலரை நிகர்த்துக் காட்சி கொடுக்கும். அந்தத் 'தாமரை முகம்' தான் சீதையின் நினைவிற்கு வருகிறது!

"மெய்த்தி ருப்பதம் மேவெ'ன்ற போதிலும்
'இத்தி ருத்துறந் தேகெ'ன்ற போதிலும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள்"

ராமனுடைய மகிழ்ச்சி முகம் 'சித்திரத்திலே மலர்ந்து' காட்சி கொடுக்கும் தாமரை மலர் போல இருந்ததாம்! இயற்கையில் விளையும் தாமரை மலரைக் காட்டிலும் 'சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை' அவ்வளவு விசேஷமானதா? மதிப்புக் கொண்டதுவா? இயற்கையில் அலர்ந்த தாமரைக்கு விருப்பு வெறுப்பு உண்டு. சூரியனைக் கண்டு மலரும், இருள் கண்டு குவியும். வாடும் வதங்கும். ஒரேமாதிரியான நிலை என்பது கிடையாது. ஆனால் அலர்ந்தது போலச் சித்திரத்தில் தீட்டப்பட்ட செந்தாமரை—தீட்டியது தீட்டியபடியே—மாறுபாடில்லாது காட்சிதரும். அதற்கு விருப்பு வெறுப்பு இருப்பது சாத்தியமில்லை. ஒளியிலிருந்தாலும், இருளில் கிடந்தாலும், எப்போதும் எவ்விடத்திலும் எந்த நிலையிலும் மலர்ந்தபடியே காட்சி கொடுத்துத் துலங்கும். அதேபோலத்தான் ராமனது 'திருமுகச் செவ்வி'யும். எப்போதும், எங்கும், எந்நிலையிலும், எவ்விடத்தும் மலர்ந்தே திகழ்ந்தது. இவ்வாறு "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை"யைச் சிறப்பிக்கிறான் கவிஞன்.

* * *

இக்கவிதைகளின் மூலமாக நாம்வேறொன்றும் ஊகிக்க முடியும். 'கம்பன் பிறந்த தமிழ்நாடு" அன்று "அரம்பையர் போல் இளம் கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடா"க இருந்திருக்கவேண்டும். ஆடவர் "மயிலூர் கந்தனை அனையவர்" எனத் திகழ்ந்திருப்பர். தமிழ் மக்கள் இலக்கியப் பயிற்சி தவிர, இதர கலைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். குறிப்பாகச் சித்திரக்கலை மகோன்னத நிலையைப் பெற்றிருந்தது. மாடமாளிகை கூட கோபுரங்களில் எல்லாம் எழிலும் களையும் உள்ள உயிரோவியங்கள் திகழ்ந்தன. 'தத்ரூப'மாக ஓவியம் தீட்டுவதில் தமிழ் நாட்டு ஆடவரும் பெண்டிரும் நிபுணர்களாக இருந்தனர். இவ்வாறு நினைப்பதில் தவறில்லை! ஏன்? கம்பன் அப்படிப்பட்ட ஒரு தமிழ்நாட்டைத்தானே தனது ஒப்பற்ற கவிகளின் மூலம் பிரதிபலித்திருக்கமுடியும்!

* * *

கம்ப சாகரத்தைக் கடைந்தோருக்கு அமுதம் கிடைக்கும். கம்ப சாகரத்திலே மூழ்கி எழுந்தோருக்கு முத்தும் பவழமும் கிடைக்கும். சாகரம் என்று மாத்திரம் பயந்து கரையோரமாக இருந்துவிட வேண்டாம்!

அம்புவியில் மாந்தர் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி!"

கே. சுந்தரம்மாள்

12

“நாட்டியத்தில் எவ்வளவு வெற்றிபெற்றாலும், மேலும் படிக்கவேண்டும்” என்ற அவா கலாவதிக்கு மிகுந்தது. அவ்வருஷம் இண்டர்மீடியட் முதலாவதாகத் தேறினாள். மேலே பி. ஏ. ஆனர்ஸ் சேர வேண்டுமென்று விருப்பங் கொண்டாள்.

ஆசிரியர் சந்திரதாஸிற்குக் கலாவின் நடனம் பவானிபுரத்துடன் நிற்பதில் இஷ்டமில்லை. வெளிநாடு சுற்றுப்பிரயாணம் செய்து உலகமெங்கும் அவள் புகழும் தனது திறமையும் புலனாக வேண்டுமென்பது ஆவல். மஹாராஜா அனுமதிக்க மாட்டார். ஆனால் கலாவதியாக விருப்பங்கொண்டு மஹாராஜாவினிடம் கேட்டால் தடுக்க மாட்டார். இவ்விஷயம்பற்றிக் கலாவதியினிடம் ஜாடையாகச் சொன்னதற்கு, அவள் மேலே படிக்கப் போவதாகச் சொல்லிவிட்டாள். அதனால், பாட்டியினிடம் வத்தி வைத்துவிட்டால் காரியம் கை கூடலாம் என்ற நினைப்புடன், பாட்டியினிடம் வந்து விஷயத்தைப் பக்குவமாகக் கலாவின் நன்மையையும், மஹாராஜா தமது சமஸ்தானத்து நன்மையைத்தான் நாடுவாரே தவிர கலாவின் முன்னேற்றத்தைக் கருதமாட்டார் என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

மறுநாள் காலேஜ் திறக்கப்படும். முதல் நாள் இரவு பாட்டி கலாவினிடம்,

“கலா, நாளை காலேஜுக்குப் போகப் போகிறாயா?” என்றாள்.

“சந்தேகமென்ன? ஆனர்ஸில் சேரப் போகிறேன்”.

“இன்னும் எதற்குப் படிப்பு?”

“படிப்பு விஷயத்தில் ‘இன்னும்’ என்ற அளவு உண்டா, என்னைப்போல் சகல வசதிகளுமிருக்கப்பட்டவர்கள் படிப்பதில் கஷ்டமென்ன?”

“என்ன படிப்பு? படித்து என்ன ஆக வேண்டும்? உனக்குத் தெரிந்தபடிப்பு எட்டுத் தலைமுறைக்குக் காணும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். அதுதான் புத்திசாலிகளுக்கு அழகு. ஒன்று சந்திரதாஸ் சொல்லுகிறபடி சுற்றுப்பிரயாணம் செய்து புகழும் பொருளும் தேடு. அல்லது யுவராஜாவை உனது வலையில் சிக்கும்படி செய். அவனது காதலியானால் உனது நாட்டியப் பைத்தியமும் நிறைவேறும். எனது கவலையும் நீங்கும். அவன் பாமாவைத்தான் கல்யாணம் செய்து கொள்ளட்டும், சீமாவைத்தான் கல்யாணம்செய்துகொள்ளட்டும், உனக்கென்ன? உன்னை ஒரு நாளும் அவன் பிரிய முடியாது. உன் அழகு அத்தகையது” என்றாள்.

“சிவ, சிவ” என இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டாள். “பாட்டி, இனி இது மாதிரி பேச்சுக்களை எடுக்காதே. யுவராஜாவைப்பற்றி இவ்விதம் பேசினாயானால் எனக்குக் கெட்ட கோபம் வரும். பொருள் இப்பொழுது நமக்கு என்ன குறைவு? அரண்மனை வாசம், வேண்டிய பணியாட்கள், வாசலில் கூர்க்கா காவல், பெட்டியைத் திறந்தால் பொன்னும், மணியும், இரத்னமும் வைரமும், ராஜ மரியாதை. இன்னும் என்ன பொருள் தேட வேண்டும்? மஹாராஜா இஷ்டப்பட்ட பொழுது சுற்றுப் பிரயாணம் தானே நடக்கும். வித்தையை, நடனத்தை விலைக்குவிற்க நான் தயாராக இல்லை. காதலும் மண்ணாங்கட்டியும் எனக்குத் தேவையில்லை. என் அம்மாவின் லக்ஷியப்படி, மஹாராஜாவின் சொற்படி எனது ஜீவியம் நாட்டியப் பணிக்கே அர்ப்பணம். தேச நலனே எனது ஜீவனம். இனி இது மாதிரி தாறுமாறாகப் பேசி, என்னையும் புண்படுத்தி உன் மனதையும் புண்ணாக்கிக் கொள்ளாதே”.

“நல்ல காலத்திற்கு உனக்கு இந்தப் புத்தி தோன்றவில்லை. ‘நாட்டிய சக்ரவர்த்தினி’ என்ற பட்டமும், ‘தாயின் லக்ஷியம் மகளினால் நிறைவேற்றப்பட்டது’ என்ற சொல்லும், “மஹாராஜாவின் லக்ஷியப்பெண்’என்ற புகழும் உன் தலை கழுத்திலே நிற்காமல் செய்கிறது. நாட்டியப் பணி என்றால் படிப் பென்ன படிப்பு. இப்பொழுது பெருமையாகத் தோன்றும் விஷயம் நாளைக்கு ஆபத்துக்கு உதவக் கூடியதா? அதுவே இருக்கட்டும், நீ தேடிய புகழையும் பெருமையையும் விருத்தி பண்ணி உன் பெயர் சொல்ல வம்ச பரம்பரை வேண்டாமா? பெண்கள் எவ்வளவு கற்றாலும், முன்னேறிச் சென்றாலும், தைரியத்துடன் போராடினாலும், இயற்கையாக அமைந்த பலவீனம் பலவீனம்தான். அதிலும் உன்னைப்போல் யாவர் மனதிலும் கிளர்ச்சி பண்ணக்கூடிய அழகு மிகுந்த அம்சங்கள் நிறைந்து விளங்குபவர்கள், ஓர் ஆண் துணையின்றி ஓட்டும் வாழ்க்கைச் சக்ரமானது மேடு பள்ளம் கற்கள் முதலிய தடங்கலினால் தடைப்பட்டு தடைப்பட்டுத்தான் ஓட முடியும். அதனால் நீ ஒரு துணைவனைத் தேடிக்கொண்டுதான், உன் இஷ்டப்படியெல்லாம் நாட்டியப் பணி, தேசப்பணி, சங்கீதப் பணி, அனாதைப்பணி எல்லாம் செய்ய முடியும். பெரிய பிரபுக்களும், சமஸ்தானாதிபதிகளும் உன்னைப் பெறத் தவங் கிடக்கிறார்கள். ரவிவர்மன் உன்னிடம் மிக்க அன்பு கொண்டவனாகத் தோன்றியபடியினால், அவன் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளுவது என்பது கனவில்கூட நடக்காத விஷயம். அதனால் காதலியாக ஏற்றுக்கொள்ளட்டும்என்று சொன்னேன். அப்படி அவன் காதலி என்று ஏற்பட்டுவிட்டால், மலர்ந்த மலரின் தேனைப் பருக வண்டுகள் வட்டமிட முடியாது. யுவ ராஜா கலியுக பீஷ்மர்,கடமையைக் காப்பவர் என்று சொல்லுகிறாய்! அப்படியே இருக்கட்டும். உனக்காக நான் எவ்வளவு பாடுபட்டிருப்பேன். ‘என் வாழ்க்கையின் லக்ஷியம் உனது மணம் பெற்ற வாழ்வே’ என்ற தாபத்துடன் என் காலத்தைக் கடத்தி வந்தேன். பலன் தரும் என்று பாடுபட்டவனுக்கு, பலன் தரும் மரமானது காயிலேயே வெம்பிப் போகும் பலனைக் கொடுத்தால், மரம் வளர்த்தவன் மனம் எப்படி இருக்கும்? அகால மரணமாக எனது ஒரே புதல்வியைப் பறி கொடுத்துவிட்டுத் தவிக்கும் இருண்ட ஜீவனுக்கு ஒரு சிறிய ஒளியையாகிலும் வழி தெரியக் காண்பிப்பது உனது கடமையல்லவா? என் மனதைத் திருப்தி செய்வதும் உனது கடமையல்லவா? சற்று நன்றாக நான் சொன்ன விஷயங்களைச் சிந்தனை செய்து பார்?” என்றாள் கண்களில் நீர் தளும்ப.

பாட்டியின் தாபமடைந்த சொற்கள் கலாவின் ஹ்ருதயத்தை வேதனைக்குள்ளாக்கின. ஆம், கடமை என்றால் அவள் மனம் குளிர நடப்பதும் அவசியமே.

தனது ஹ்ருதய ரகசியத்தை அறிந்தவள் போல், யுவ ராஜாவின் காதலி என்று சொல்லிவிட்டாள். தனது கொள்கைக்கும் அவளது சொல்லிற்கும் எவ்வளவு தூரம். நம்மைப்போலவே அவரும் தாபத்தை அடைகிறார் என்பதும் விளங்குகிறது. ஆனால் பாட்டி சொன்னபடி பாமாவைக் கல்யாணம் செய்துகொண்டு, நம்மைக் காதலியாக ஏற்பதானால்? ஐயோ, அதை நினைக்கவும் மனம் இடந்தரவில்லை. அப்படி அர்த்தமற்ற வாழ்வு வாழ்வதைக்காட்டிலும் சாவது மேல். நான் தாசி என்ற சொல்லே இருக்கக்கூடாது என்று பாடுபட்டு வரும்பொழுது, நானே மன்னனின் ஆசை நாயகி? ஐயோ, வேண்டவே வேண்டாம். அப்படி அவரே நம்மிடம் யாசித்தால்? நான் என்றும் கன்னிகை. இதனால் அவர் விரோதம் ஏற்பட்டாலும் சரி, உயிரினும் மேலாக மதிக்கும் நாட்டியத்தை இழந்தாலும் சரி, இந்த உறுதியை நாம் விடக்கூடாது. சமூகத்தை, சட்டத்தை எதிர்த்துப் போராடி என்னைப் பட்டமஹிஷியாக ஏற்க வேண்டும், அல்லது அவர் பதவியை விட்டு, நாடோடியாக என்னை ஏற்க வேண்டும். காதலைப் பங்கிடு செய்ய இடம் கொடேன். இவையெல்லாம் பாட்டியினிடம்சொல்லி உபயோகமில்லை. தற்சமயம் அவள் மனச்சாந்திக்காகக் காலேஜ் செல்லுவதை நிறுத்திக் கொள்வோம். கொஞ்சநாள் கழித்து அவள் விருப்பப்படி மஹாராஜா உத்தரவுபெற்று, சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, பிறகு காலேஜில் சேர அனுமதி பெறலாம். “கொஞ்ச காலம் யுவ ராஜாவைச் சந்திக்காமலிருந்தால் ஹ்ருதய தாபம் கொஞ்சம் குறையுமா?” என்பதையும் பார்க்கலாம். அதனால் வெளியில் எங்கும் செல்லாமல், சித்ர மெழுதும் வேலையை எடுத்துக் கொண்டோமானால் பொழுது சுலபமாகக் கழியும் என்ற முடிவிற்கு வந்தவளாக, “பாட்டி, நீ சொல்லும் விஷயங்கள் உண்மைதான், ஒத்துக்கொள்கிறேன். கல்யாணம் என்பதற்கு என் மனம் தயாராக வில்லை. நைவேத்தியத்திற்குப் பொருள் தயாராக இருந்தாலும் அர்ப்பணம் செய்யப் பூரணமான மனம் வேண்டுமல்லவா? அதனால் நீ கொஞ்ச காலம் பொறுத்துக் கொள். பிறகு யுவ ராஜாவின் காதலியாகவோ, சமஸ்தானாதிபதியைக் கல்யாணம் செய்துகொள்ளவோ பார்க்கிறேன். தற்சமயம் உன் இஷ்டப்படி காலேஜ் செல்லுவதை நிறுத்தி விடுகிறேன். உன் மனம் நோகாமல் நடக்க வேண்டுவது என் கடமைதான். நீயும்

எனது விருப்பத்தை அனுசரிக்க வேண்டும். தற்சமயம் ஆண் துணைக்கு அருமையான சஹோதரன் சந்தர் என்னுடனிருக்கிறான். "என்னைச் சஹோதரியாக ஏற்றுக் கொள்வானோ மாட்டானோ" என்றே முன்னாலேயே தெரிந்தும் பேசாமலிருந்தேன். அன்று மஹாராஜா அறிவித்ததும், அவன் அன்புடன் என்னை ஏற்றுக்கொண்டு என்னுடன் வசிக்கவும் ஒத்துக்கொண்டான். எனக்கு என்ன குறை பாட்டி, சொல்லு பார்ப்போம்" என்றாள்.

தனது சொல்லிற்குச் சற்று மதிப்பு ஏற்பட்டது என்பதைக் கண்டதும், சரி, போன வழி விட்டுத்தான் திருப்ப வேண்டும், கொஞ்ச நாளில் என்னிஷ்டப்படி நடக்கச் செய்துவிடுகிறேன் என்று நினைத்தவளாக, "என் கண்ணு, புத்திசாலிப் பெண்ணல்லவா? என் சொல்லைத் தட்டமாட்டாய் என்ற பூரண நம்பிக்கை யுண்டு. மஹாராஜாவினிடம் கேட்டுக்கொண்டு சுற்றுப் பிரயாணம் செய்ய ஏற்பாடு செய். அப்பொழுது உன் வாழ்க்கைப் படகானது எதிர் காற்றில்லாமல் மந்த மாருதத்தில் சுகமாகச் செல்லும். உனது யௌவனத்தை வீணாக்காமல் நீ அமோகமாக வாழ்வதைக் கண்டு, உனது தவக்கொழுந்தை எடுத்துக் கொஞ்சிவிட்டு இறந்தால்தான் என் நெஞ்சு வேகும். உன் அம்மாவைப் போல் பிடிவாதம் செய்யாமல், காலத்தை அனுசரித்து நடந்தாயானால் உனக்கு நன்மை. பிறருக்கும் சுகம்" என்று சொல்லியவாறு கலாவின் கன்னத்தைத் தடவி, தனது பொட்டில் சொடுக்கித் திருஷ்டி கழித்தாள்.

இவ்விதம் ஒருவரை மற்றவர் ஏமாற்றுவதாக நினைத்து அவரவர் காரியத்தில் கண்ணும் கருத்துமாக நடந்து வந்தார்கள். கொஞ்ச நாள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதினால் காலேஜுக்குப் பின்பு வருவதாகச் சொல்லி யனுப்பினாள். அவள் இஷ்டத்தை ஏன் என்று தடுத்துக் கேட்பார் சமஸ்தானத்தில் யாருமில்லை.

கலாசாலை திறந்து ஒரு மாதமாகி விட்டது. கலா காலேஜ் வரவில்லை யென்பதை அறிந்த ரவிவர்மனுக்கு வியப்பாக இருந்தது. சந்தரிடம் கேட்டதற்கு, பாட்டி வேண்டாமென்று சொன்னதினால் நிறுத்தி விட்டாள் என்று சொன்னான்.

"பாட்டியின் சொல்லுக்காகக் காலேஜை நிறுத்துபவள் கலாவதியல்ல? ஆனால் ஏன் வரவில்லை? சங்க மஹால், நாட்டிய வகுப்பு இவைகளுக்கும் வருவதில்லை. சமீபமாகச் சேவா விருத்தி சங்கத்தின் கூட்டத்திற்கும் வந்ததாகத் தெரியவில்லை. சங்க நடவடிக்கைகளுக்கு மனோன்மணி போய், கேட்டுச் செய்வதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம்? யாரைக் கேட்பது? சரி, அவள் எப்படிப் போனாலென்ன?" என்று என்னால் நினைக்கவும் முடியவில்லையே. கலாவதியின் அன்பின் நீரோட்டமின்றி என் வாழ்க்கைப் படகு செல்ல முடியாதுபோல் தோன்றுகிறது. இருவருக்கும் நடுவில் அகண்ட சமுத்திரம் தடை. அதைக் கடந்து ஒன்று சேர உறுதியான படகு வேண்டும். நடுவில் அதிலுள்ள, சமுதாயம், கடமை முதலிய முதலைகள் வழி விட வேண்டும். எந்த விதத்தில் பவானிதேவி அருள்புரியப் போகிறாளோ? யௌவனம் என்றால் காதல் உடன் பிறந்தது போலும். அது விசித்ரமான வழியில் சென்று விட்டால்? அப்பப்பா, எவ்வளவு கஷ்டம்? அவளை எவ்விதம் காண்பது? ஓரிடத்தைக் குறித்துத் தன்னைக் காண வரும்படி கடிதம் எழுதினால்? சே, அவள் என்ன நினைப்பாளோ? அப்பா, இப்பதவியன்றோ அவளை நினைத்தவுடன் சந்திக்கத் தடையாக இருக்கிறது. சாதாரண பிரஜைகளிலொருவனாக இருந்தால் எவ்வளவு சுலபமாகக் காணலாம்" என்ற சிந்தனையில் மனம் துடித்தது. கடைசியாக அவளைப்பார்க்காமல் இருக்க முடியாது என்ற நிலைமை வாட்டி வதைத்தது. உலகை ஏமாற்றினால் தான் தன் மனம் நிம்மதியடைய வழியுண்டு. ஏன் தன்னையே தான் ஏமாற்றிக்கொள்ளும் சூழ்ச்சிதான் காதல். அதுவே உண்மைக் காரணம். பார்க்கப்போகும் காரணம் சொல்லில் அவள் கல்வியில் அக்கறை கொண்டு. அப்பா, உலகில் காதலின் தாபம் மனிதனைப் பைத்தியமாக்கி விடுகிறது. எப்படியானாலும் இன்று முன்னிரவில் திருட்டுத்தனமாக அவளைச் சந்தித்து வருவது என்ற முடிவிற்கு வந்தான்.

இரவு ஒன்பது மணி. சிறு தூறல். நல்ல இருட்டு. மின்னலின் தாக்குதலினால் தெருவிலுள்ள மின்சார தீபங்கள் அணைந்துவிட்டன. இதுவும் நமது நன்மைக்கே என்று நினைத்துச் சிரித்த வண்ணம் கால் நடையாகச் சென்றான் நாடாளும் மன்னன். கால் முதல் தலை வரை ஒரு சால்வையினால் மூடியிருந்தான். வாசலிலுள்ள கூர்க்காவினிடம் கையை மட்டும் வெளியில் நீட்டி முத்திரை மோதிரம் காண்பித்தான். பிறகு ஆளைப்பற்றி யாராக இருந்தால் அவர்களுக்கென்ன கவலை? முத்திரை மோதிரம் பார்த்தாகி விட்டது, கடமை தீர்ந்தது.

வெளியிலிருந்து மூன்று காவல்களைச் சுலபமாகக் கடந்துவிட்டு, முன் ஹாலுக்குள் நுழையும் சமயம், அவ்விடம் வெற்றிலை இடித்துக்கொண்டிருந்த மூதாட்டி,

"யாரது?" என் அதட்டினாள்.

“நான்தான்” என்று நடந்தான்.

“யாரையா அது? கேட்காமே சொல்லாமே தடதடனு போரே, நில்லு” என்று அதட்டினாள்.

“பெரியம்மா, கோபப்படாதே. அரண்மனையிலிருந்து மஹாராஜா ஒரு காரியமாக அனுப்பினார். வீட்டுப் பெரியம்மா எவ்விடம் இருக்கிறார்கள்?” என்று முத்திரை மோதிரம் காட்டினான்.

பயந்துவிட்ட மூதாட்டி, ஐயா, மன்னிச்சுடுங்க. அந்தப் பொண்ணு கலாவதி, “பெண்கள் யாரா இருந்தாலும் வரச்சொல்லு. ஆண்பிள்ளை எவரானாலும் என்னைக் கேட்காமல் உள்ளே விடாதே என்று சொல்லியிருக்கு, அதனால் சொல்லிப்பிட்டேனுங்க. கும்பிடறேனுங்க. பெரியம்மா நடு ஹால் ஊஞ்சல்லே இருக்காங்க” என்றாள்.

சாவதானமாக அவள் முன்னாகச் சென்று "அம்மா, சுகம்தானே" எனக் கேட்ட வண்ணம் போர்த்திருந்த சால்வையை எடுத்துக் குடங் கையில் போட்டுக்கொண்டான்.

இவன் வரவை எதிர்பாரா வகையில் திடுக்கிட்ட அவள் இரத்தஓட்டமே நின்றுவிட்டது போலிருந்தது.

'கையிலிருந்த புஸ்தகத்தைப் போட்டு விட்டு, கண்ணிலிருந்த கண்ணாடியைக் கழற்றியவண்ணம் எழுந்து நின்றவளாக, அநேக வித மரியாதை வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று நினைத்தவள் வாயில்,

"வாருங்கள். இப்படி உட்காருங்கள்" என்று ஊஞ்சலைக் காண்பித்துக் கைகுவிக்கத் தோன்றினதே தவிர வேறு வார்த்தைகள் வர மறுத்தன.

அவன் உட்கார்ந்துகொண்டதும், "என் குடிசையில் தாங்கள் அடி வைத்ததே பாக்யம். ஒரு வார்த்தை சொல்லியனுப்பினால் வரமாட்டேனா?" என்றாள்.

"பெரியம்மா, நான் வந்தது ஒருவருக்கும் தெரியக்கூடாது. பாலசந்திரன்கூட அறியக் கூடாது. இப்பொழுது அவன் எவ்விடமிருக்கிறான்?"

"இந்த வீட்டில் ஒருவருக்கொருவர் கிட்டத்தில் பார்க்க முடியும். வட பாகத்தின் கோடி மேல் ஹாலில் அவன் படித்துக் கொண்டிருக்கிறான். தாங்கள் வந்தது......"

"ஒன்றுமில்லை. கலாவைக் காலேஜ் செல்ல வேண்டாமென்று சொல்லிவிட்டீர்களென்று சந்தர் சொன்னான். நீங்கள் அவள் படிப்பதைத் தடை செய்யக்கூடாதென்று சொல்லவே வந்தேனென்றால் அவள் படிப்பது எவ்வளவு முக்யம் என்பதைத் தாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்" என்றான்.

கலாவதியின் பேச்சை எடுக்கவே பாட்டிக்குத் தைரியம் உண்டாகிவிட்டது. அதிருஷ்ட தேவதை தன்னை நாடி வந்திருக்கும் பொழுது மற்றதைப்பற்றிக் கவலையென்ன? என்ற நினைப்பில் "மனிதர்களுக்கு ஏதாவது ஒன்றில்தானே அதிக கவனம் செலுத்த முடியும். அதனால் நாட்டியம் முக்யம். படிப்பு வேண்டாமென்றேன். உங்களுக்கு அவள் படிக்க வேண்டுமென்று தோன்றினால் நான் தடைசெய்யவில்லை" யென்றாள்.

பாட்டியினிடம் பேசவா அவன் வந்தான். மேலே பேச்சை வளர்க்க இஷ்டமில்லாதவனாக, "மழையும் இடியுமாக இருக்கிறதே; கலா எங்கே சென்றிருக்கிறாள்?" என்றான்.

"அவள் ஓரிடமும் செல்லுவதில்லை. சதா மாடி ஹாலில் படம் எழுதிக்கொண்டேயிருக்கிறாள். இவ்விடம் கூப்பிடவா அல்லது......" என்று நிறுத்தினாள்.

"வேண்டாம். நானே சென்று பார்க்கிறேன்" என்று நடந்தான். மாடிப் படிவரை சென்று அனுப்பிவிட்டு, படியேறிச் சென்றதும், யௌவனாவஸ்தையில் கயல் விழி நோக்கிற்கு இலக்காகாமல் **நிர்ணயமாகக் காலங் கடத்துவது என்பது அவ்வளவு சுலபமா? என்குறி தப்பவில்லை. "பவானி மாதா, என்**

செல்வியின் வாழ்வை மேன்யுறச் செய்'' என வேண்டியவாறு உள்ளே சென்றாள்.

படியேறியதும் பூட்ஸைக் கழற்றி வராந்தாவில் வைத்துவிட்டு, சத்தப்படாமல் அடுத்த ஹாலில் நுழையும்பொழுது ''உன்னை நினைந்து நினைந்து உருகுகிறாள்'' என்ற கலாவதியின் பாட்டுக் காதில் விழவே அடிமீதடி வைத்து நடந்தான். முன் டிராயிங் ஹாலாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதற்கடுத்த ஹால் நீண்ட வடிவத்தில் தளத்தின்மீது இரத்தின கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நாற்காலி முதலிய எதுவுமில்லாமல் காலியாக இருந்தது. அதற்கடுத்த ஹாலில் வாசற்படி தாண்டினதும் ஓர் சிவந்த பட்டுத் திரை தொங்கவிடப்பட்டிருந்தது. மெதுவாக நடந்து திரை அருகில் நின்று இரு பாகமாக இருந்த திரையின் நடுவில் கொஞ்சம் விலக்கி உள்ளே பார்வையைச் செலுத்தினான். அவ்வளவே, அவன் மனதிலிருந்த பாரம் குறைந்ததுபோன்ற உணர்ச்சி தோன்றினது.

எதிர் சுவரில் ஆறடி உயரம், நாலடி அகலமானதும், சிகப்பு வைரம் பதிந்த சட்டங்களுடனும் ரவிவர்மன் ராஜ உடையில் நிற்பதுபோன்ற படம் சுவரில் பதித்தாற்போல் மாட்டியிருந்தது. இரு பக்கமும் அதே உயரம் நிலைக்கண்ணாடி. முன்னால் சலவைக்கல் மேடைமீது பூஜா திரவியங்கள் சந்தனம் பன்னீர்செம்பு வைக்கப்பட்டிருந்தன. படத்திற்கு மாலை அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இரு பக்கமும் இரு வெள்ளிக் குத்து விளக்குகள் ஐந்து முகத்துடன் எரிந்துகொண்டிருந்தன. மின்சார தீபம் கொத்தாகப் பிரகாசித்தாலும், கலர் பல்புகள் கண்ணாடிக்கும் படத்திற்கும் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்தன. கம்மென்ற ஊதுவத்தியின் மணமும் மல்லிகை ரோஜாவின் வாசனையும், அந்த இடத்தின் அலங்காரத் தோற்றமும் ரவிவர்மன் மனதில் மனோரம்யமான ஆனந்த உணர்ச்சியை உண்டாக்கின.

எதிரிலிருந்த தனது படத்தைப் பார்த்ததும், ''ஆஹா, எவ்வளவு தத்ரூபமாக அமைந்திருக்கிறது. ஒரு கலையிலாவது அவளது நோக்கம் குறை படுவதில்லை. தெய்வப் பிறவியா?'' என வியந்தான்.

''தன்னை உனக்கே தந்தாள்'' என்ற அநுபல்லவி பாடி சரணத்தின் கடைசியில் ''ஊனு

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		...	ரூ 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

Mrs. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி.
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
ஷா கம்பெனி மங்களூர். (S. K.)
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தராம்தோலா தெரு, கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொழும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

றக்கமிழந்தாள்" என்று பாவத்துடன் முடிக்கவும், அவன் தன்னிலையை மறக்கும்படி செய்துவிட்டது. கடவுளின் ஸ்தானம் தனக்கு அளிக்கப்பட்டிருப்பதும், படத்தைப் பார்த்துப் பாடி ஆடும் பதமும், அவள் தன் மீது கொண்டிருக்கும் காதல் இத்தன்மையது என்பதைக் காட்டிவிட்டது.

அவன் வீட்டை நோக்கிப் புறப்படும் பொழுது அவள் மனதை அறியவேண்டும், தன் மனதை வெளியிடாமல் ஜாக்கிரதையாக நடந்து, படிப்பதற்கு வற்புறுத்த வந்ததாகவே பாவனை செய்துவிட்டு வந்துவிடவேண்டுமென்ற நினைப்புடன்தான் புறப்பட்டான்.

தனது பிம்பத்தின் அலங்காரமும், மனம் மயங்கும் வாசனையும், கலாவின் பாவமும், பாட்டும் அவனது உறுதிக் கட்டடத்தை ஆட்டங்காணச் செய்துவிட்டன.

ஜமீன், பதவி உறுதி, கடமை, கலாவின் முன்னேற்றம் யாவையும் பற்றிய சிந்தனைக்கு மனதில் இடமேயில்லை. பிரேமையின் ஜ்வாலையே கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. தனது படத்தையே குறிப்பாகக் காட்டி, பாடியபொழுது தன்னை நோக்கிக் கெஞ்சுவதுபோல் தோன்றினது. "படத்தைப் பார்த்துக் கெஞ்சுவானேன், நானே இதோ காத்துக்கொண்டு நிற்கிறேனே" என்று சொல்ல வேண்டும்போல் தோன்றினது. இப்படி இவன் நிலைகொள்ளாமல் தவிக்கும் சமயம் அவள் பாட்டு முடிந்து ஆட்டத்தை நிறுத்திக் கை குவித்தாள்.

"யுவராஜ்! எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுகிறேன். இந்த ஜன்மத்தில் கனவிலும் தங்களை அடைய முடியாது. மறுஜன்மத்திலாவது, நான் இக்குலத்தில் பிறவாமல், தாங்கள் ராஜ பதவியில் பிறக்காமல், உள்ளன்புடன், காதலின் ரசத்தை, ஏழ்மையில் இன்பத்தை அடைவோம். நாம் இருவரும் உண்மைக் காதலில் கட்டுண்டு தவிக்கிறோம் என்பது நமது மனதிற்கும், பவானி மாதாவிற்கும் தெரியும். தடையாக நிற்பது எனது குலம். அன்பா, இக்குலம் அடியுடன் அழியட்டும்.

"யுவராஜ்! ஏகலைவன் குருபக்திபோல் எனது பதிபக்தியும் என் மனதிற்குச் சாந்தியைக் கொடுக்கட்டும். தங்கள் படத்தைப்பூஜிப்பதினாலேயே என் காதல் வாழ்க்கை பூர்த்தியடையட்டும். பவானிமாதா! என் மனம் யுவராஜா அறியாதிருக்குமாறு நான் நடந்துகொள்ள அருள் செய். நீ தான் எனக்குப் புகலிடம். என்னைக் கைவிட்டுவிடாதே.

"பாமா! நீ மிக்க பாக்யசாலி. அந்தப்பாமா பரமாத்மாவை அடைந்ததுபோல நீ ரவிவர்மனை அடையப்போகிறாய், உங்கள் வாழ்க்கைப் பூங்காவில் மணமுள்ள காதல் மலர் விகஸிக்கட்டும், புஷ்பிக்கட்டும். அதில் வண்டைப்போல் தேனருந்தி, கஷ்டப்படுத்தாமல் ஆடும் மயிலாகவும் கூவும் குயிலாகவும் இருந்து உங்கள் இன்பத்தையே நாடுவேன். நான் உன்னிடம் யாசிப்பது இவரைக் கண்ணால் காணும் பாக்யம் ஒன்றே" என்று சொல்லிவிட்டு, இடுப்பில் கையை வைத்து ஆட்டத்திற்கு ஆயத்தமாகப் படத்தையே உற்றுக் கவனித்தாள். அடுத்த கணம் "என்னிலும் அவள் உமக்கேற்றவளோ" என்ற கல்யாணி ராகப் பதத்திற்கு அபிநயம் பிடித்தாள். அது முடிந்ததும் சற்றுநேரம் படத்தைப் பார்த்தபடி நின்றாள். பிறகு இடி இடியெனத் தானே சிரித்துவிட்டு, "ஐயோ பாமா! பச்சிளங் குழந்தையான உன்னை என்னவெல்லாமோ சொல்லுகிறேன் பைத்தியம். அழகு எதற்கு? அதிருஷ்டம் வேண்டுமம்மா. அதிருஷ்டம்.

"யுவராஜ்! வந்தனம். கொஞ்சம் நாட்களாக உங்கள் தெரிசனம் கிடைக்கவில்லை. மறக்கலாம் என்று மனப்பால் குடித்தேன். தாபம் இன்னும் அதிகமாகிறது. ஹ்ருதயாசனத்தில் எப்பொழுதும் காட்சியளிக்கிறீர்கள். இதோ பிம்பமாக எதிரில் நிற்கிறீர்கள். பவானிமாதா! கூடிய சீக்கிரம் அவரைக் காணும்படி செய்" என்று சொல்லும் பொழுது விளக்கில் சுடர் தெறித்தது. "நல்ல சகுனம். தேவி! மூன்று நாளைக்குள் நிச்சயம் அவரைக் காண்பேன் என்று என் மனம் நம்புகிறது" என்று சொல்லி முடிக்குமுன்,

"கலாவதி! உன் நம்பிக்கை வீண் போகவில்லை. பவானி மாதா உடனே பலனளித்துவிட்டாள்" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். புன்சிரிப்புடன் அவன் விடும் மூச்சுக் காற்று அவள் தலைமீது படும்படியாக நின்றுகொண்டிருந்தான் ரவிவர்மன்.

அவ்வளவே. அவள் நிலைமை மோசமாகிவிட்டது. திருடினபொருளுடன் உடைமையாளியின் கையில் பிடிபட்டவனது மனப்பான்மை போல் நடுங்கினது கலாவின் உள்ளம். மார்பும் நெஞ்சமும் விம்மி யெழுந்தன. நாவு பேச மறுத்தது. ஓர் நிமிஷம் அவனையே உற்றுப் பார்த்தபடி நின்றாள். அந்த இடம், ரவிவர்மன், யாவும் ஒரே சுழலாகச் சுழலுவதுபோல் தோன்றியது. மறுகணம் உணர்வற்றுக் கீழே சாய்ந்து விட்டாள் தனது அந்தரங்க ரகசியம் வெளிப்பட்டுவிட்டது என்ற மான உணர்ச்சியில்.

சட்டென அவள் கீழே விழாமல் தாங்கி ரத்ன கம்பளத்தின்மீது படுக்க வைத்தான். எதிர்பாராத இச்சம்பவம் அவன் தைரியத்தைக்கூட இழக்கச் செய்துவிட்டது. படத்தின் முன் வைத்திருந்த பன்னீர் செம்பை எடுத்து அவள் முகத்தில் தெளித்து, பக்கத்தில் வைத்திருந்த மயில்தோகை விசிறியினால் விசிறினான். சற்றே கண்ணைத் திறந்து மூடினாள்.

சட்டெனக் கீழே உட்கார்ந்துகொண்டு அவள் தலையைத்தன் மடிமீது எடுத்து வைத்துக்கொண்டு, தனது உள்ளங்கையினால் அவளது ரோஜா கன்னங்களையும், நெற்றியையும் மிருதுவாகத் தடவியவண்ணமிருந்தான். நினைவு தெளிவடையும் சமயம், அச்செய்கை அவளுக்கு ஆகாயத்தில் மிதப்பது போன்ற இன்ப உணர்ச்சி தரவே, அதை இழக்க மனமில்லாதவளாகக் கண்ணை மூடிய வண்ணமே படுத்திருந்தாள்.

முகத்தருகில் குனிந்து, "கலா" என்று அழைத்தான்.

அக்குரலொலியின் சக்தி அவளறியாமலே கண்களை விழிக்கச் செய்தது. அவன் இவளையே பார்த்துக் கொண்டிருந்தபடியினால் இருவர் கண்களும் சந்தித்தன. லஜ்ஜையினால் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். அயர்வினால் கண்களை மூடிக்கொள்கிறாள் என்ற நினைப்பில் விசிறி யெடுத்து விசிறினான்.

விசிறிக் காற்றுப்பட்டுத் தெளிவு உண்டாக உண்டாக, சிந்தனை அலைகள் எழும்பலாயின. இவர் எதற்காக இவ்விடம் வந்தார்? எப்பொழுது வந்தார்? நாம் சொன்னவை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாரா? அல்லது கடைசியில்தான் வந்தாரா? கடைசியில் வந்திருந்தால் நாம் தப்பிவிடலாம்" என்ற சிந்தனை தோன்றவே சட்டென எழுந்து உட்கார்ந்தாள்.

"ஏன் அதற்குள் எழுந்திருக்கிறாய்; சற்று நேரம் படுத்திருந்தாயானால் சற்று ஆச்வாஸமாக இருக்கும்" என்று சொல்லும்பொழுதே கலா எழுந்து நின்று,

"இப்பொழுது உடம்பு ஒன்றுமில்லை" என்ற சொற்கள் பயத்தினாலேற்பட்ட பதட்டத்துடன் வெளிவந்தன, மேலே பேசத் தோன்றாமல் குனிந்தபடியே நின்றாள்.

இவனது தடுமாற்றத்தைக் கவனித்த ரவிவர்மன் எழுந்து நின்று. "கலா, ஏன் இவ்விதம் நடுங்குகிறாய்? என்னைப் பார்த்ததும் மூர்ச்சையுற்றாய்?" என்றான் புன் சிரிப்புடன்.

அவன் பாதத்தில் தலை வைத்து நமஸ்கரித்துவிட்டு மண்டியிட்டு இரு கரங்களையும் கூப்பியவண்ணம் நிமிர்ந்து அவனை நோக்கி, "ஒருமாத காலம் இரவு பகல் உழைத்து உங்கள் ரூபத்தை இவ்வட்டையில் வரச் செய்தேன். நேற்று இரவுதான் பூரணமாக முடிந்து, சட்டம்போட்டு, பூஜைக்குரிய ஸ்தானத்தில் வைத்தேன். இன்று காலையில் உபவாசமிருந்து ஷோடச உபசாரத்துடன் பூஜை செய்தேன். இப்பொழுதும் பூஜை செய்துவிட்டு நிருத்ய, கீத, வாத்ய என்ற பூஜை அங்கப்பிரகாரம் நடினமாடினேன். என்னை இன்று சமூகத்தின் முன்னணியில் நிற்கும்படி செய்த தங்களைத் தெய்வமாகப் பூஜிக்க விரும்பினேன். ஆனால் அநேகநாள் தவம்செய்து பகவான் பிரத்யக்ஷமாக ஏங்கி நிற்பர் யோகியர்கள். என் தெய்வம் உடனேயே காட்சி கொடுத்ததைப் பார்த்ததும் அதிகப்பட்ட ஆனந்தம் உணர்வை யிழக்கச் செய்துவிட்டது. அவ்வளவுதான்" என்று சாதுர்யமாகப் பேசினாளே தவிர மனதில், திக்கென்ற பயம் அகலாமலே இருந்தது.

"ஓ அப்படியா? அதுதான் தபஸின் ஜ்வாலை ஈசனுதிகளைத் தாக்கி அவர்கள் ஓடி வருவதுபோல், உனது அந்தரங்க பக்தியானது, என்று ஹ்ருதயத்தைத் தாபமடையச்செய்து இருக்கை கொள்ளாமல் பிரத்யக்ஷமாகச் செய்ததுபோலும்" என்று கூப்பியிருந்த அவளது கைகளைப்பற்றித் தூக்கி நிறுத்தினான்.

சட்டெனத் தனது கையை இழுத்துக்கொண்டு, "அடடா, என்ன தவறு செய்துவிட்டேன். வந்தவரை உபசரியாமல் ஏதேதோ சொல்லிவிட்டேன். இப்படி உட்காருங்கள்" என்று பக்கத்திலிருந்த சோபாவைக் காண்பித்தாள். அதில் உட்கார்ந்துகொண்டான்.

தன்னை ஏமாற்ற அவள் சொல்லும் சாகஸ வார்த்தைகளைக் கேட்டு, "அப்பா! என்ன சாதுர்யம்! ஆனால் நான் அவ்வளவு சுலபத்தில் ஏமாறுவேனா" என்று நினைக்கும்பொழுதே அவனையுமறியாமல் புன் சிரிப்புத் தோன்ற, அவளையே பார்த்தபடி யிருந்தான்.

அவன் அவள் கையைப் பற்றியதினால் மனதில் சஞ்சலம் மிகுந்தது. அவன் எதற்காக வந்தான் என்பதை எப்படிக் கேட்பது என்ற சிந்தனையில் சிலைபோல் நின்று கொண்டிருந்தாள்.

"சிந்தை கலங்குவதேனோ? சிறுபிள்ளைத் தனமோ" என்று ஓர் அடி மெதுவாகப் பாடி நிறுத்தினான்.

இதனால் அவள் மனம் இன்னும் கலக்கத்தை அடைந்தது. தான் எந்த விதமாக

நடந்துகொள்ளுவது புத்திசாலித்தனமாகும் என்ற சிந்தனையில் கடைக்கண்ணால் அவனை நோக்கியவண்ணம் குனிந்தபடியே நின்றாள்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு "கலா! ஏன் இப்படித் தடுமாறுகிறாய்? உன் மனதில் நினைப்பதைச் சொல்லட்டுமா? நான் உனது ஆட்டத்தின் கடைசித் தருணத்தில் வந்திருந்தால் உன் இரகசியம் காப்பாற்றப் படும். என்னை மரியாதையாக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி நடந்து அனுப்பிவிடலாம். துவக்கத்திலேயே வந்தி ருந்தால் என்ன செய்வது? விஷயம் எப்படி யாகுமோ? என்று தடுமாறுகிறாய், அப்படித் தானே? எனது யூகம் சரிதானா" என்றான்.

"என்ன பிறர் மனதிலுள்ளதை............" என்று முடிக்காமல் ஆச்சர்யத்துடன் அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

"ஆம், அச்சக்தி உன்னாலேயே உண்டானது. கலாவதி தேவியாரே! நீங்கள் "உன்னை நினைந்து" என்று பாடின பாட்டின் பல்லவிக்கே, நான் இவ்விடம் வந்து விட்டேன். எனது ஓவியத்திற்குக் கிடைக் கும் மரியாதை எனக்கும் கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் நின்றுகொண்டிருந் தேன். இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டவண்ணம் அவள் கையைப் பற்றி அருகிலிருந்த சோபாவில் தனது பக் கத்தில் உட்காரவைத்தான்.

இச் செய்கை அவளுக்கு மிகுந்த லஜ்ஜை யைக் கொடுத்தபடியினால் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டாள்.

"லஜ்ஜை என்பது பெண்களுக்கு இயற் கையாகக் கொடுக்கப்பட்ட ஆபரணம் போலும்! காலேஜ் படிப்பில் பட்டம்பெற்ற கலா, நாட்டிய சக்ரவர்த்தினி என்று பட்டம் பெற்ற நாட்டிய கலா, இப்படிப் பயப்படு கிறாயே. இதென்ன பேதைமை?" என்று சொல்லியவாறு அவள் முகத்தை மூடின கைகளை எடுத்துத் தன் கைக்குள் பிடித்துக் கொண்டான்.

"இயற்கையின் செய்கையைத் தடுப்பதற்கு எந்தக் கல்விக்கும் கலைக்கும் சக்தி கிடை யாது" என்றாள் குனிந்தவாறே.

"மேலே எப்படிப் பேச்சைத் துவக்குவது" என்ற நினைப்பில் இருவர் மனமும் விஷயத் தைத் தேடி அலைந்தன.

அன்றுவரை அடைந்துவந்த தாபம் தீர, "கலா நம்முடையவள்" என்ற ஆனந்தத்தில் திகழ்ந்தது ரவிவர்மனின் மனம். அதனால் அவளின் மெல்லிய விரல்களைச் சொடுக் கெடுப்பதும், வளையல்களை முன்னும் பின்னும் தள்ளுவதுமாகிய வேலையில் ஈடுபட்டவண்ண மிருந்தான்.

"இவர் நம்மை எவ்விதம் வைத்து நடத்து வதாக உத்தேசம் செய்திருக்கிறார் என்பதை இப்பொழுதே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சமயம் தைரியலக்ஷ்மி துணைபுரியவேண்டும், எப்படிக் கேட்பது? பவானிமாதா! வாழ்வின் ஓடத்தில் கால் வைக்கும் சமயம், அது சுமையாக, புயல் காற்று முதலியவைகளுக்கு ஆளாகாமல் ஆனந்தமாகச் செல்லக்கூடிய வழியை இந்தச் சமயம் நீதான் காட்டவேண்டும்" என்று வேண்டியவாறு, பயம், இன்பம், துன்பம் என்று சொல்ல முடியாத அர்த்தமற்ற உணர்ச்சியில், அவன் செய்கைகளைத் தடுக் கவோ, இன்பத்துடன் அனுபவிக்கவோ இல் லாமல் ரவிவர்மனின் படத்தையே உற்று நோக்கியவாறு உட்கார்ந்திருந்தாள்.

கையை வருடிய வண்ணம் கண்ணாடியில் தங்கள் ஜோடியைக் காண விரும்பி நிமிர்ந்து நோக்கினான், கலாவின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்டதும் அவன் மனம் துணுக் குற்றது. "கலா! என்ன பலமான யோசனை செய்கிறாய்? உன் முகத் தோற்றம், நீ ஏதோ கேட்க வேண்டுமென்று நினைத்துக் கேட்கத் தயங்குகிறாய் என்பதைக் காண்பிக்கின்றது. இதுவரை நமது காதல் திரை மறைவிலி ருந்தது. இன்று திரை விலக்கப்பட்டுவிட்டது. முதன்முதலில் பாலிகையாக அரங்க மேடை யில் தோன்றியபொழுதே என் மனம் உன் பாலிழுக்கப்பட்டது. அந்த வயதில் உன்மீது அளப்பரிய பற்றுதல்தான் ஏற்பட்டது. குலத்தின் பெயரால் நீ தாழ்மையான நிலை மையை அடையக்கூடாது என்ற ஆவல் என் மனதில் தீவிரமாக எழுந்தது. பால்யத் தில் உன்மீது ஏற்பட்ட தூய்மையான அன் பானது யௌவனத்தில் காதலாக மாறினது இயற்கையின் வெற்றியாகிவிட்டது. என் காதல் உள்ளன்புடன் கூடியது, தூய்மை பெற்றது என்பதனால் உனது நிலைமைக்கு யாதொரு குறைவுமில்லாமல் நடப்பதுதான் நன்மை என்ற எண்ணத்தினால் என் மனதை வாட்டி வதைத்துக் காதல் தீயை வளர்க் காமல் அணைக்கப் பிரயத்தனப்பட்டேன். கலா, யாவும் விழலுக்கிரைத்த நீராகப் போய்விட்டது. எனது காதல் வயிரம் பாய்ந்த மரம்போலாயிற்று. நீ இல்லையேல் எனது வாழ்க்கை வெறும் சூன்யம் என்பது புலனாயிற்று. உன் கண்கள் ஒருவாறு உன் மனதைக்காட்டினாலும், உன் மனதை உள்ள படி அறியவேண்டுமென்ற ஆவல் கொஞ்ச நாட்களாகத் தீவிரமாக எழுந்தது. உன்னைப்

பார்க்காமலிருந்த இந்த ஒரு மாதமாக அந்த ஆவல் அடக்கமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டது. அதிலும் இன்று மன வேதனை உச்ச நிலைமையை அடைந்தது. அதனால் ஒன்றையும் கவனியாமல், பதவி, பட்டம் யாவையும் மறந்து, பித்தனைப்போல் உன்னிடம் வந்தேன். என் அன்பு மாசற்றது என்பதை நிரூபிப்பதுபோல் உன் வாயினாலேயே உன் உள்ளத்தையறியவும் சந்தர்ப்பம் கிடைத்தது பவானிமாதா அருள் என்று மகிழ்ந்தேன். சற்றுநேரம் இன்பமாக மனம் விட்டுப் பேசிக்கொண்டிருந்துவிட்டுச் செல்லலாமென்று நினைத்தேன். ஆனால் நீயோ உணர்வற்ற பிம்பம்போலிருக்கிறாய். நான் என்ன நினைப்பது? உன் மனதை உள்ளபடி வெளியிடமாட்டாயா கலா! இதோ என் ஹ்ருதயத்தைத் தொட்டுப்பார், எவ்வளவு தாபத்துடன் துடிக்கிறது என்பதைக் காண்பாய்'' என்று சொல்லிய வண்ணம், வலதுகையினால் அவள் வலக் கையைப் பற்றி, மார்புமீது வைத்து அழுத்திப்பிடித்து, இடது கையினால் குனிந்திருந்த அவள் மோவாயைப் பிடித்து நிமிர்த்தினான்.

இரு விழிகளிலும் நீர் நிரம்பி விளக்கொளியில் பளபளவெனப் பிரகாசித்தது. பிரகாசத்தில் அவன் பார்வை தாக்கியதும், நிரம்பிய நீர் முத்தாகக் கன்னத்தில் உருண்டது. திடுக்கிட்டுப் பதறியவனாக ''கலா! இது என்ன? ஏன் வருத்தப்படுகிறாய்? தற்சமயம் நீ நடந்துகொள்ளும் விதம் என் மனதிற்கு ஒன்றுமே விளங்கவில்லை. உன் உள்ளத்தைத் திறந்து சொல்லமாட்டாயா? நீ இப்படியே மௌனம் சாதித்தாயானால், இன்று இரவு முழுவதும் இப்படியே உட்கார்ந்திருப்பேன். முடிவு தெரியும் வரை அசையப் போவதில்லை. இதனால் என்ன நேர்ந்தாலும் சரி. உன்னைவிட்டுப் போவதில்லை. என் மனதைச் சின்னாபின்னமாக்கி வாட்டி வதைப்பது உன் அன்பின் செய்கையாகுமா'' என்றான் கெஞ்சும் பாவனையாக அவள் மோவாயைப் பிடித்தவண்ணம்.

அந்தச் சமயம் அவனது சொல்லும், செயலும், தோற்றமும், அதுவரை அவளை அமுக்கிப் பிடித்திருந்த பயத்தையும் லஜ்ஜையையும் விலக்க, சிறிது தைரியம் உண்டானது போல் தோன்றினது. அதனால் ''ஒன்றுமில்லை. நாயானது முழுத் தேங்காயைக் கவ்வினாலும் அதற்கு ருசியை அனுபவிக்க முடியாதல்லவா? என்ற எனது நிலையை முகம் எடுத்துக் காட்டிற்று, அவ்வளவே'' என்றாள் மோவாயைப் பிடித்திருந்த கையைத் தனது கையினால் எடுத்துப் பிடித்துக் கொண்டு தலையைக் கவிழ்ந்த வண்ணம்.

''அப்படியல்ல. கன்னி கனிந்த காதற்கனியைத்தான் கௌவினாள். அதன் ருசியைத் தெவிட்டத் தெவிட்ட அனுபவிக்க முடியும். வீண் எண்ணங்களுக்குக் காரணமேயில்லை''

''காதலின் கனி விரும்பும் ஒரு கன்னிகைக்கே உரிமையாக வேண்டுமென்றால்?''

''ஒருத்திக்கு உரிமையாகாமல் இன்பத்தைப் பகிர்ந்து அனுபவிக்க முடியுமா? கலா! கேட்கவேண்டுமென்று நினைத்ததை மனம் விட்டுக்கேள், காதலின் ஜோதியைப் பூரண அம்சத்துடன் காணவும், கலையையும் காதலையும் ஒரே இடத்தில் அனுபவிப்பதையும் விரும்பும் என் காதலை உன்னையன்றி வேறு எவரும் ஏற்கமுடியாது. உரிமை உனக்குத்தான். பவானிமாதா அறியச் சத்யமாகச் சொல்லுகிறேன். அப்படியிருக்க உன் உரிமையைப்பற்றிய சந்தேகம் ஏன்?

(தொடரும்)

மண மகிழ்ச்சி

எம். எஸ். கமலா

P.V.G

ஹரநாத் சம்பூ ராமாயணத்தைப் படித்துக்கொண்டே தெருவில் கூக்குரலிட்டுக் கொண்டோடும் ஜனங்களின் கூக்குரல்களைக்கேட்டு முகத்தைச் சிறுத்துக்கொண்டார். அபாயக் குரல்களும், அபயக் குரல்களும் ஒன்று சேர்ந்து கொந்தளித்துக்கொண்டு அலைபோல் பாய்ந்து வருவது கேட்டது. அவர் நிச்சயமாய் இருந்த இடத்தை விட்டசையாது ராமாயணத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

'காண்டக்ராஹ மகாமீனம் வந்தே ராமாயணார்ணவம்'

என்று பாடிக்கொண்டே பின்புறமிருந்து வந்த பவானிபாய் தெருக் கதவை இழுத்து மூடித் தாளிட்டாள்.

ஹரநாத் புஸ்தகத்தில் பதிந்திருந்த தம் கண்களைத் தெருப்புறம் திருப்பினார். அவர் நெஞ்சம் துணுக்குற்றது. அடித் தொண்டையில் "பவானி" என்றார்.

"ரொம்ப லக்ஷணம். உங்கள் ராமாயணம் உங்களையே மறக்கச்செய்துவிடுகிறது. நீங்கள் அந்த மகா காவியத்தில் மனதைச் செலுத்திவிட்டால் உலகமே பிளந்து அக்கினி மழை பொழிந்தாலும் உங்களுக்குத் தெரியாது. பின்புறம் நாங்கள் எங்கள் வேலையிலிருப்போம். வந்துவிடுவார்கள் மனித எமன்கள். அப்புறம்......?"

"பவானி! எமன்கள் வருவதற்கு முன் சரணார்த்திகள் அபயம் வேண்டி, தங்கள் உயிரையும் உடலையும் பத்திரப்படுத்தத் தெருத் தெருவாய் நுழைந்து, ஓடி வரும்போது ஒரு வீடு திறந்திருந்தால் அவர்கள் மனம் எப்படி சந்தோஷப்படும்? துடிக்கும் ஜீவன் எத்தனை சாந்தி யடையும்? அடைக்கலத்தை நாடி வருபவர்கள் தங்களைப் பத்திரப்படுத்திக்கொள்ள, தாங்களே மூடிக்கொள்வார்கள். உனக்கிது அனாவசிய வேலை. இரண்டாவது மகா கொடிய செய்கையும் கூட." என்று சொல்லி, தாம் விட்ட விடத்தைப் பார்த்துப் படிக்கத் தொடங்கினார். பவானியும் தனக்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு சென்றாள்.

'தடதடதட்' தடதடதட்' என்று தெருக் கதவை யாரோ இடித்தார்கள். தலை நிமிர்ந்து தெருக் கதவைப் பார்த்த ஹரநாத் "இந்தப் பெண்களிடையேயே ஏன் தான் இப்படி சுயநலம் வேரூன்றியிருக்கிறதோ?" என்று சொல்லிக்கொண்டெழுந்து, ஓடிச் சென்று கதவைத் திறந்தார்.

முக்காடிட்ட அழகி சடாரென்று உள்ளே நுழைந்தாள். ஹரநாத் ஆச்சர்யத்துடன் தெருவைப் பார்த்தார். ஒரு வண்டி போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. சிறிது அச்சத்துடன்,

"யார் அது?"

"சுவாமி!" என்று அவர் காலில் வீழ்ந்து பணிந்தாள் முக்காடிட்ட பெண்.

"யாராயிருந்தாலும் பயமில்லை. தாயே! நீ பயமற்றிருக்கலாம்" என்றார் ஹரநாத்.

அவள் மெல்ல எழுந்து பயத்துடன் திறந்திருக்கும் தெருக் கதவைப் பார்த்தவள் அதை மூடித் தாளிட்டு,

"சுவாமி! என் மாமனார் என்னையும் மற்றும் இரு ஹிந்துப் பெண்களையும் வண்டியிலேற்றி அப்பெண்களைப் பத்திரமாய் அவர்கள் இருக்கையில் சேர்த்து என்னை, பிறந்தகம் செல்லச் சொல்லி, அவர் மேற்குத் தெருவில் அட்டகாசம் செய்துகொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களை அடக்க ஓடினார்."

"உன் மாமனார்...,.........அப்படியென்றால் நீ........?"

“என்னைத் தெரியவில்லையா? நான் ஜானி பீகம்.” என்று தன் முக்காட்டைக் கழற்றினாள்.

“என்ன? காஜியின் நாட்டுப் பெண்ணா? ஜானி! உன் அகமுடையான் எங்கே? நிறை மாதக் கர்ப்பிணி நீ ஹிந்துப் பெண்களை அழைத்துக் கொண்டு......ராம ராம......”

“நான் ஹிந்துப் பெண்களுக்குப் பாதுகாப்பாய் அவர்களுக்கும் முக்காடிட்டு வண்டிக்குள் அமரச் செய்து, முன்புறம் நான் அமர்ந்து, வரும் முஸ்லீம் சகோதரர்களைத் தடுக்க வேண்டியதாயிற்று.”

“ஹமீத் எங்கே? இந்த நிலையில் உன்னை ஒருவளாய் அனுப்பி விட்டு, அவனாகிலும் உன்னை அழைத்துப் போய் உன் பிறந்த வீட்டில் விட்டு விட்டுப் போகக்கூடாதா?”

“அவருக்குத் தோளில் பெரிய காயம் பட்டிருப்பதாகக் கேள்விப்பட்ட பின்தான் உங்கள் நண்பர் என்னை இப்படி அனுப்பிவிட்டுச் சென்றார். வருகிறீர்களா?” என்று கண்கள் நுனியில் திரண்டு நிற்கும் நீர் முத்துக்களைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டாள்.

“பொறும்மா! வண்டி கட்டிக்கொண்டு வறேன்” என்று, “பவானி! காஜியின் நாட்டுப்பெண் வந்திருக்காள். அவளுக்கே தாயினும் கொடு” என்று பின்புறம் கட்டப்பட்டிருக்கும் காளைகளை அவிழ்த்து வண்டியில் பூட்டினார் ஹரநாத்.

* * *

“ஜானி! கொஞ்சம் இந்தப் பாலை மாத்திரம் சாப்பிடம்மா! நிறைமாத சூலி, பாவம்! மனிதர்களிடம் எங்கிருந்துதான் இவ்வளவு சுய நலம் வந்து ஒட்டிக்கொண்டதோ? முன்போல் தோளுக்குத் தோள் இணைத்துக் கொண்டு பயமற்று, பாசத்துடன் பேசிச் செல்லும் நற்காலமும் வருமோ? அல்லது மானிடர்களும், தானவர்களும் உலாவும் பூமியாகத்தான் இருக்கப்போகிறதோ நம் நாடும்” என்று அலுத்துக்கொண்டாள் பவானி.

“அம்மா! அன்பிற்கு அடிமையான மானிடர்களும், அசுரத்தனத்திற்குப் பிறப்பிடமான தானவர்களும் எப்பொழுது உலகவீதியில் நிர்ப்பயமாய்ப் பெண்களைக் கற்பழித்து ரத்த தாகத்தில் வெறிகொண்டு பேய்போல் நிர்த்தனம் செய்யத் தொடங்கினரோ, அப்பொழுதே உலக சௌபாக்கியத்திற்கு நாசம் தான். உலகின் உயிர்களாகிய சிசுக்களை ஹத்திசெய்து அன்னைமார்களை அல்லல் படுத்தத் தொடங்கியபின்பா............” என்னும் போதே அவள் முகம் சிவப்பேறி உதடு துடிக்கத் தொடங்கியது.

“குழந்தாய் ஜானி, புறப்படம்மா. உன்னை உன் தந்தையிடம் ஒப்படைத்து இவளுக்குத் துணை வந்தாகவேண்டும்” என்று ஹரநாத் அவ்விடம் வந்து நின்றார். கோப்பையில் வைக்கப்பட்டிருந்த பாலும், தட்டில் வைக்கப்பட்டிருந்த கனிவகைகளும் அப்படியே இருப்பதைப் பார்த்து “கொஞ்சம் எதையாவது சாப்பிட்டுப் புறப்படு குழந்தாய்!” என்று அன்புடன் சொன்னார்.

“தயவு செய்து மன்னிக்க வேண்டும், என் மனம் அவர் மேல் தானிருக்கிறது. நான் ஹிந்துப் பெண்களை அழைத்துக் கொண்டு வரும்போது மேலண்டைத் தெருவில் அவரும் சிலரும் கைகலப்பது தெரிந்தது. வண்டி வாயு வேகத்தில் ஓடிவரும்போது அவர் வீரிட்டதை நினைத்தால் அவர் அங்கே தான் வீழ்ந்திருக்க வேண்டும். அவரையும் பார்த்து எடுத்துக்கொண்டு போகலாம்” என்றாள், பொங்கிவரும் துக்கத்தை அடக்கிக்கொண்டு. அவள் கண்கள் மாத்திரம் சடசடவென்று நீர் முத்துக்களை உதிர்த்தன.

ஹரநாத் மறு பேச்சுப் பேசாமல் வண்டியருகில் சென்றார். அவர் கண்களும் கசிந்தன. பவானி குரல் தழு தழுக்க அன்புடன் ஜானியை கட்டியணைத்துக்கொண்டு, “அம்மா! உன் மனதில் இத்தனை சோகத்தை மறைத்து வைத்துக்கொண்டு உன்னைப் போன்ற பெண்களைக் காப்பாற்றிய வீரத் தன்மையைக் கேட்டபின் என்னால் உன்னை மானிடப் பெண்ணாக நினைக்கவே முடியவில்லை. தெய்வப் பிறவிதானோ?” என்று தோன்றுகிறது. இச்சமயம் உன்னைப் பாலும் பழமும் வைத்து உபசரித்த அறியாமைக்கு என்னை மன்னித்து விடு குழந்தாய்!” என்று கண்ணீர் சோரச் சொன்னாள்.

“சச்சரவு அடங்கி, சாந்தி ஏற்பட்ட பின் சமாதானத்துடன் சந்தோஷமாய் வந்து தங்களைப் பார்க்கிறேன்” என்று வண்டியில் ஏறினாள். ஹரநாத் வண்டியை வேகமாய் ஓட்ட மாடுகளைத் தட்டிக் கொடுத்தவாறே வண்டியில் ஏறினார்.

“மேலண்டைத் தெரு வழியாய் வண்டியை விட்டால்......அவர்......ஒருகால்....” என்று துக்கம் தோய்ந்த குரலில் ஜானி கெஞ்சுவது போல் சொன்னாள்.

“அம்மா! அப்பக்கம் சச்சரவு அதிகமாயிருப்பதாகத் தெரிகிறதே அம்மா! அதோ பார்!! மேற்குத் தெரு மூலையில் கூக்குரல்களும் அரக்கர்களின் அட்டகாசங்களும்......” என்று தயங்கினார் ஹரநாத்.



“என்ன செய்வது? என் மனம் அங்கேதான் சென்று நிலைத்திருக்கிறது. அவர் அங்கிருக்கிறாரா? என்று பார்த்துக்கொண்டு அப்படியே போவோம். உங்களுக்குத் தெரியாததொன்றுமில்லை” என்று பரிதாபமாய் அவரைப் பார்த்தாள்.

“போவோம், அங்கே சென்றால் மறுபடியும் வண்டியை இப்பக்கம் திருப்பிக்கொண்டு வருவது கஷ்டம். அப்படியேதான் போக வேண்டும். கடவுள் இருக்கிறார்” என்று வண்டியை நிதானமாய் ஓட்டத் தொடங்கினார் ஹரநாத். ஜானியின் மின்வெட்டுப் பார்வை, இருட்டைப் பிளந்துகொண்டு, ரத்த ஊற்றுப் பெருக்கெடுத்தோடும் தெருக்களில் கால்கள் வெட்டுண்டு, கைகள் துண்டுபட்டு, தலைகள் துண்டு விழுந்து, ஊசலாடும் உயிர்களும் துடிதுடிக்கும் ஜீவன்களும் நிறைந்து கிடக்கும் கொலைக்களங்களை நோக்கிப் பாய்ந்தது. வண்டியும் கூடியமட்டும் நிதானமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

“அப்பா! நிறுத்துங்கள். அல்லா! உன் கருணை இப்படியா? சத்தியத்திற்கும், நேர்மைக்கும், நீதிக்கும், இருப்பிடம் கொலைக்களமா? என்று வீரிட்டாள் ஜானி.

ஹரநாத் கையிலிருந்த சாட்டை கீழே விழுந்தது. அவர் சட்டென்று வண்டியை விட்டிறங்கினார். அதே சமயம் ஜானியும் கீழிறங்கி. ரத்தத்தில் தோய்ந்து கிடக்கும் பச்சைப் பட்டுக் கைலி உடுத்திருக்கும் ஓர் யுவன்முன்போய் குனிந்து, “நாதா”! என்று கன்னங்களைத் தொட்டுக் கதறினாள். ஹரநாதின் உள்ளம் துடித்தது.

“ஹமீத்!” என்று உரத்துக் கூவிவிட்டார். உடனே சூழ் நிலையை நினைத்து, “குழந்தாய்! சற்று நகரு. இங்கு நிற்பது உசிதமல்ல” என்று ஹமீதை எடுத்து வண்டியில் கிடத்தி, “ஏறிக்கொள்! ஜானி!! உன் பொங்கி வரும் துக்கத்தைப் புதைத்துக் கொள்.” என்று அவசரப்படுத்தினார்.

“அப்பா!” என்றலறினாள்.

“துக்கத்தை அடக்கிக்கொள். மனிதப் பேய்கள், ரத்தப்பிசாசுகள், உயிர்களை வதைக்கக் கங்கணம் கட்டியிருக்கும் மனித விலங்குகள் நிறைந்த மகா கொடிய இடம் தாயே! இதில் ஈவிரக்கமற்ற பாவிகளின் பாபக்காற்று வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. சீக்கிரம் ஏறிக்கொள். வண்டிக்கு மறைவு கட்டுகிறேன்” என்று தம் தலையில்

கட்டியிருந்த பாகையை அவசர அவசரமாய்ப் பிரித்தார்.

* * *

வண்டி மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி, கடா முடா என்ற சப்தத்துடன் போய்க்கொண்டிருந்தது. ஹரநாத் உலகத்திலேற்பட்டுள்ள மதக்கட்சியை நினைத்து, சமரஸத்திற்கும் அதற்குமிடையே யுள்ள உயர்வு தாழ்வுகளின் மேல் தம் சிந்தனை ரதத்தை ஓட்டிக்கொண்டிருந்தார்.

ஜானியோ தன் வாய்க்குள் சேலைத் தலைப்பை அடக்கிக்கொண்டு, ஊற்றெடுத்து வழியும் தன் கண்ணீரால் ஹமீதின் முகத்தில் கறைப்பட்டிருக்கும் ரத்தத்தைத் துடைத்துக்கொண்டிருந்தாள்.

"யாரது! வண்டியை நிறுத்து" என்ற அரக்கக்குரலொன்று அண்டமதிர வெளி வந்தது.

ஹரநாத் வண்டியை ஓட்டியபடியே "சகோதரர்களே! சாவுக்கும் அஞ்சாது சச்சரவில் புகுந்து தம்மை மறந்த மைந்தர்களின் மனைவி......யர்களப்பா!" என்று வண்டியை விசையாய் ஓட்ட, எருதின் வாலை முறுக்கி, இடையில் காலால் ஒரு குத்துக்குத்தினார்.

"நம்மினத்தவர் நம்மைக் கண்டு பயப்பட வேண்டியதில்லையே! ஏன் வண்டியை வேகமாய் ஓட்டுகிறாய்! ஏ காதர், முன்புறம் போய் வண்டியை மடக்கு, ஹுஸேன்! பர்தாவை நீக்குடா! காஸிம்! வண்டிக்குள் விளக்கை வீசி வெளிச்சம் காட்டுடா!" என்று மடமட வென்று உத்தரவுகளைப் பிறப்பித்துக்கொண்டே வண்டியருகில் வந்து ஹரநாதின் கைகளைப் பற்றிக்கொண்டான் அக்பர்.

வயதில் முதுமைகாண ஆரம்பித்திடினும் தைரியத்தில் இளமை தளிர்த்தவராகிய ஹரநாத் சட்டென்று வண்டியை விட்டுக் குதித்து, "வாலிபர்களே! நான் சொல்வதில் நம்பிக்கை யில்லையா? உள்ளே உங்கள் சகோதரி கோஷாப் பெண் இருக்கிறாள்" என்னும்போதே,

"ஹிந்து, எங்கள் வைரி; காஸிம் இவரைப் பிடித்துக்கொள். ஹுசேன்! ஊம், உன் வேலையைப்பார்! காதர் வண்டிக்குள் பார். அழகிய மங்கையா? பல் விழுந்த கிழவியோ? மங்கையா யிருந்தால் ஓடாமல் பிடித்துக்கொள். கிழவியா யிருந்தால் சைத்தானுக்கு விருந்தளித்து விடு. குழந்தையா யிருந்தால் எடுத்துக்கொள், நம் மதத்தை விரிவுபடுத்த" என்று ஆக்குரோஷத்துடன் கூறி,

"ஏ காபிர்; பொய்யா சொன்னாய்? இரு. வண்டிக்குள்ளிருப்பவர்களை என்ன செய்கிறோமென்பதை ஆனந்தமாய்ப் பார்த்துவிட்டு அப்புறம் நீ போகலாம்." என்றான் பற்களைக் கடித்தபடி அக்பர்,

"என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். உள்ளே இருப்பவள் உங்கள் சகோதரி. அவள் நிறைமாத சூலி. அவளைப் பத்திரமாய் அவள் பிறந்தகத்தில் சேர்த்துவிடுங்கள். என்னை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள்." என்றார் சற்றும் சலனமற்ற குரலில்.

"அண்ணா! பொய் சொல்கிறான் இந்தப் பன்றி. உள்ளே யிருப்பது நம்மினத்தவர் என்றால் நாம் விட்டுவிடுவோமென்று நினைத்திருக்கிறான்போலும்" என்று கையிலிருக்கும் குண்டாந்தடியை ஓங்கினான் காஸிம்.

அதே சமயம் ஜானி பீகம் சட்டென்று வண்டியைவிட்டுக் குதித்து "நிறுத்து பாபி! உலகில் நியாயம் மடிந்துவிட்டதா? சத்தியம் சமாதியாகிவிட்டதா?? மனிதத் தன்மை மங்கிவிட்டதா???" என்று கூவி, காஸிமுக்கும், ஹரநாதிற்கும் மத்தியில் நின்றாள். அவள் முகம் திரையிடப்பட்டுக் கோஷாவாயில்லை. விண்ணில் நின்று நகைக்கும் தாராநாதனையும் பழித்துக்கொண்டிருந்தது. துடிக்கும் அவள் செவ்விய உதடுகளும், நீரில் ததத்தளிக்கும் கருவிழிகளும், கண்ணீர் வழிந்து நிழலாடும் கன்னக் கதுப்புகளும், கோபத்தால் மேலெழும்பி மிரட்டும் புருவ வளைவுகளும், இத்தனை பயங்கர லாலஸத்தைப் பணிந்து வணங்கும் கூந்தல் சுருள்களும் அந்த ரத்ததாகிகளின் குரோதக் கண்களில் காம மின்னலைப் பாய்ச்சின.

"பாயி! அச்சா!! பஹுத் குஷீஹை!!! அக்பர்! எனக்கு விடையளித்தால் நான் இவளை அழைத்துப்போய்..........."என்னும் போதே,

"என்ன சொன்னாய்? மிருகமே! உன் சகோதரி........."என்று பாய்ந்தார் காஸிம் மேல் ஹரநாத்.

"அரே சுவர்! உனக்கு அத்தனை தெரியுமா?" என்று ஹுசேன் ஒரு குத்து விட்டான் அவர் கன்னத்தில். ஜானியின் மனம் துடிதுடித்தது.

"அப்பா! என் பொருட்டு..........." என்று, "ஏ பாபிகளே! அவரை ஒன்றும் செய்யாதீர்கள். வயது சென்ற அக்கிழவரைத் தொடுவதற்குமுன் என்னை வதைத்துவிடுங்கள்" என்று அவர்முன் பாய்ந்து நின்றாள்.

"அம்மா! ஜானி!! இந்நள்ளிரவில் நிறைமாத சூலி நீ இங்கு நின்று போராடுவது உசிதமல்ல. குழந்தாய், நீ உன் பிறந்தகம் போய், பத்திரமாய்ச் சேர். என் மனம் சாந்தியாய் இறைவனடியைப்போய்சேரும். நீ இங்கிருக்கும்போது என் உடலிலிருந்து உயிர் போகச் சம்மதியேன்."

"என்ன உருக்கமடா! பெண்ணின்மேல்? அவள் பிறந்தகம்? இனி அவளகம் நம்மிடம்தானென்பதை அறியவில்லை போலும் இந்த கிழமாடு."

ஹரநாதின் முகம் கோபத்தில் சிவந்தது. அப்பொழுதும் தன்னை அடக்கிக்கொண்டு "வாலிபர்களே! இந்த அழகி உண்மையில் ஹிந்துப்பெண்ணல்ல, உங்கள் குலத்தவள். காஜியின் நாட்டுப்பெண். ஹமீதின் மனைவி. அவள்மேல் உங்கள் மூச்சுப்பட்டாலும் பிறகு நீங்கள் சங்கடத்திற்குள்ளாவீர்கள். என்னை என்னவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். அவளைப் பத்திரமாய் அவள் பிறந்தகத்தில் சேர்த்துவிடுங்கள்" என்றார் கருணையும் இரக்கமும் குரலில் ஒருங்கே ஒலிக்க.

முரடர்கள் மனம் சற்றே அசைந்து கொடுத்தது. ஜானி ஹரநாதின் முன் பணிந்து, "அப்பா! இங்கிருந்து சென்றால் இருவரும் ஒன்றாய்த்தான்செல்லவேண்டும். எங்காகிலும் சரி. வீட்டிற்காயினும், சுடுகாட்டிற்காயினும். சகோதரர்களே! கொன்றால் எங்களிருவர்களையும் கொன்றுவிடுங்கள். இல்லையா? எங்களைப் போகவிடுங்கள். அவரை விட்டு நானோ, என்னைவிட்டு அவரோ இவ்விடத்தை விட்டசைய மாட்டோம். அப்பா! மற்றொரு முறை அம்மாதிரிச் சொல்லாதீர்கள்" என்று கண்ணீர் வடித்தாள்.

மகம்மதிய நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களின் சினமெல்லாம் ஹரநாதின் மேல்தான் பாய்ந்தது. "கிழப் பிசாசே! இத்தனை வயதான பின் பொய் சொல்லி ஏமாற்றுகிறாயா? உன் பெண்ணை எங்களினத்தவள் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் அவளைப் பத்திரமாய் அழைத்துப் போவோமென்று நினைத்தாயா? உன்னால் உலகிற்கோ உன் மனைவிக்கோ...... பிரயோசனமில்லை. சீக்கிரம் அல்லாவிடம் போய், நீ பாபம் செய்து பிறந்த உங்கள் ஹிந்துக் குடும்பத்தை விட்டொழித்து, புனித இஸ்லாம் குலத்தில் பிறக்கக்கடவாய் உன் பெண்ணால்............"

"சீ! பாபாத்மா!" என்று அக்பரின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார் ஹரநாத்.

இமைப் பொழுதில் மற்ற மூவரும் அவர் மேல் பாய்ந்தனர். ஜானி அவர் முன் போய் நின்று, "என் சடலம் மண்ணில் சாய்ந்த பின் தான் என் தந்தையின் சடலத்தின் மேல் பிறர் கைபட வேண்டும். சண்டாளர்களே! நேர்மையைத்துறந்த நீசர்களே!! பெண்களை, புழுதியைவிடக் கடையாய்க் கருதி, காம இச்சையை தீர்த்துக் கொள்ளும் காமப் பேய்களே! எங்கே உங்கள் ஆயுதங்கள், அட்டகாசங்கள், வீரதீர பராக்கிரமங்கள். பெண்களைக் கற்பழிப்பதும், சிசுக்களை வதைப்பதும், மத வெறியால் மானிட சமூகத்தையே மாய்க்க வந்த பிரத்தியக்ஷ எமன்களே, தாயில்லா என்னைத் தாயைப் போலவும், தந்தையின் கடமைகளில் குறைவில்லாமல் வளர்த்த என் தந்தையின் உடலிலிருக்கும் ஒரு ரோமக்காலுக்கும் இழுக்குவரச் சம்மதியேன். அப்பா! மறுபடியும் இந்த நராதமர்களிடம் என்னைக் கொண்டு போய் வீடு சேர்க்க வேண்டாதீர்கள்" என்றாள் தைரியமாய்.

"ஜானி! உன் பெண்ணுள்ளத்தின் மேன்மையை இந்தப் பேயுள்ளங்களுக்கறியச் சக்தியில்லையம்மா! வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய எல்லா சுக சௌபாக்கியங்களையெல்லாம் நான் அனுபவித்தாயிற்று. குழந்தாய், நீ வளரும் தரு. தளிர்த்து மலர்ந்து, காய்த்து, பழுத்து பாக்கிய போகங்களின் சிறப்பை நுகர வேண்டியவள். எதற்காகப் பொய் சொல்கிறாய். உன் சமூகத்தவர்களிடம், உன் சகோதரர்களிடம் உன்னை நீயே ஏன் பொய் சொல்லி மாய்த்துக் கொள்கிறாய்? உன் கர்ப்பத்திலிருக்கும் அந்தச் சிசு உன்னைப் போன்ற மேம்பாடுடைய ஒற்றுமையுள்ள சிசுவாய்........."

"வேண்டாமப்பா! என்னுடன் என் கர்ப்பச் சிசுவும் வரட்டும். தன்னலமும், அசுரத்தனமும் அக்கிரமமும், காமக்ரோதமும் நிறைந்த இந்தக் கல்நெஞ்சம் படைத்த பூவுலகில் அந்தப் புது மலர் மலர வேண்டாம். கருகி, காலன் வீட்டு வாசலில் மிதிபடட்டும். ஆனந்தமாய்ப் பார்த்து மகிழ்கிறேன்" என்றாள் குரல் தழுதழுக்க.

அக்பரின் மனம்கூட அவள் வீரச் சொற்கதிர்களால் தாக்கப்பட்டுச் சற்றுத் தடமாடியது. அவன் கீழ் வேலை செய்யும் மற்றவர்கள் அவன் கட்டளையை எதிர்பார்த்து நின்றனர்.

சிறிது நேரத்தில் அவன் மனிதத் தன்மை மின்னல் மறைந்து, அரக்க அந்தகாரம் அவனை ஆட்கொண்டது. பற்களை நற நற வென்று கடித்தபடி "இருவரும் நாடகமாடுகிறீர்களா? அடே ஹுசேன், கிழவனை ஒரு கை பாரடா! காதர், இவளை வந்து பிடித்துக் கொள்ளடா! காஸிம்! வண்டியில் இன்னும் யார் இருக்கிறார்களென்று பார்! ஏ கள்ளி! உன் பெயரென்ன?"

"ஜானகி" என்றாள் தைரியமாய் ஜானி.

"குழந்தாய், பொய் சொல்லாதே அம்மா! இதனால் லாபமில்லை. நானோ இறக்கப்போகிறேன்" என்று அனுதாபமாய்ச் சொல்லியபடியே ஹரநாத் அக்பரின் புறம் திரும்பி, "நான் சொல்லுவதை நம்பினால் நம்பு. இல்லாவிட்டால் விதிபோல் நடக்கிறது. எங்கள் சமுதாயத்தில் பொய்க்கும், விதிக்கும் அஞ்சுவதுபோல் வேறெதற்கும் அஞ்சோம். அதிலும் மரணத்தறுவாயில் பொய் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் நாக்கு மறியல் செய்யும். அந்தப் பெண் உண்மையில் என் பெண்ணல்ல. காஜி......என் அத்தியந்த நண்பனின் நாட்டுப்பெண். அவள் மாமனார் அவளை என்னிடம் அனுப்பி, என்னைப் பத்திரமாய் அவள் பிறந்தகம் சேர்க்கச்சொன்னா

ராம். நீ அவளை அவள் பிறந்தகம் சேர்த்து விடப்பா! ஹமீதின் அன்பு மனைவி ஜானிபீகம் அவள்; ஜானகியல்ல'' என்றார். அவர் சொல்வது முடிவதற்குள் ஹரநாதின் முதுகு தோல் உரிந்து விட்டது.

ஜானியால் பார்க்கமுடியவில்லை. அப்பா! என்று அவர் முதுகின்மேல் குப்புறச் சாய்ந்தாள். அரக்கன் ஹுசேனின் சாட்டை அவள் முதுகைப் பதம் பார்த்தது. அவள் நகைத்தாள்.

"அவ்வளவு இனிப்பாகவா இருக்கிறது?'' என்று காதர் கையிலிருந்த கத்தியை ஓங்கினான்.

"ஆம், தந்தையின்மேல் அந்த இளம் சாட்டையை வீசினால்.........அதன் இன்ப உணர்ச்சி அக்கிழச் சரீரத்திற்கு என்ன தெரியும். ஹா! ஹா!! வெகு இனிமையாயிருக்கிறது'' என்றாள் நகைத்துக்கொண்டே. அவள் அரக்கச் சிரிப்பு அந்த அந்தகாரத்தையும் நடுக்குவித்தது.

அதற்குள் "துரோகி! என் கண்முன் கர்ப்பிணியின் கொலையா?'' என்று முன்னுக்குப் பாய்ந்தார் ஹரநாத். காதரின் கையிலிருந்த கத்தி ஹரநாதின் ஹ்ருதயத்தை ஆழம் பார்த்தது. தரையில் மடாரென்று சாய்ந்தார். அப்பொழுதும் ஜானி! "உண்மையைச் சொல்லி உன் வீட்டிற்குச் செல்'' என்று அன்புடன் சொன்னார்.

"உங்களுக்கு இதொரு விளையாட்டாக இருக்கிறதா? உன் திறமையான விளையாட்டிற்கேற்ற பரிசை அளிக்க வேண்டியதுதான்'' என்று ஹுசேன் தன் வலிவு முழுவதையும் உபயோகித்து வீசினான் சாட்டையால். "அப்பா! இந்த அதமர்களின் சகோதரியாய் உயிர்வாழ்ந்து முஸ்லீம்களின் மூர்க்கத் தனத்தில் முறுவலித்துக்கொண்டிருப்பதைவிட ஹிந்து தந்தையின் பெண்ணாகப் பெருமையுடன் இறந்து இன்புறுவேன்'' என்று சொல்லி வண்டிச் சக்கரத்தின் மேல் சாய்ந்தாள். சக்கரத்தைப் பிணைத்திருந்த இருசல் ஆணி அவள் இடையில் குத்தியது, "அம்மா!'' என்றலறினாள்.

அதே சமயம் வண்டிக்குள் கிடத்தப்பட்டிருந்த ஹமீதின் ரத்தம் வழிந்துகொண்டிருந்த உடலைப் பார்த்து வீரிட்டான் காஸிம். தங்களிடம் சிக்குண்ட இரு ஜீவன்களும் இடுப்பொடிந்து கிடப்பதைப் பார்க்க மூர்க்கர்கள் காஸிமிடம் ஓடினார்கள். காஸிம் கண்களில் பயம் தோன்ற ஹமீதின் முகத்தில் டார்ச்சை வீசிப் பார்த்தபடியே நின்றிருந்தான் கற்சிலைபோல. அக்பரின் மனமும், ஹமீதின் மனமும் போட்டியிட்டுக்கொண்டு அடித்துக்கொண்டன.

அச்சமயம் ஜானியின் மெல்லிய குரல் கேட்டது. காதர் அவளருகில் குனிந்து நின்றான். அனைவரும் ஓடி வந்தனர். "அப்ப வின் அருகில் என்னையும் புதைத்துவ உங்கள் சகோதரர்......அல்ல......அப்ப சொன்னாலும் மகாபாவம், மகம்மதுவி தூய சொற்களைக் கறைப்படுத்தியவள வேன், என் கணவர், ஒற்றுமையும், து மையும், நேர்மையும் ஒருங்கே பு திருந்த புனிதச் சடலம் வண்டியிலிருக்கிற அவரையும் என் அருகில் சமாதி செய் விட்டு, என் மாமனாரிடம் சென்று......ஆம் காஜியிடம் போய் நீங்கள் உங்கள் மரு ளிடம் ஒப்படைத்த அவள் சகோ களைப் பத்திரமாய் அவர்கள் இல் சேர்த்தாள். ஆனால் அவளை அவ அரக்க சகோதரர்கள் அடித்துக் கொன் னர். அவள் சமரஸமும் சாந்தியும் நில இடத்திற்கு அவள் தந்தை ஹரநாத்துடனு அன்புக் கணவன் ஹமீதுடனும் ஆனந்தமாய் அமரஉலகம் சென்றாள். இந்த "மனமகிழ்ச்சி'' தரும் நற்செய்தியைச் சொல்லும் பாக்கியத்தை எங்களுக்களித்து உங்கள் ஜானிபீகம் உள்ளப் பூரிப்புடன் சென்றாள். உலகத்தில் நடக்கும் இந்த உதவாக்கரை மத கலகத்தையும், நாட்டின் பிரிவால் ஏற்படும் *நமர்களின் தாண்டவத்தையும் பார்க்காமல் போகும் பாக்கியம் கிடைத்ததற்கு அந்தப் பரந்தாமனைப் போற்றுகிறேன் என்று சொல்'' என்று, ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

அரக்ககுணம் படைத்த அந்த அதமர்களின் மனதிலும் அன்பொளி வீசியது. அக்பர் ஓடி ஹமீதின் சடலத்தை அவளருகில் கொண்டு வந்து கிடத்தினான். காஸிம் ஹரநாதை மெல்ல எடுத்து வந்து அவள் அருகில் மற்றொருபுறம் படுக்க வைத்தான். அப்பொழுதும் அவர் வாய் "ஜானி, பொய் சொல்லாதே!'' என்று வெகு நிதானமாய்ச் சொல்லியது. அவள் மட்டற்ற "மனமகிழ்ச்சியுடன்'' அப்பா! மரணத் தறுவாயில் உண்மையை உரைக்கும் உத்தம வம்சப் பெண்ணாகவே உங்களுடன் வருகிறேன். அன்று ராஜபத்தினிகள் வந்ததுபோல் ஹிந்து தர்மத்தின்படி என் காதலனுடனே உங்கள் வழியைப்பின்பற்ற உங்களுடன் வருகிறேன். சர்வ மத தருக்களும் ஒன்றாய் வளர்ந்து வனப்புடன் மிளிரும் நம் இந்தியப் பூங்காவில் தோன்றியுள்ள வேர்க்கல்லிகள் சீக்கிரம் நாசமாகி மனமகிழ்ச்சி ஏற்படும் நற்காலம் சீக்கிரம் ஏற்படட்டும்'' என்று சொல்லியபடியே இறைவனிடம் சென்றாள்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Raugaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

198057

திரையிடத்தயார்!
கதி பிக்சர்ஸ் &
டார் கம்பைன்ஸ் தயாரித்த
ம்சாரநௌகா
அல்லது வாழ்க்கை படகு
ரேமாவதி · B.R.பந்துலு · T.R.ராமச்சந்திரன்...
ஸூர்யகுமாரி · M.J.ஆண்டாள் · R.கிருஷ்ணமூர்த்தி · T.K.உபேந்திரா
கதை, டைரக்ஷன்
H.L.N.சிம்ஹா
ஸ்டுடியோ
ப்ரகதி
சென்னை, வட & தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லா
& பாண்டிச்சேரி: நேஷனல் பிக்சர்ஸ், வேலூர்
இதர பிரதேசங்களுக்கு.... ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெ
உட்ஸ் ரோட்.... மதரா

Regd. No. M. 4405 CAU

டி. எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ!

T. S. R. & Co.

கும்பகோணம்.